# இளந்தமிழ

ஆசிரியர்:
விஞர் நாரா நாச்சியப்பன்



A83
168

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# இளந்தமிழன்


ஆசிரியர் : கவிஞர் நாரா நாச்சியப்பன்

மலர் 1. அக்டோபர் 1972 இதழ் 1.


## தமிழ்த்தாய் வணக்கம்

நீராருங் கடலுடுத்த
நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத்
திகழ்பரத கண்டமிதில்
தக்கசிறு பிறைநுதலும்
தரித்தநறும் திலகமுமே
தெக்கணமும் அதிற்சிறந்த
திராவிடநற் றிருநாடும்
அத்திலக வாசனைபோல்
அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க
இருந்த பெருந் தமிழணங்கே
உன்
சீரிளமைத் திறம்வியந்து
செயல்மறந்து வாழ்த்துதுமே!

—மனோன்மணீயம்

## தனியிதழ் விலை ஒரு ரூபாய்


ஆண்டுக் கட்டணம் ரூ. 12/

6 மாதக் கட்டணம் ரூ. 6/-

முகவரி :

202, ஜானி ஜான் கான் தெரு,
சென்னை-14.


## விருந்து படைப்போர்:


கவிஞர் மா. செல்வராசன்
மாண்புமிகு ச. இராமச்சந்திரன்
சிலம்புச் செல்வர்
பேராசிரியர் நா. பாண்டுரங்கன்
துணைப்பேராசிரியர் இ. சு. முத்துசாமி
த. புருஷோத்தமன்
கவிஞர் கு. சா. கி.
பாவேந்தர் பாரதிதாசன்
நாகர்கோயில் கிருஷ்ணன்
மின்னூர் சீனிவாசன்
அகிலன்
எழில் முதல்வன்
இளமைப் பித்தன்
நாமக்கல் கவிஞர்
வேதாசலம்
வேலப்பன்
இலக்குமி
தங்கவயல் லோகிதாசன்
பன்மொழிப் புலவர்
செங்குட்டுவன்
பொன்னம்மா
பகவான் இராமகிருஷ்ணர்
வித்தகன்
நாரா நாச்சியப்பன்


## [illegible]ஞர் அண்ணா பிறந்த நாள் வெளியீடு



*எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்*
*மங்காத தமிழென்று சங்கே முழங்கு!*

*—பாவேந்தர் பாரதிதாசன்*

# இளந்தமிழன் எழுந்து விட்டான்!

இளந்தமிழன் எழுந்துவிட்டான்!

உதயசூரியன் உதித்தது போல் ஒளி பெருகக் கதிர் விரிய உலகெங்கும் எழுச்சிகாண இதயக் கமலங்கள் விரிய ஏற்றமிகு தமிழிசை பாடிக்கொண்டு இளந்தமிழன் எழுந்து விட்டான்.

தமிழ் நாட்டுக்குத் தமிழ்நாடு என்று பெயர் வைத்த தகைசால் பெருந்தகையாம் அண்ணாவின் பிறந்த நாளிலே மொழியுணர்வோடும் நாட்டுணர்வோடும் எழில் பெருகத் திருப்பெருக ஏற்றத்தோடும் புதுத் தோற்றத்தோடும் இளந்தமிழன் எழுந்துவிட்டான்.

தமிழ்பாடித் தமிழ்பாடிச் செம்மாந்த இதயங்கொண்டு தமிழகத்து அரியணையில் வீற்றிருக்கும் சிங்கத் தமிழ் மறவர் தங்கக் குணம் படைத்த கலைஞர் திருக்கைகளால் வெளியிடப் பெறும் பேறு பெற்று சீருஞ்சிறப்போங்கத் திருவும் மணங்கமழ இளந்தமிழன் எழுந்து விட்டான்!

தமிழாய்ந்த தமிழன்தான் தமிழ்நாட்டின் முதலமைச்சாய் வருதல் வேண்டும் என்று பாவேந்தர் கண்ட கனவு நனவாகி நிகழ்ந்துவரும் நல்ல நாட்களிலே,

எங்கும் தமிழ், எதிலும் தமிழ், எல்லாம் தமிழ் என்ற உணர்ச்சி வெள்ளம் கரை புரண்டோடும் உற்சாகமான நேரத்திலே,

தமிழக அரசின் தலைமைச் செயலகத்திலும், பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் எங்கும் தமிழ்மொழி முதலிடம் ஏற்றுவரும் எழுச்சிமிக்க காலத்திலே,

இளந்தமிழன் தமிழ்ப்பணி செய்ய முன்வந்திருக்கிருன்.

இளந்தமிழன் பணி எத்தகையதாய் இருக்கும்? எத்தகையதாய் இருக்க வேண்டும்?

இன்று போல் தமிழ் எழுச்சி பெற்றிருந்த இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்ஞல் மூவேந்தர் ஆண்ட காலத்தில் முத்தமிழ்ப் புலவர்களும் கூடிச் சங்கம் வைத்துத் தமிழ் இலக்கியத்தை சங்கப் பலகையில் வைத்து ஆராய்ந்து முறையாக அரங்கேற்றி வெளியிட்டது போல், அவ்வாறு வெளியிட்டபோது, தமிழ் மரபு காத்து, தமிழ்ப் பண்பாடு காத்து வெளிவரும் நூல்கள் தமிழ் ஏற்றத்தை நாற்றிசையும் போற்றும்படியாக அமையும்படி விழிப்போடு பார்த்துக்கொண்டார்களே அது போல ஒரு விழிப்புணர்ச்சியைத் தூண்டுவதாக அமையும் இளந்தமிழனின் தமிழ்ப்பணி.

தமிழ் இலக்கியக் கட்டுரைகள் மட்டுமன்றி, புத்திலக்கியங்களான கவிதைகள், சிறு கதைகள், நெடுங்கதைகள் ஆயவற்றையும், அறிவியல் துறைசார்ந்த உயிரியல், விலங்கியல், மருத்துவ இயல், மனோதத்துவ இயல், பௌதிகம், இரசாயனம் போன்ற பல துறையறிஞர்களையும் அணுகி எளிய தமிழில் எல்லோர்க்கும் விளங்கும்படி எழுதச் செய்து வெளியிடுவதும் இளந்தமிழனின் பணியாய் அமையும்.

இளைஞர்க்குப் பல்துறைக் கல்வியிலும் ஓர் ஈடுபாடு உண்டாவதற்கு ஒரு தூண்டுகோலாய் இளந்தமிழன் இருப்பான்.

புத்தகங்கள், பத்திரிகைகள், நாடக மேடைகள், திரைப் படங்கள், பொது நிகழ்ச்சிகள், வாஞெலி முதலிய இலக்கியத் துறை சார்ந்த எல்லா இடங்களிலும் தமிழ்ப் பண்பாடு காத்துத் தமிழ்மொழியுணர்வு ஓங்கிட இளந்தமிழன் பணி புரிவான்.

இளந்தமிழன் பணி சிறக்க தமிழ்ப் பெருங்குடி மக்கள் அனைவரும் இளந்தமிழனுக்குச் செய்யத்தக்க உதவிகள் அனைத்தும் செய்து—தமிழ்ப் பெருமை உலகமெங்கும் பரவ—தமிழ்ப் பண்பாடு ஓங்க ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்று வேண்டுகின்ருேம்.

# வாழ்த்துரைகள்

## மாண்புமிகு தமிழக முதல்வர் தமிழவேள் டாக்டர் கலைஞர்

மொழி பலவும் பெற்றெடுத்தும் தமிழ்த்தாய் சற்றும் முதிராத "இளங்கன்னி"யாகவே திகழ்கின்றாள்; "தமிழ் எங்கள் இளமைக்குப் பால்" என்றார் பாவேந்தர். அத்தகைய தமிழின்பத்தை மாந்திப் பயன் பெறுவோர் என்றும் இளந்தமிழராகவே நின்று நிலவுவர் என்பதில் ஐயமில்லை, பாவேந்தர் பரம்பரைக் கவிஞர்களில் ஒருவரான கவிஞர் நாச்சியப்பன் "இளந்தமிழன்" என்னும் பெயரில் இலக்கியத் திங்கள் இதழ் ஒன்றினைத் தமிழினத்தின் வாழ்வு நலங்காத்துத் தமிழுக்குப் பெருமை தேடித் தந்த பேரறிஞர் அண்ணாவின் பிறந்த நாளில் வெளிக்கொணர இருப்பதறிந்து மகிழ்ச்சியடைகிறேன். "இளந்தமிழன்" தமிழ் இலக்கிய வானில் ஒரு முழுநிலவாகத் தவழ்ந்து ஒளிதர வேண்டும் என்று விரும்பி மனமார வாழ்த்துகிறேன்.

4—9—72 **மு. கருணாநிதி**

## மாண்புமிகு பொது நல்வாழ்வுத்துறை அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன்

அன்புடையீர்!

வணக்கம். "இளந்தமிழன்" என்னும் இலக்கிய ஏடு மலர்வது கேட்டு மகிழ்கிறேன். ஒரு நாட்டு மக்கள், கருத்தாலும் உள்ளத்தோடு அறிவாற்றல் பெற்று, பண்பாட்டில் சிறந்து நாகரிக நல்வாழ்வு நடாத்த, இலக்கிய ஆர்வம் இன்றியமையாததாகும்.

கவிஞர் நாரா நாச்சியப்பன் அவர்களின் கவிதைத் திறனும், மொழிப்பற்றும், இலக்கியத் தேர்ச்சியும் நாடறியும். அவரது பல்மையால் பொலியவிருக்கும் "இளந்தமிழன்" வெற்றிநடை போடுவான் என்பதில் ஐயமில்லை.

வாழுந் தமிழர்க்குத் துணையாகி வரும் தலைமுறைக்கு வழிகாட்டி, வளமிகு தமிழ்நாட்டை உருவாக்கிய தன்னிகரற்ற தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த நாளில் வெளிவரும்— "இளந்தமிழன்" இதழுக்குஎனது உளமார்ந்த நல்வாழ்த்துக்கள் உரித்தாகும்! வாழ்க தமிழ்! வெல்க இளந்தமிழன்!

5—9—72 அன்பன்,

**க. அன்பழகன்**

## மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் க. இராசாராம்

அன்புடையீர்,

தாங்கள் "இளந்தமிழன்" எனும் பெயரில் தமிழ் இலக்கியத் திங்கள் இதழ் ஒன்றை பேரறிஞர் அண்ணா பிறந்த நாளாகிய செப்டம்பர்த் திங்களில் வெளியிட இருப்பது கண்டு மெத்த மகிழ்ச்சி.

தங்கள் இதழ், தமிழ் மக்களிடத்து, மொழியுணர்வும், நாட்டுப் பற்றும், தமிழ் இலக்கிய ஈடுபாடும் ஏற்பட பாடுபடும் என்று நம்புகிறேன். தாங்கள் நடத்தும் ஏடு சிறந்த இலக்கியத் தரமுள்ளதாக அமையும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

தங்கள் "இளந்தமிழன்" தமிழ்மணம் பரப்பும் முல்லைப் பூவாக, தமிழ்மொழியின் ஏற்றம் பாடும் மகர யாழாக, தமிழ் இலக்கியத்தின் சுவை பாடும் கருவியாக, தமிழர் நலங்காக்கும் சிறந்த ஏடாக வெற்றி நடைபோட வேண்டி வாழ்த்துகிறேன்.

முகாம்: காங்கயம் 3-9-72 அன்பன்,

**க. இராசாராம்**

## மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் ச. இராமச்சந்திரன்

அன்புடையீர்,

தாங்கள் 'இளந்தமிழன்' என்னும் இலக்கிய இதழ் நடத்தவிருப்பது அறிந்து மகிழ்கிறேன். தரமுள்ள இலக்கிய ஏடு ஒன்று தமிழ்நாட்டில் இல்லாத குறையைப் போக்க இளந்தமிழன் வருவது இன்றியமையாத தாகும்.

தமிழ் இலக்கியத் துறையில் புதிய பாணியை வகுத்துத் தந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த நாளில் இளந்தமிழன் வெளிவருவது, மிகப் பொருத்தமாகும்.

இலக்கியத் தரமுள்ளதாக, எல்லாரும் படிக்கத் தக்கதாக அறியாமையை அகற்றுவதாக பேரறிஞர் அண்ணாவின் இலக்கியப் பணியைத் தொடர்ந்து நடத்துவதாக விளங்கவேண்டும் என்று இளந்தமிழனை வரவேற்று வாழ்த்துகிறேன்.

**ச. இராமச்சந்திரன்**

★

அன்புடையீர்,

வணக்கம். நலம். நீண்டகால இடைவெளி. நினைவு வட்டத்துக்குள் நெஞ்சில் நிழல். பழைய பொன்னியின் நிழலில் நாம் வாழ்ந்த காலங்கள் நீண்ட இடைவெளி ஏற்பட்டாலும் நினைவு மாறவில்லை. தங்கள் தமிழ் இன்னும் இனிக்கிறது.

தங்கள்,

**இளமைப்பித்தன்**
புதுக்கோட்டை

அன்புடையீர்,

வணக்கம். நலம். தாங்கள் அனுப்பிய 'நற்செய்தி' கிடைத்தது. நன்றி. நீண்ட நாளைய கனவு நனவாகுவது குறித்து மகிழ்ச்சி. கனவு பலித்தது. நினைவு செயலாகிறது. எண்ணிய எண்ணியாங்கு எய்த என் இதயம் நிறைந்த வாழ்த்துக்கள். தங்கள் முயற்சி வாழ்க வளர்க வெல்க. இளந்தமிழன் பல்லாற்றுனும் வளர்ந்து சிறந்து வலிவும் பொலிவும் பெற எங்களாளான எல்லா முயற்சிகளையும் செய்கிறோம் என்பதற்கு உறுதியளிக்கின்றேன்.

தங்கள்,

**ச மெய்யப்பன்**
தமிழ் விரிவுரையாளர்
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

விழி யற்றவர் விழியாகிட
ஒளியாய் நடைபயில்வாய்
விளையற்றவர் உரைமங்கிட
வேண்டும் வளம் குவிப்பாய்
மொழிகற்றவர் அரும்பாட்டினை
முறையோடிவண் உரைப்பாய்
முத்துத் தமிழ் அறிஞர் நெறி
மக்கள் உளம்பதிப்பாய்!

**புலவர் எழில்மாறன்**
சென்னை-24.

மதுவருகை வண்டுக்கு
விருந்து வைத்து
மயங்கவைக்கும் கீதத்தைப்
பாட வைக்கும்!
இதைப்போன்றே இளந்தமிழா
நமது நாட்டின்
ஏற்றத்தை உன்வருகை
முழங்கிடட்டும்!

**துறவி**
சென்னை-12



அண்ணனே எங்கள் கண்ணன் என்பேன்—அவர்
அன்பு மொழியே வேத மென்பேன்—புது
கீதை யென்பேன்—திருப் பாதையென்பேன்!
அண்ணனே எங்கள் கண்ணன் என்பேன்!

அண்ணனே எங்கள் கண்ணன் என்பேன்!

ஏழை உழைப்பவர் ஏற்றம் பெறவே—அவர்
இசைத்த தெலாம்புது மறைக ளன்றோ!
கோழை கிளர்ந்தெழத் தூண்டிய தெல்லாம்—அவர்
கூறிய செழுஞ்சொல் கீதை யன்றோ!

அண்ணனே எங்கள் கண்ணன் என்பேன்!

# அண்ணன் எங்கள் கண்ணன்

கள்ளப் பார்வையும் குறுகுறு நகையும்—அந்தக்
கண்ணனின் கவர்ச்சிச் சொத்துக ளென்பார்
உள்ளங் கொள்ளைகொள் செந்தமிழ் உரையும்
—நெஞ்சில்
உண்மையும் எங்கள் அண்ணனின் சொத்தாம்!
அண்ணனே எங்கள் கண்ணன் என்பேன்!

மாயமோ சித்தோ மக்களைக் கவர்ந்தார்—திரு
வாயினாற் றமிழால் ஆட்சியுங் கவர்ந்தார்
காயமோ போரோ விளைந்திடாமலே—அரி
யணையிலே தமிழை அமர்ந்திடச் செய்தார்.
அண்ணனே எங்கள் கண்ணன் என்பேன்!

அன்பு வழியிலே அடக்கத் துடனே—மிக
அமைதி யாய்ப்பணி செய்திடும் படிக்கே
தன்பின் இன்பத் தமிழகம் காக்கத்
தம்பியர் படையைத் தந்தவ ரன்றோ!
அண்ணனே எங்கள் கண்ணன் என்பேன்!

ஆகுலம் காத்தான் அந்தநாள் கண்ணன்—எங்கள்
அன்னை நாடிதனைக் காத்தார் அண்ணன்
மாகுலந் தமிழினம் வாழ்ந்திட வே தன்—வாழ்
நாளெலாம் உழைத்த நல்லவர் அண்ணன்.
அண்ணனே எங்கள் கண்ணன் என்பேன்!

நாரா நாச்சியப்பன்

# அருந்தமிழ்ச் செல்வன்

அஞ்சுகச் செல்வ னென்பார்—கிளியே
அருந்தமிழ்ச் செல்வ னடி!
நெஞ்சில் கருணை யுள்ளான்—தமிழ்
நிதியம் அவன்தா னடி!

 அஞ்சுகச் செல்வ னென்பார்—கிளியே
 அருந்தமிழ்ச் செல்வ னடி!

அண்ணன் வழியில் வந்தான்—தமிழ்
அன்பில் சிறந்தானடி
எண்ணும் புதுமை யெல்லாம்—மிக
எளிதில் வடிப்பா னடி!

 அஞ்சுகச் செல்வ னென்பார்—கிளியே
 அருந்தமிழ்ச் செல்வ னடி!

இலக்கிய ஆர்வ முள்ளான்—கவி
இன்பங் கொடுப்பானடி
மலர்க்குவை சூட்டி இந்த—முழு
மாநிலம் போற்று தடி!

 அஞ்சுகச் செல்வ னென்பார்—கிளியே
 அருந்தமிழ்ச் செல்வ னடி!



உலகக் கவிஞ னென்றே—புகழ்
ஒன்றிச் சிறந்தானடி
பலகற் றோர்க ளெல்லாம்—அவன்
பாவைப் புகழ்ந்தா ரடி!

அஞ்சுகச் செல்வ னென்பார்—கிளியே
அருந்தமிழ்ச் செல்வ னடி!


நாடகம் ஆக்கி நிற்பான்—அதில்
நடித்துப் பெருமை கொள்வான்
ஆடகப் பொன்னி கர்த்தான் கலை
ஆர்வம் அளப்ப துண்டோ!

அஞ்சுகச் செல்வ னென்பார்—கிளியே
அருந்தமிழ்ச் செல்வ னடி!

**நாரா நாச்சியப்பன்**

# வா! வா!

இளம்பனை நுங்கு போன்ற
ஈரிதழ் திறந்து கண்ணே
வளம்படு வாழைக் கன்றின்
வழவழ கைகால் ஆட்டிக்



குளம்படு பூமுகத்தைக்
குறுகுறு கண்ணால் தூக்கி
நிலம்பட வா, வா! உன்னை
நீட்டியே அணைத்துக்
கொள்வேன்!

பூவிரல் தரையில் ஊன்றிப்
புதுப்பழக் கன்னம் மின்ன
மேவிடும் பூஞ்சிரிப்பை
வெடுக்கென அவிழ்த்து விட்டுக்
கூவிடும் குரலால் கொள்ளாக்
குறிப்பினை உணர்த்திக் காட்டித்
தாவியே வா, வா! உன்னைத்
தாங்கியே அணைத்துக்
கொள்வேன்!

ஓவியம் சிரிப்பதைப் போல்
ஓசையே இல்லாமல்நீ
காவியச் சிரிப்பைச் சிந்திக்
கைவிரல் கொட்டுகின்றாய்!
தூவிய சொற்குழம்பில்
தூக்கிய கவிதை என்னக்
கூவியே வா, வா! நெஞ்சம்
குளிர்ந்திட அணைத்துக்
கொள்வேன்!

மணித்தமிழ் மகனே! ஏனோ
மருண்டுநீ அழுகின்றாயோ?
இனித்தமிழ் பேசப் போகும்
இயற்றமிழ்க் கவியே! உன்றன்
தனித்தமிழ் நாவில் நல்ல
தாய்த்தமிழ் மழலை கூட்டி
கனித்தமிழ்க் கண்ணாய் வா, வா!
கவிதையாய் அணைத்துக்
கொள்வேன்!

கவிஞர்
மா. செல்வராசன்

# அண்ணா இல்லா திருந்தால்


**மாண்புமிகு ச. இராமச்சந்திரன்,**
**போக்குவரத்து அமைச்சர்.**



அண்ணா அவர்கள் நமது நாட்டின் முன்னேற்றத்திற்கும், தமிழர் தம் முன்னேற்றத்திற்கும் தம்மை அர்ப்பணித்து கொண்டார்கள். அந்தப் பணிகட்கு நம்மை நாம் அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும்.

அண்ணா அவர்கள் பட்டி—தொட்டிகளிலும், நாடு—நகரங்களிலும் சுற்றிச் சுற்றி பிரச்சாரம் செய்தார்கள், மக்களோடு தொடர்பு கொண்டார்கள். சமூகத்திலே பின் தங்கிய மக்கள், உழைத்தால்தான் பிழைத்திட இயலும் என்ற நிலையில் உள்ளவர்கள் அண்ணாவைப் பின் பற்றுகிறார்கள் என்றால் அவரது சிறப்பினை நீங்களெல்லாம் புரிந்து கொள்ள வேண்டும்.

2000 ஆண்டுகட்குப் பின்னர் கிடைத்திட்ட தனிப் பெருந் தலைவர் அண்ணா.



அண்ணாவை காஞ்சியில் பிறந்த தனிமனிதர் என்று நாம் எண்ணவில்லை நம்மோடு உள்ள ஒருவர் என்ற எண்ணத்தில் வாழ்ந்தோம்.

அண்ணா இல்லையென்றால் - அவர் இந் நாட்டில் பிறந்திருக்கவில்லையென்றால்..

சாதி உணர்வு உச்சகட்டத்தில் இருந்திருக்கும்.

இந்தி ஆட்சி செலுத்திக் கொண்டிருக்கும்.


தமிழ் நாட்டில் தமிழ் இருந்திருக்காது.

தன்மான உணர்வு இல்லாதிருந்திருக்கும்.

தமிழக அரசு ஏற்பட்டிருக்காது.

தமிழன் உலகத்தின் எந்த மூலையிலிருந்தாலும் அண்ணாவை மறந்திட இயலாது. உலகத்தமிழர்களை எல்லாம் ஒன்றாகக் கூட்டியவர் அண்ணாதான். "யாதும் ஊரே யாவரும் கேளிர், தீதும் நன்றும் பிறர்தர வாரா' என்ற புறநானூற்று கூற்றினை அண்ணா நமக்கு எடுத்துச் சொன்னார்-உலகத் தமிழ் மாநாட்டின் போது கடற்கரையிலே கூடியிருந்த இலட்சக்கணக்கான தமிழர்கட்கு சொன்னார்கள். நாம் ஒற்றுமை யாக இருந்தால் நம்மை யாரும் ஒன்றும் செய்திட இயலாது. நாம் தமிழர்களாக வாழ வேண்டும். அந்த வகையில் செய்ய வேண்டிய பணி இன்னும் செய்து முடிக்கப்பட வேண்டிய பணியாகவே உள்ளது.

# இந்திய வரலாறு



இந்திய நாடு விடுதலை அடைந்து இருபத்தைந்து ஆண்டுகள் முடிந்துவிட்டன. கால் நூற்றாண்டு வெள்ளி விழாவினை நாடெங்கிலும் சிறப்பாகக் கொண்டாடியிருக்கின்றோம். இத்தனை ஆண்டுக் காலமாகியும் இன்னமும் இந்திய வரலாற்றினை முறையாகத் தொகுத்து வெளியிடவில்லை. நமது வரலாற்றினை அந்நியர்கள் மூலம் தான் தெரிந்து கொள்ள முடிந்தது. வெள்ளையர்களின் ஏகாதிபத்தியக் கண்ணோட்டத்துடன் நமது வரலாறுகள் உருவாகி இருக்கின்றன என்பதைப் பல உதாரணங்கள் மூலம் சுட்டிக் காட்டலாம்.

வெள்ளையர்கள் எழுதிய நூல்களில் குறுநில மன்னர்களைப் பாளையக்காரர்கள் என்றும் கட்டபொம்மனைக் கொள்ளைக்காரன் என்றும் குறிப்பிட்டு நஞ்சுடைய விஷத்தைக் கக்கியிருக்கிறார்கள். இந்தச் செயல் நமது மனத்தைப் புண் படுத்துவதாக இருக்கிறது.

இப்படியெல்லாம் வெள்ளையர்கள் அவரவர் விருப்பத்திற்குத் தகுந்தபடி அவர்கள் கண்ணோட்டத்தில் எழுயிருக்கிறார்கள். பொதுவாக வரலாற்றினை அவர்கள் மறைத்துக் காட்டியிருக்கிறார்கள்.

தமிழகத்தில் இருக்கின்ற கோயில்கள் யார் காலத்தில் எப்போது யாரால் கட்டப்பட்டது என்ற உண்மை கூட நமக்குத் தெளிவாக இன்னமும் கிடைக்கவில்லை. நமது வரலாற்றினை வெள்ளையர்கள் திரித்துக் காட்டினார்கள். ஆனால் நம்மவர்களோ அதையும் மறுத்துக் காட்டினார்கள்.

இந்தியாவின்வரலாற்றினை ஆராயமுற்படும்போது மண்டலம்மண்டலமாக ஆராயப்படுவது நல்லது. அப்படி மண்டலம் மண்டலமாக ஆராய்ந்தால் உண்மை விவரம் ஆராய்ச்சியாளர்கட்குக் கிடைக்கும். அதன் பலன் நாட்டு மக்கட்கு உதவிகரமாக இருக்கும். சுதந்திரப் போராட்ட வரலாற்றினை எழுதுவதற்கு இந்தியப் பேரரசு முன்னைத் துணைக் குடியரசுத் தலைவர் டாக்டர் ராதா கிருஷ்ணன் தலைமையில் ஒரு குழுவை நியமித்ததோடு நின்று விட்டது.

அந்தக் குழு வரலாற்றினைப் பற்றிய தகவல்களை இதுவரை சேகரித்ததாகவோ அறிக்கை வெளியிட்டதாகவோ தெரியவில்லை. இனியாவது இந்திய வரலாற்றினை எழுதும் முயற்சியில் இந்தியப் பேரரசு ஈடுபடவேண்டும். வரலாற்றினை எழுதும்போது உண்மைகள் மறைக்கப்படலாகாது.

காங்கிரஸ் ஆட்சியாளர்கள் புரட்சி நூற்றாண்டுத் திரைப்படத்தினை 'முன்பு எடுத்து நாடு முழுவதும் திரையிட்டனர். அந்தத் திரைப்படத்தில் இந்தியாவின் நிலப்படம் பொதுப் படை

**சிலம்புச்செல்வர் ம. பொ. சிவஞானம்**

யாகக் காட்டப்பட்டதே தவிர அதன் மாநிலப் பிரிவுகள் குறிப் பிட்டுக் காட்டப்படவில்லை. உட் பிரிவுகளே இல்லாத நாடுபோல் இந்தியாவின் படம் இருந்தது. இப்படிப்பட்ட இருட்டடிப்பு இனி யாவது தவிர்க்கப் படவேண்டும்.

இந்திய சரித்திரததை எழுதும் போது மொழிவாரி மாநிலங்களைத் தனிக் கணக்கெடுத்து அதற்குத் தகுந்தபடி எழுத வேண்டும். தமிழ் நாட்டைப் பற்றி எழுத முன்வரு பவர்களும் மண்டலம் மண்டல மாக எழுதினால் தான் அது பயனுடையதாக இருக்கும். மண் டல ரீதியில் எழுதிடும்போது விருப்பு வெறுப்பின்றி எழுதிடல் வேண்டும். தங்களுடைய நாட் டின் சரித்திரத்தை எழுதும்போது கொஞ்சம் வர்ணனை இருக்கலாமே தவிர உண்மை மறைக்கப்படக் கூடாது.

கொங்கு நாடு, சேர, சோழ, பாண்டிய நாடு என்று தனித் தனியே பிரித்து ஆராய்ச்சி செய் கிறவர்கள்—வரலாற்றினை எழுது பவர்கள் இவற்றையெல்லாம் உணர்ந்து எழுத வேண்டும். புதைபொருள் ஆராய்ச்சி—தொல் பொருள் ஆராய்ச்சிகளில் ஈடுபடு வதில் அதிகத் தீவிரம் காட்ட வேண்டும். கால் நூற்றாண்டாகி யும் இந்திய வரலாற்றினை எழுத முற்படவில்லை.

நல்ல வேளையாக தமிழக முதல் வர் டாக்டர் கலைஞர் தமிழ்நாட் டின் வரலாற்றுச் சிறப்புக்கள்— வரலாற்றுச் சம்பவங்களை ஆராய்ந்து எழுதுவதற்கென ஒரு குழுவினை அமைந்திருப்பது பாராட்டுவதற்குரியது. அந்தக் குழு டாக்டர் மு. வரதராசனாரைத் தலைவராகக் கொண்டு செய லாற்றி வருகிறது.



தமிழுக்கும் தமிழினத் திற் கும் கலைஞர் ஆற்றி வரும் பணி மகத் தானது. தமி ழுக்கும் தமி ழர்களுக்கும் ஆக்கமும் ஊக்கமும் தரும் வகை யில் இந்தத் திட்டம் இருக் கிறது.

இதன் மூலம் நமது முதல் வர் புதிய சகாப்தத்தை உரு வாக்கி விட்டார்.

வரலாறு என்பது தேய்ந்து கொண்டுதான் இருக்கும். பாதம் படியாத ஒற்றையடிப் பாதையில் கால் வைத்துப் போகப் போக முள் குத்தத்தான் செய்யும். அதில் நடக்கும்போது முள் குத்தி ரத்தம் சொட்டத்தான் செய்யும். இருந்தாலும் துணிச்சலுடன் அந் தப் பாதையில் செல்ல வேண்டும். மறைந்த உண்மைகள் மக்கள் மன்றத்திற்கு வரும்போது மறுப் புக்கள் வரத்தான் செய்யும். அதைப்பற்றிக் கவலைக்கொள்ளா மல் இதுபோன்ற ஆராய்ச்சியில் இன்னும் தீவிரம் காட்ட வேண் டும்.

---

## அட்டைப் படம் :

வானழகா கதிரழகா

வண்ண மலரே

நானழகா நீயழகா

உண்மை புகலே!

# மூளைத் தோட்டம்

கற்கண்டு கரைந்து பயன் தருகிறது; கருங்கல்லோ கரையாமல் இருந்தே பயன் தருகிறது.

வழிக்கு ஒரு நோக்கமுண்டு; நோக்கத்துக்கோ பல வழிகள் உள்ளன.

ஒருநாள் உணவு மறுநாளுக்குப் பயன்படாமல் போய் விடுகின்றது. மொழிப்பற்றும் இதைப் போன்றதே. ஒரு தலை முறையின் மொழிப்பற்றுப் பலதலைமுறைக்குப் பயன்படுவதில்லை. உணவைப் போல் மொழிப்பற்றையும் புதிது புதிதாகச் சமைத்துக்கொள்ள வேண்டும்.

நெய்விளக்கின் ஒளியும் விளக்கெண்ணெய் விளக்கின் ஒளியும் ஒன்றே! நெய் விளக்கில் வீண் பெருமையும் அறிவின் சிறுமையும் உள்ளன!

உரிய சாவிதான் பூட்டைத் திறக்கும் என்பதில்லை; வேறு சாவியும் பூட்டைத் திறக்கிறது.

எல்லாம் தாங்கும் உலகத்தை எதுவும் தாங்குவதில்லை.

வெண்ணெய் உருகினால் நெய்யாகும்; நெய் உருகினால் வெண்ணெய் ஆகுமா? நெய் உருகினால் நெய்தான்!

ஆறு சென்றவழி அழியாவழி.

சோறு துணையில்லாமல் உள்ளே செல்லாது.

வானத்திலிருந்து தண்ணீர் வந்தாலும் மண்ணிலிருந்துதான் அதை நாம் எடுத்துக் கொள்ளுகிறோம்.

கோழி தோகை விரித்தாடுவதில்லை; ஆனால் வீடுகளில் எங்கும் தோகை விரித்தாடும் மயிலையல்ல — தோகை விரித்தாடாத கோழியையே வளர்க்கின்றனர்.


உலகம் வானவெளியில் பறக்கும் மண்பறவை!

இருளில் எரியும் விளக்கில், இருள் அழிவதுபோல் காணப்பட்டாலும் உண்மையில் விளக்கில் ஒளிதான் அழிந்துகொண்டிருக்கிறது.

நிழல் வாழ்வதற்கும் ஒளியே வேண்டும்!

அம்பின் உருவம் மாறிவிட்டது; ஆனால் அம்பின் உள்ளம் உலகில் அப்படியே இருக்கிறது.

“பசு சாதுவான மிருகம்” என்று பாராட்டும் போது அந்தப் பாராட்டின் அடிப்படையில் நம்



முடைய நன்மையே இருக்கிறது.

கட்டியிருக்கும் ஆடையைப் போல் கைவிடாமல் காக்கும் பண்பு தலைவனுக்கு இருக்க வேண்டும்!

ஏடு கிழிந்தாலும் எண்ணம் அழியாது!

விசிறிக்குப் புழுக்கம் ஏது?

அரசனுக்குத்தான் அச்சம் அதிகம்!

குடியரசுக்கு மட்டும் எதிர்க்கட்சி ஓர் அங்கமல்ல; ஒவ்வோர் உள்ளத்திலும் ஓர் எதிர்க்கட்சி அங்கமாக இருத்தல் வேண்டும்!

'உலகம் முன்னேறுகிறது' எனும் போது வெட்டவெளிகள் சுருங்கிக்கொண்டே வருகின்றன என்று உணர்தல் வேண்டும்.

வீணை, தொடக்கத்தில் ஒரு புதிய இசைக் கருவி. ஒவ்வொரு காலத்திலும் ஒரு புதிய இசைக் கருவி உருவாக வேண்டும்.


எரி நட்சத்திரம் எரியும் நட்சத்திரமன்று!

தோணி என்பது நீந்தும் பாலம்!

கடலால் நீர்வேட்கை தீராது; ஆனால் நீர் வேட்கை தீர்க்கும் ஆற்றுநீர் கடலிலிருந்தே கிடைக்கிறது!

பிணத்தை எரிப்பதும் புதைப்பதும் பிணத்தின் நன்மைக்காக அல்ல; நம்முடைய நன்மைக்காகவே!

## பேராசிரியர் கா. பாண்டுரங்கன் எம்.ஏ



குழந்தை பிறக்கும்போது மனிதன் திரும்பி வருகின்றான்; காய் மலரும்போது மரம் திரும்பி வருகின்றது; மழை வரும்போது ஆறு திரும்பி வருகின்றது; ஒன்றையே திரும்பத் திரும்பச் செய்வதுதான் வாழ்க்கை!

உலகத்தில் எழும் போர் உள்ளத்திலிருந்தே எழுகிறது!

ஓடும் ஆற்றுக்கு எப்போதும் நிகழ்காலம் உண்டு. ஆகையால் தான் அது முன்னேற்றத்தில் இருக்கிறது.

வரலாறு இறந்த காலத்தைக் காட்டுகிறது. விஞ்ஞானம் நிகழ் காலத்தைக் காட்டுகிறது; இலக்கியமும் மெய்ப் பொருளியலும் மூன்று காலமும் காட்டுகின்றன!

நிகழ்காலம் உண்ணுகின்ற உணவு; இறந்த காலம் எச்சில் இலை; எதிர்காலம் மாங்கொட்டை.

செயலாளி நிகழ்காலத்தில் வாழ்கின்றான்; முட்டாள் இறந்த காலத்தில் வாழ்கின்றான்; கையாலாகாதவன் எதிர்காலத்தில் வாழ்கின்றான். முட்டாளுக்கும் கையாலாகாதவனுக்கும் வாழ்க்கை எண்ணமாகவே இருக்கிறது!

இறந்த காலம்! இறந்த காலத்தை எண்ணுவதிலேயே காலம் கழிப்பது பிணத்தை வீட்டில் வைத்துக்கொண்டே இருப்பதுபோல் ஆகும்!

# குறட்பாயிரம்

வான்புகழ் வள்ளுவரது குறட்பாயிரத்தின்கண் முறையே, 1. கடவுள் வாழ்த்து, 2. வான் சிறப்பு, 3. நீத்தார் பெருமை, 4. அறன் வலியுறுத்தல் என்னும் நான்கு அதிகாரங்கள் உள்ளன. பாயிரத்தை வள்ளுவர் இயற்றினார் அல்லரெனக் கூறுவாரும் உளர். அன்னார் கூற்று,

'ஆயிர முகத்தா னகன்ற தாயினும்
பாயிர மல்லது பனுவ லன்று'

என்ற தமிழ் மரபினோடும்,

'ஆயிரத்து முந்நூற்று முப்ப தருங்குறளும்
பாயிரத்தி னோடு பகர்ந்ததற் பின்'

என்ற திருவள்ளுவ மாலைச் செய்யுளுடனும் மாறுபடுதலானும்; பாயிரக் கருத்துக்களுக்கும் நூற் கருத்துக்களுக்கும்சீரிய இயைபுகாணப் படுதலானும், பாயிரம் இயற்றியவர் வள்ளுவரே எனக் கொளல் பொருந்தும். தொல்காப்பிய மரபு பாடாண் திணையின் கண் கடவுள் வாழ்த் திணைப் பற்றிய மரபுகளைத் தொல்காப்பியர் பின்வருமாறு வகுத்துள்ளார்.

"கொடிநிலை, கந்தழி, வள்ளி என்ற
வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்
கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே"

[தொல். புறத். 33]

நச்சினார்க்கினியர் இந்நூற்பாவுக்கு உரைவகுக்குங்கால் கொடிநிலையை கதிரவன் என்றும், ஒருபற்றுக் கோடின்றி அருவாகித் தானே நிற்கும் தத்துவம் கடந்த பொருள் கந்தழிஎன்றும்,தண்கதிர் மண் புலமே (நிலவு) வள்ளி என்றும் நச்சினார்க்கினியர் முதலான உரை யாசிரியர் கொண்டனர்.

'தொல்காப்பிய பொருளாதார ஆராய்ச்சி' என்னும் நூலில் திரு மு. இராகவ ஐயங்கார் தொல் காப்பிய மரபினைக் குறட் பாயிரத் தோடு பொருத்திக் காட்டுகின்றார்.

துணைப் பேராசிரியர்

இ. சு. முத்துசாமி

# நான்கு பொருள்கள்

1. மலர் போன்ற கண்கள் மையினால் மேலும் அழகு பெறும்.
2. மிகுந்த இருளில் நிமிர்ந்து எரியும் விளக்குச் சுடர் நெய்யினால் மேலும் நன்கு எரியும்.
3. குருக்கத்தி மரத்தில் மழை பெய்ய வானம் இடிக்கும் போது புதிய இலைகள் தளிர்க்கும்.
4. நட்புறவு கொண்டோர்களுக்கு உதவுவதால் மேலோர்கள் மேலும் சிறப்படைவார்கள்.

---

மேற்காட்டிய நூற்பாவுள் 'ஒடு' என்பது உயர்பின் வரும் ஒருவினையொடு வந்தது என்றும், கடவுள் வாழ்த்தின் பின்னர் 'கொடிநிலை வாழ்த்து' வான்சிறப்பென்றும் 'கந்தழி' நீத்தார் பெருமையென்றும் 'வள்ளி' அறன் வலியுறுத்தலென்றும் கருதுகின்றார்.

ஐயரிதனார் இயற்றிய புறப்பொருள் வெண்பாமாலையில், கொடிநிலை, அரி, அயன், அரன் மூவர் கொடிகள் ஒன்றென்றும், கந்தழி திருமால் சோககரத்தை அழித்த வெற்றி என்றும் வள்ளி முருகக்கடவுள் பொருட்டு மகளிர் வெறியாடல் என்றும் கூறப்பட்டுள்ளது. டாக்டர் மொ. அ. துரைஅரங்கசாமி, 'அன்புநெறியே தமிழர் நெறி' என்னும் நூலில்

'கோழி ஓங்கிய வென்றடு விறற் கொடி'

என்னும் முருகாற்றுப்படைப்பகுதியுடன் ஒப்பிட்டு தொல்காப்பிய மரபுவழி நக்கீரர் கொடியின் சிறப்பைக் கூறினாரென்பர்.

**சிலப்பதிகார மரபு :**

இளங்கோ அடிகள் மங்கல வாழ்த்துப் பாடலில் பின்வருமாறு வாழ்த்துரைக்கின்றார்.

'திங்களைப் போற்றும் திங்களைப்
போற்றுதும்
கொங்கலர்தார்ச் சென்னிக்
குளிர்வெண் குடைபோன்றிவ்
வங்க ணுலகளித்த லான்'

'ஞாயிறு போற்றுதும் ஞாயிறு
போற்றுதும்'

........................

'மாமழை போற்றுதும் மாமழை
போற்றுதும்'

ஆயிரத்தெண்ணூறுஆண்டுகட்கு முற்பட்ட தமிழ் மரபுகளை இவ் வாழ்த்து கூறுவதால், கொடிநிலை கந்தழி, வள்ளி என்பவற்றிற்கு உரையாசிரியர் கொண்ட பொருளே பொருந்துவதாகும்.

**குறட்பாயிரம் :**

தமிழ் மரபுகளில் நமது சிந்தனைக்கு ஏற்றவற்றைக்கொண்டு புது மரபு வகுப்பதே வள்ளுவர் நூன்முறையாகும். முதற்கடவுளை வாழ்த்தி மாமழை வாழ்த்தை மட்டும் ஏற்றுக்கொண்டார் வள்ளுவர். காலிங்கர் கூறுவதுபோல துறவறத்தைத் தொகுத்து 'நீத்தார் பெருமை' என்றும், இல்லறத்தைத் தொகுத்து 'அறன்வலியுறுத்தல்' என்றும் வகுத்தார். எனவே வள்ளுவர் காலத்தே குறட்பாயிரம் ஒரு புதுப்பாயிரம் என்றே மேற்காட்டிய ஒப்பீட்டு ஆய்வுகளின் வாயிலாகப் புலனாகின்றது. திரு. மு. இராகவ ஐயங்கார் கூறுவதுபோல் பழம்பாயிரமன்று.

# திருவள்ளுவரின் குடும்ப நலத்திட்டம்

"மக்கள்தொகைப் பெருக்கம் என்பது இக் காலத்தில் அணுக் குண்டுப் பிரச்சனை, மூன்றும் உலகப் போர்ப் பிரச்சனை ஆகியவற்றைக் கூடப் பின்தள்ளி விட்டு, அசுர வடிவில் நம் முன் நிற்கும் பெரும் பிரச்சனையாக உள்ளது!

பொருளியல் நிலையில் முன்னேறிக் கொண்டிருக்கும் ஆசிய நாடுகளில் மட்டும் அல்ல, நன்கு முன்னேறிவிட்ட ஐரோப்பிய நாடுகளில் கூட (ஒரு சிலவற்றைத் தவிர) மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கண்டு ஆளுபவர்கள் அஞ்சுகிறார்கள். அவர்கள் உருவாக்கியுள்ள "மக்கள்தொகை வெடிப்பு" (Population explosion) என்ற புதிய சொல் அமைப்பே அந்தப் பிரச்சனையின் பேராபத்தை நமக்குக் காட்டுகிறது!

இந்தச் சிக்கல் உலகச் சிக்கல் மட்டும் அல்ல; ஒரு சிறிய ஊருக்கும் கூடத் தலைவலியைத் தருகிற சிக்கலே! நூறுபேரே பிழைக்கக் கூடிய ஓர் ஊரில் நூற்று ஐம்பது பேராகி விட்டால் அங்கே 'மக்கள் தொகைப் பிரச்சனை' உருவாகி விடுகிறது! பத்துப்பேர் மட்டுமே நல்வாழ்வு வாழவல்ல ஒரு குடும்பத்தில் பன்னிரண்டு பேராகி விட்டால் அது குடும்பச் சிக்கலாகவும் ஆகிவிடுகிறது!

இந்த மக்கள் பெருக்கப் பிரச்சனை, குடும்பம்-ஊர்-நாடு-உலகம் என்று இந்த வகையில் அனைவரையும் பாதிக்கிறது என்பது தான் உண்மை!

இன்றைய இந்தப் பிரச்சனை திருவள்ளுவர் காலத் தமிழ் நாட்டிற்கும் இருந்தது; திருவள்ளுவர் காலத் தமிழ்க் குடும்பத்திற்கும் இருந்தது! வேண்டுமானால், இன்றுள்ளதைப் போல அவ்வளவு கடுமையாகவோ அனைத்துலகப் பெரும் பிரச்சனையாகவோ இல்லாமல் இருந்திருக்கலாம்!

இளைதாக முள்மரம் கொல்ல விரும்பும் வள்ளுவர், அவர்காலக் குடும்ப-ஊர்ப் பிரச்சனையான இதையும் தம் குறள்பாவில் தீர்க்க முயன்றிருப்பதை அவரது திருக்குறளின் ஓர் அதிகாரமான "மக்கட்பேறு" என்ற தலைப்பையும் அதன் குறட் கருத்துக்களையும் ஆழ்ந்து நோக்குபவர்கள் அறிவார்கள்!

அந்த அதிகாரத்தின் பத்துக் குறள்களையும், பத்தாவது குறளிலிருந்து, ஒன்பது-எட்டு - ஏழு-ஆறு என்று பின்நோக்கி ஆய்ந்து வருவோமானால், திருவள்ளுவர், மக்கள் தொகைக் கட்டுப்பாட்டுக்கு வேண்டியே முதலாவது குறளை எழுதியுள்ள உண்மையை அறியலாம்.

"மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை என்நோற்றான்கொல் எனும் சொல்" என்ற பத்தாவது குறளும்,

"ஈன்ற பொழுதின் பெரிது உவக்கும் தன்மகனைச் சான்றோன் எனக் கேட்ட தாய்" என்ற ஒன்பதாவது குறளும், வாலிபனாகவும் சான்றோனாகவும் விளங்கும் ஒரு மகன் வயது முதிர்ந்த தன் தந்தைக்கும் தாய்க்கும் தனது பெரும் புகழினால் மகிழ்ச்சியை ஈட்டிக் கொடுக்க வேண்டும் என்று கூறுகின்றன!

அந்த மகிழ்ச்சிக்கே அடிப்படையை எட்டாவது குறள் சொல்லுகிறது:

தம்மின் தம்மக்கள் அறிவுடைமை மாநிலத்து மன்னுயிர்க்கு எல்லாம் இனிது. அதாவது தம் பிள்ளைகளின் புகழ், அந்தப் புகழுக்குக் காரணமான அறிவு இவையே பெற்றோர்களின் மகிழ்ச்சிக்குக் காரணம் என்கிறார்.


தங்களைவிட அறிவில் தம் பிள்ளைகள் சிறந்து விளங்குவதற்குத் தந்தை என்ன செய்ய வேண்டும் என்பதை ஏழாவது குறளில் கூறுகிறார் :

"தந்தை மகற்கு ஆற்றும்
நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல்"

அவையத்து முந்தியிருக்கத் துணிவளிக்கும் கல்வியைக் குழந்தைப் பருவத்திலேயே தந்தை பிள்ளைக்குத் தர வேண்டும் என இந்தக் குறளில், அந்தக் குழந்தையின் கல்விப் பருவத்திற்கும் முந்திய மழலைப் பருவத்தைக் காட்டுகிறார் :

"குழல்இனிது, யாழ்இனிது
என்ப தம்மக்கள்
மழலைச்சொல் கேளா தவர்",

இந்த மழலைப் பருவத்திற்கும்முந்திய பருவம் இருக்கிறதே—தளர் நடைப் பருவம் பேச்சு வரும் முன்னால் நடை வந்த பருவம்



அந்தப் பருவத்தையும் அப்போது குழந்தை நடைபழகித் தம் மெய்தீண்ட, பெற்றோர் பெறும் சுகத்தையும்

"மக்கள் மெய்தீண்டல் உடற்கு
இன்பம்; மற்று அவர்
சொல்கேட்டல் இன்பம்
செவிக்கு"


என்று ஐந்தாவது குறளில் கூறுகிறார்.

நடப்பதற்கும் அடியெடுத்து வைப்பதற்கும் இன்னும் கற்காத பிஞ்சுக் குழந்தை, தாய் இருக்க வைத்த இடத்திலேயே இருந்து தன் பிஞ்சு விரல்களால் தன் கைக்கு எட்டுகின்ற உணவை உருட்டுவதை,

"அமிழ்தினும் ஆற்ற இனிதே
தம்மக்கள்
சிறுகை அளாவிய கூழ்"

என்ற நான்காவது குறளில் நயந்துரைக்கிறார்.

த. புருஷோத்தமன்



அந்தப் பிஞ்சுக் குழந்தையின் பருவத்தை இன்னும் கொஞ்சம் முன்னேக்கிப் பார்த்து, அது பச்சைக் குழந்தையாக இருந்த தோற்றத்தை நினைந்து பாடுகிருர். பச்சை மண்போல் படுக்கையில் கிடக்கும் பிறந்தகுழந்தை பெற்ரேருக்குச் சொத்து. பெற்ரேர்கள் இனிமேல் எடுத்துக்கொள்ளும் முயற்சிவினைகளுக்கு ஏற்பவே இந்தப் பச்சைக் குழந்தை வாழ்வில் மேலோங்கி வரும் என்ற கருத்தில்,

“தம் பொருள் என்ப தம் மக்
கள்; அவர் பொருள்
தம் தம் வினையால் வரும்”

என்று மூன்ருவது குறளில் கூறுகிருர்.

பிறந்து பூமிக்கு வந்துவிட்ட குழந்தையைப் பற்றி இவ்வாறு சொன்னவர், இன்னும் சற்று முந்திய கட்டத்திற்குப் போய், கருவுற்ற வயிற்ருேடு கனத்து நிற்கும் தாய்மைப் பெண்ணையும், அவள் என்ன குழந்தை பெறப் போகிருளோ, ஆணே பெண்ணே ஒன்ருே இரண்டோ என்று ஆவலோடு காத்திருக்கும் அவள் கணவனையும் பார்த்துக் கூறுவார் போல,

“எழுபிறப்பும் தீயவை தீண்டா
பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்”

என்று இரண்டாவது குறளைக்கூறி அவர்களுக்கு ஆறுதலாக விளங்குகிருர்.

இவ்வாறு பிள்ளையின் வாலிபப் பருவத்திலிருந்து கருப் பருவம் வரையில் குறள் கூறிய வள்ளுவர், கணவனும் மனைவியும் காதலால் ஒருங்கிணைந்து, பெண் கருவுறுவதற்கு முன்னலேயும் ஒரு குறளைக் கூறிவிடுகிருர்; “உங்களுக்கு இப்போது கட்டாயம் குழந்தை வேண்டுமா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். வேண்டாம் என்ற நிலையில், வீணுக்க் கருவுற்றுப் பிறகு வேதனைப் படாதீர்கள். நீங்கள் அடையும் மக்கட் பேறு, உங்கள் அறிவறிந்ததாக இருக்கவேண்டும். அதாவது, கர்ப்பமுறுவது உங்கள் கட்டுப்பாட்டுக்குள் அடங்கிய களிப்புச் செயலாக இருக்கவேண்டுமே தவிர, எதிர்பாராமல் நிகழ்ந்துவிடும் எரிச்சல் செயலாக இருக்கக்கூடாது :

“பெறுமவற்றுள் யாம் அறிவது
இல்லை; அறிவறிந்த
மக்கட் பேறு அல்ல பிற.”

பத்தாவது குறளிலிருந்து திருக்குறள் வைப்பு முறையைப் பின்னேக்கிப் பார்த்து வரும்போது, இந்த முதற் குறளில் வள்ளுவர் “பெறுகின்ற பிள்ளைகளை அறிவுடைய பிள்ளைகளாகப் பெறுங்கள்” என்று பிள்ளைகளைப் பற்றிக் குறிபிடுகிருர் என்பதைவிட “பிள்ளைகளைப் பெறுவதில் அறிவுடைய பெற்ருேராக இருங்கள்” என்று பெற்ருேருக்கு அறிவுரை கூறுகிருர் என்பதே குறட்பாக்களின் வைப்பு முறைக்கும் வாழ்க்கை முறைக்கும் பொருத்தமாக உள்ளது.

# இளந்தமிழா!

## கவிஞர் கு. சா. கிருஷ்ணமூர்த்தி

இளந்தமிழா உந்தனது சிந்தனைக்கு
எந்தனது விண்ணப்பம் ஒன்று கேளாய்!
வளம்மிகுந்து வாழ்ந்தவர்கள் தமிழரென்று
வரலாற்றில் படிப்பதல்லால் தமிழனின்று
களம்புகுந்து தன்னினத்தின் மானம்தன்னை
காப்பாற்றும் திறமையற்றா னெனும்சொற் கேட்டேன்
உளம் நொறுங்கிப் போகுதடா! உன்னாலன்றி
உயர்நிலையைக் காண்பதற்கு எவராலாகும்?

பெருந்தலைகள் தமிழினத்தின் உரிமைதன்னைப்
பேணுமென்ற நம்பிக்கை யற்றுப்போச்சு!
நிரந்தரமாய் அவரவர்தம் தன்னலத்தை
நினைப்பதன்றிப் பொதுநலத்தை நினைப்பாரில்லை?
வரம்பிகந்த பிற்போக்குச் சமுதாயத்தை
வகைபடுத்தி முன்னேற்றங் காணவேண்டின்
உரம்மிகுந்த இளந்தமிழன் உணர்ச்சி பொங்கி
உருவாக்கும் புரட்சிவழி ஒன்றுதேவை!

படித்தவர்க்கும் பாமரர்க்கும் ஏற்றதாழ்வு!
பணக்காரன் ஏழையென்னும் ஏற்றதாழ்வு!
தடித்துவிட்ட ஜாதிமத பேதமென்னும்
சங்கடத்தால் விளைகின்ற ஏற்றதாழ்வு!
கிடைத்துவிட்ட வாய்ப்பாலே உயர்ந்துவிட்டோர்
கீழோராய் மற்றவரை யெண்ணும் போக்கு!
பொடிப்பொடியாய் போகஇளந் தமிழா இன்றே
பொங்கியெழு! புன்மையெலாம் பொசுங்கிப் போகும்!

இலக்கியத்தில் கவிதைகளில் நாடகத்தில்
இன்னபிற கலைத்துறையில் பிற்போக்கானர்
தலையெடுத்துப் பழமையெலாம் என்றென்றைக்கும்
சாசுவதமாய் நிலைத்திருக்கத் திருத்தொண்டாற்றும்
கொலைக்கருவி தனை எழுதுகோலாய்க் கொண்டோர்
கொக்கரிக்கின்றார் அவர்தம் கொட்டமெல்லாம்
உலைக்களத்தில் மெழுகெனவே புகைந்துபோக
உன்னுடைய பணிநாட்டுக் குடனேதேவை!



# திருவள்ளுவர் கோயில் திருப்பணி

தமிழ் நாட்டில் திருவள்ளுவருக்கென்று கோவில் இருப்பது சென்னை மயிலாப்பூர் முண்டகக்கண்ணி அம்மன் தெருவில் இருக்கும் கோவில்தான்.

**இலுப்ப மரம்**

அதே இடத்தில் தான் திருவள்ளுவர் பிறந்ததாகவும், அங்குள்ள இலுப்ப மரத்தடியில் அமர்ந்து தான் திருக்குறளை எழுதியதாகவும் கூறுகிறார்கள். அந்த இலுப்ப மரத்தின் அடிக்கட்டை இன்றும் அழியாத நிலையில் பாதுகாக்கப்பட்டு வருகிறது. அந்த மரத்திலிருந்து ஒரு துண்டை ஜெர்மன் நாட்டு நிபுணர்கள் எடுத்துச் சென்று பரிசோதனை செய்து பார்த்ததில் அது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்திய மரம் என்ற கருத்தைத் தெரிவித்துள்ளனர்.

இத்தகைய வரலாற்றுச் சிறப்பு மிக்க திருவள்ளுவர் பிறந்த இடத்தை நல்லமுறையில்பேணிக் காப்பது இந்த அரசின் தலையாய கடமை என்பதை உணர்ந்து வள்ளுவர் நினைவை என்றென்றும் பேணும் வகையில் வள்ளுவரது கருத்துக்களையும், சிற்பங்களாகவும் ஓவியங்களாகவும் அமைத்-

னுக் கலைக் கோவில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

பூம்புகாரில் செய்திருப்பது போன்று இங்கும் செய்திடத் திட்டமிடப்பட்டுள்ளது. திருமண மண்டபத்தை மேலும் விரிவு படுத்தி மேல் பகுதியில் நூலகம் அமைக்க ஏற்பாடு நடந்து வருகிறது.

மேலும் எந்தெந்த வகையில் திருவள்ளுவர் நினைவாலயத்தை சிறப்புமிக்க இடமாகச்செய்யலாம் என்பது பற்றியும் ஆலோசிக்கப் படுகிறது. அந்தப் பணிகளைச் சீரிய முறையில் நிறைவேற்றுவதற்கும் திருப்பணிக்குழு அமைக்கப்பட்டிருக்கிறது.

இந்தக் கோவில் 20 ஆண்டுகளுக்கு முன் அறநிலையத்துறையின் கீழ் வந்தது.

கோவிலுக்காக ரூ. 35 ஆயிரம் பணம் இருக்கிறது. இது ஏற்கனவே இருந்த நிலத்தை விற்று வந்த பணமாகும். இக் கோவிலில் திருவள்ளுவர்சிலையும் வாசுகி சிலையும் இருக்கிறது.

கோவில் அதைச் சுற்றியுள்ள நிலம் இரண்டு ஏக்கர் 20 சென்ட் ஆகும். கோபுரம் பழையதாக இருக்கிறது. அதையும் அபிவிருத்தி செய்து பெரிதாகக் கட்டத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**நூலகம்**

திருவள்ளுவரைப் பற்றியும், திருக்குறளைப் பற்றியும் பலநாட்டு நிபுணர்கள் புத்தகங்கள் எழுதியிருக்கிறார்கள். அவற்றையெல்லாம் சேர்த்து நூலகத்தில் வைக்கப்படும்.

திருப்பணிகளை நிறைவேற்ற நிதி வசூல் செய்வதற்கும் பெரிய கோவில்களிலிருந்து பணம் பெறவும் ஏற்பாடு செய்யப்படும்.

செப்டம்பர் மாதம் 9ம் நாளன்று மயிலாப்பூரில் உள்ள திருவள்ளுவர் கோவிலை முதல்வர் கலைஞர் பார்வையிட்டார். அக்கோவில் சீர்திருத்தப்பட்டு, சிற்பக் கலைக் கூடம், நூலகம், திருமண மண்டபம் ஆகியவற்றை அமைக்க முதல்வர் அவர்களைப் புரவலராகக் கொண்ட திருப்பணிக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

## திருப்பணிக்குழு

திருவள்ளுவர் கோவில் திருப்பணிக்குழு விவரம் வருமாறு.

புரவலர் :

முதல்வர் கலைஞர்

தலைவர் :

தவத்திரு குன்றக்குடி அடிகளார்.

செயலாளர் :

கோவை மகாலிங்கம்

பொருளாளர் :

கே. ஈசுவர அய்யர்

குழு உறுப்பினர்கள் ;

பக்தவத்சலம் (முன்னாள் முதல்வர்)

சிலம்புச்செல்வர் ம. பொ. சி. (மேலவைத் துணைத்தலைவர்)

டாக்டர் மு. வரதராசனார் (துணைவேந்தர், மதுரை பல்கலைக்கழகம்)

என். டி. சுந்தரவடிவேலு (துணைவேந்தர், சென்னைப் பல்கலைக்கழகம்)

இராம. அரங்கண்ணல் எம்.எல்.ஏ., (தலைவர், குடிசைமாற்று வாரியம்)

முரசொலிமாறன், எம்.ஏ.,
துளசிங்கம், எம்.சி.
அனந்தநாயகி, எம்.எல்.ஏ.,

மற்றும்

திருவள்ளுவர் கோவில் அறங்காவலர்கள்.

# நீ ஓர் பூக்காடு;

## முதலில் உண்டானது தமிழ்

புனல்சூழ்ந்து வடிந்து போன நிலத்திலே "புதிய நாளை"
மனிதப்பைங் கூழ்மு ளைத்தே வகுத்தது! மனித வாழ்வை,
இனியநற் றமிழே நீதான் எழுப்பினை! தமிழன் கண்ட
கனவுதான், இந்நாள் வையக் கவின்வாழ்வாய் மலர்ந்த தன்றோ? (1)

## இசை, கூத்தின் மூலை

பழந்தமிழ் மக்கள் அந்நாள் பறவைகள் விலங்கு, வண்டு,
தழைமூங்கில் இசைத்ததைத், தாம் தழுவியே இசைத்த தாலே
எழும்இசைத் தமிழே! இன்பம் எய்தியே குதித்த தாலே
விழியுண்ணப் பிறந்த கூத்துத் தமிழே! என்வியப்பின் வைப்பே! (2)

## இயற்றமிழ் எழில்

அம்மாஎன் றழைத்தல் காகா, எனச்சொல்லல், அஃகென் றென்றைச்
செம்மையிற் சுட்டல் என்னும் இயற்கையின் செறிவி னாலே
இம்மாநிலத்தை ஆண்ட இயற்றமி ழேஎன் அன்பே!
சும்மாதான் சொன்னார் உன்னை ஒருவுன்பால் துளிர்த்தாய் என்றே (3)

## தமிழர்க்குத் தமிழ் உயிர்

வளர்பிறை போல்வ ளர்ந்த தமிழரில் அறிஞர் தங்கள்,
உளத்தையும் உலகில் ஆர்ந்த வளத்தையும் எழுத்துச் சொல்லால்,
விளக்கிடும் இயல்மு திர்ந்தும், வீறுகொள் இசைய டைந்தும்,
அளப்பிலா உவகை ஆடற் றமிழேநீ என்றன் ஆவி! (4)

## சாகாத் தமிழ்

படுப்பினும் படாது, தீயர் பன்னாளும் முன்னேற் றத்தைத்
தடுப்பினும், தமிழர் தங்கள் தலைமுறை தலைமு றைவந்
தடுக்கின்ற தமிழே! பின்னர் அகத்தியர் காப்பி யர்கள்
கெடுப்பினும் கெடாமல் நெஞ்சக் கிளைதொத்தும் கிளியே வாழி! (5)

**பாவேந்தர்**

# நான் ஓர் தும்பி!

### கலைகள் தந்த தமிழ்

இசையினைக் காணு கின்றேன்; எண்நுட்பம் காணு கின்றேன்;
அசைக்கொணுக் கல்தச் சர்கள் ஆக்கிய பொருள்காண் கின்றேன்;
பசைப்பொருட் பாடல் ஆடல் பார்க்கின்றேன்; ஓவியங்கள்,
நசையுள்ள மருந்து வன்மை பலபல நான்காண் கின்றேன். (6)

### முன்னூலில் அயலார் நஞ்சம்

பன்னூறு நூற்றாண் டாகப் பழந்தமிழ் மலையின் ஊற்றாய்
மன்னரின் காப்பி னாலே வழிவழி வழாது வந்த
அன்னவை காணு கின்றேன், ஆயினும் அவற்றைத் தந்த
முன்னூலை அயலான் நஞ்சால் முறித்ததும் காணு கின்றேன்! (7)

### பகைக் கஞ்சாத் தமிழ்

வடக்கினில் தமிழர் வாழ்வை வதக்கிப், பின் தெற்கில் வந்தே
இடக்கினைச் செய நினைத்த எதிரியை, அந்நாள் தொட்டே
"அடக்கடா" என்று ரைத்த அறங்காக்கும் தமிழே! இங்குத்
தடைக்கற்கள் உண்டென்றாலும் தடந்தோளுண் டெனச்சி ரித்தாய்!
(8)

### வெற்றித் தமிழ்

ஆளுவோர்க் காட்பட் டேனும், அரசியல் தலைமை கொள்ள
நாளுமே முயன்றார் தீயோர்; தமிழேநீ நடுங்க வில்லை!
"வாளினை எடுங்கள் சாதி மதம்இல்லை! தமிழர் பெற்ற
காளைகாள்" என்றாய்; காதில் கடல்முழக் கத்தைக் கேட்டாய்! (9)

### படைத் தமிழ்

இருளினை வறுமை நோயை இடறுவேன்; என்னு டல்மேல்
உருள்கின்ற பகைக்குன் றைநான் ஒருவனே உதிர்ப்பேன்; நீயோ
கருமான்செய் படையின் வீடு! நான் அங்கோர் மறவன்! கன்னற்
பொருள்தரும் தமிழே நீஓர் பூக்காடு; நானோர் தும்பி! (10)

**பாரதிதாசன்**

# பெண்கொலை புரிந்த நன்னன்

கொலு மண்டபத்திலே செருக்கோடு அமர்ந்திருக்கிறான் பாலி நாட்டு மன்னன். கொண்கானத்து நன்னன் என்றும் இவனைச் சரித்திராசிரியர்கள் அழைப்பதுண்டு.

அமைச்சர்கள் புடைசூழ, பொன்னங்கண்ணியும் பொன் மாலையும் சூடி அரியணையில் அமர்ந்திருக்கும் நன்னன் பார்வை கூர்மையாகிறது. புருவங்கள் மேலேறி இறங்குகின்றன.

வாயிற்காப்போன் ஒருவன் தலை தெறிக்க ஓடிவருகிறான்.

“பெருங்குடி வணிகனொருவன் தங்கள் திருமுகம் காண வந்திருக்கிறான்” எனக் கூறி மன்னன் கட்டளைக்காகக் காத்து நிற்கிறான்.

“வரவிடு அந்த வணிகனை!”

கட்டளை பிறந்ததும் விரைகிறான் வாயிற்காப்போன்.

சற்றைக்கெல்லாம்...

கையிலே ஒரு சிறுமியை ஏந்தி மன்னன் முன் தோன்றினான் அந்த வணிகன்.

சிறுமி பிணமாய்க் கிடந்தாள். பெருங்குடி வணிகனின் ஒரே மகள் அவள். திரண்ட செல்வத்துக்கும் வணிகப் பெருங்குடிக்கும் ஒரே வாரிசு அவள். அவள் செத்துக் கிடக்கிறாள். அவளைப் பெற்றெடுத்த தந்தை அவள் பிஞ்சு உடலை ஏந்திக்கொண்டிருக்கிறான் அவன் பக்கத்திலே தலைவிரி கோலமாய், கண்ணீரும் கம்பலையுமாய்க் காட்சியளிக்கிறாள் அந்த அருந்தவப் புதல்வியைப் பத்து மாதஞ்சுமந்து பெற்ற அருமை அன்னை.

சிறுமி செத்துக்கிடக்கிறாள் ஏன்?

இயற்கை மரணம் அவளை அணைத்ததா? இல்லையே!

அப்படியாயின் அவள் மரணம் சம்பவித்த மர்மம்தான் என்ன?

மன்னன் நன்னன், பிணமாய்க் கிடக்கும் செல்வச் சிறுமியைப் பார்க்கிறான். அவளது பெற்றோரையும் பார்க்கிறான்.

ஏகப் புதல்வியைப் பறிகொடுத்துப் பரதவிக்கும் அந்த அவலப் பெற்றோருக்கு மன்னன் என்ன சமாதானம் சொல்லிசாந்தியளிக்க முடியும்.

மன்னன் மனம் நெகிழவில்லை. இரக்கமெனும் ஒரு பொருள் அவன் இதயத்திலே இருப்பதாகத் தெரியவில்லை.

இரும்பு இதயத்தானிடம் இரக்கம் இருக்க நியாயமில்லைதான்.

இயற்கையாகச் சாகவில்லை அந்தச் சிறுமி. கொலையுண்டு மாண்டுபோனாள் அந்தக் குலக்கொடி.

ஆம்; அவளைக் கொன்றது ஒரு கொலைகாரனுமல்லன், கொடியவனுமல்லன். கோலோச்சும் கொற்றவன்தான் அந்தக்குழந்தையைக் கொலைசெய்தான்.

அரியணையில் அடலேறு போன்று வீற்றிருக்கிறானே நன்னன் என்னும் மன்னன், அவன் தான் அந்த மாபெரும் கொலை பாதகம் புரிந்தான்.

இத்தனைக்கும் அந்தப் பச்சிளம் சிறுமி செய்த குற்றம்தான் என்ன?

சொன்னால் ஆச்சரியப்படுவீர்கள்.

நன்னன் ஒரு மன்னனல்லவா! அவனுக்கு அழகிய அரண்மனை இருக்குமல்லவா! அந்த அரண்மனையின் பின்னே ஓர் ஓடை. அந்த ஓடையில் மிதந்து வந்தது ஒரு பசுங்காய். அந்தப் பசுங்காய் நன்னன் தோட்டத்தைச் சார்ந்ததாம். அந்தப் பசுங்காய் பச்சிளம் சிறுமியின் பார்வையிலே பட்டிருக்கிறது. அது அவளது பிஞ்சு மனத்தைக் கவர்ந்திருக்கிறது. அதில் குற்றம் கூறவும் முடியாதுதான். இயற்கையின் நியதி அது.

சிறுமி அந்தப் பசுங்காயை ஆவலோடு எடுத்தாள். ஆசையோடு கடித்தாள். சுவைத்துச் சுவைத்துத் தின்றாள்.

மன்னன் இக்காட்சியை மாடத்திலிருந்து பார்த்துவிட்டான். ஏவினான் ஆட்களை "கொண்டுவா அந்தச் சிறுமியை" என்று கர்ஜித்தான்.

சிறுமியின் கரங்களுக்கு இரும்பாரமிட்டு இழுத்துச்சென்றனர் அரண்மனை ஆட்கள்.

"அரண்மனைச் சொத்தை நீ அபகரித்தாய், அதனால் உன் ஆயுளை நான் அபகரித்துக்கொள்கிறேன்" என்று மன்னன் செருக்கோடு கூறினான்.

இதற்குள் சிறுமியின் பெற்றோருக்குச் செய்தி எட்டவே அவர்கள் அரண்மனைக்கு ஓடோடி வந்தனர்.

"மன்னா! எனக்கிருக்கும் ஒரே சொத்து இவள்! அதை நீ அபகரித்துக் கொள்ளாதே" என்றான் தந்தை.

"எங்கள் குலம் தழைக்க ஒரே ஒரு கொடி. அந்த ஒரேகொடியை நீ வெட்டிவிடப் பார்க்கிறாயே. வேண்டாம் மன்னா வேண்டாம்" என்று மன்றாடினாள் தாய்.

"எங்கள் பெண் தின்றது ஒரே ஒரு பசுங்காய். அதற்கு ஈடாகப் பல யானைகள் உனக்குக் காணிக்கைப் பொருளாக அளிக்கிறோம். பல நூறு குதிரைகளையும் சேர்த்துத் தருகிறோம். அதுமட்டுமல்ல மன்னா, என் பெண் எடையின் அளவில் ஒரு பொற்சிலை சமைத்துத் தருகிறோம். எடைக்குஎடை ரத்தினங்கள் தருகிறோம். பெண்ணை எங்களிடம் ஒப்படைத்து விடு!" என்று எவ்வளவோ கெஞ்சிக் கூத்தாடினார்கள் பெண்ணின் பெற்றோர்கள்.

மன்னன் மனம் மாறவில்லை. அவன் நெஞ்சு நெகிழவில்லை.

"நான் சொன்னது சொன்னதுதான்! இந்த முடிவிலிருந்து என்னை நான் மாற்றிக்கொள்ள முடியாது" என்று கடுமையாகக் கூறிவிட்டான் கருணையற்ற கொற்றவன்.

சிறுமியைக் கொலைக்களம் கொண்டு சென்றனர். குரூரமாய்க் கொலை புரிந்தனர்.

பிணமானாள் அந்தச் சிறுமி.

அவள் சடலத்தை அவள் பெற்றோரிடம் ஒப்படைத்தனர்.

## சேரன்



பிஞ்சு உடலைச்சுமந்துகொண்டு மன்னன் முன் தோன்றினர் அந்தப் பெற்றோர்.

உயிர்ப் பிச்சை கேட்க அல்ல.

மன்னன் புரிந்த கொடுமை கொலுமண்டபத்தில் வீற்றிருக்கும் பெருங்குடி மக்களுக்குத் தெரியட்டும் என்று அவர்கள் விரும்பினர்.

"நன்னன் செய்தது நீதியா?" என்று விண்ணதிர முழங்கினான் சிறுமியின் தந்தை.

"நீதிமான்களே! நீங்கள் சொல்லுங்கள். நன்னன் செய்தது நீதியா?"

"அமைச்சர் பெருமக்களே... நீங்கள்தான் சொல்லுங்களேன், நன்னன் செய்தது நீதியா? அவன் செய்தது நீதி என்று உங்களால் கூற முடியுமா?"

"மன்னன் புகழ் பாடும் பாணர்களே, மன்னன் நன்னன் செய்தது நீதி என்று தோன்றுகிறதோ உங்களுக்கு? சொல்லுங்கள் பாணர்களே, சொல்லுங்கள்!"

நீதிமான்கள், பெருங்குடிமக்கள் அமைச்சர் பெருமக்கள் அனைவருமே சிலையெனப் பேசாது நின்றனர்.

பாணர்களோ ஒன்று திரண்டெழுந்தனர். மன்னன் முன் சென்றனர்.

பெண் கொலை புரிந்த நன்னா உன்னையோ, உன் மரபினரையோ, உன் உறவினர்களையோ

# முதற் பரிசு

நாகர் கோயில்

**கிருஷ்ணன்**

## காட்சி 1

**இடம் :** மணிவாசகம் வீடு

**கதாபாத்திரங்கள் :**
மணிவாசகம் — பவானி — வேலன்

[மணிவாசகம் ஊஞ்சலில் உட்கார்ந்திருக்கிறார். வேலன் அவரது காலைப் பிடித்து விட்டுக் கொண்டிருக்கிறார்]

**மணி :** இந்தா பாரு வேலா : நான் திருச்சிக்குப் போய் வர்றதுக்கு எப்படியும் ஒரு வாரம் ஆகும். அதுவரைக்கும் நீதான் நம்ம வீட்டுக்குக் காவல்.

**வேலன் :** எஜமான்! அதை நீங்க சொல்லணுமா... நாய் கூட நன்றி மறக்கலாம். ஆனால்... இந்த வேலன் உப்பிட்ட உங்களுக்கு ஒரு நாளும் துரோகியா மாறமாட்டான்.

**மணி :** டேய்...இதை நீ சொல்லியாடா நான் தெரிஞ்சுக்கணும். உனக்கு வயசு இருபது இருக்குமா... ?

**வேலன் :** இருபத்து நாலு ஆயிடுத்துங்க...

**மணி :** என் பொண்ணு பவானி உன்னைவிட மூணு வயசு தான் சின்னது...என் வீட்டுக்கு உன்னை உன் அப்பன் ஐந்து வயசிலே வேலைக்குக் கொண்டு வந்து சேர்த்திட்டுப் போனான். என் சோத்தையே தின்னு வளர்ந்ததினாலே...நீ எனக்குத் துரோகியா மாறமாட்டேங்கறது நல்லாத் தெரியும்டா. என் சம்சாரம் அஞ்சு கத்துக்கு பிளட்ப்ரஷர் அடிக்கடி கோபம் வருது...பவானி...ரொம்ப துடுக்குக்கார பொண்ணு...குளிக்குறதுக்கு குளத்துக்கோ...ஏரிக்கோ போயிடப் போகுது...

**வேலன் :** நீங்க தைரியமா போயிட்டு வாங்க...நான் எல்லாத்தையும் கவனிச்சுக்கறேன்...

**மணி :** அதிலபாரு வேலா... ஒரு முக்கியமான விஷயமா போறேன்...இது மட்டும் வெற்றி ஆயிடுத்து...அப்புறம் பாரேன்...

---

இனி நாங்கள் பாடமாட்டோம்! இது சத்தியம்! இது சத்தியம்!'' என்று சூள் உரைத்தனர்.

கொண்கானத்து நன்னனைப் பெண் கொலை புரிந்த நன்னன் என்று பாணர் வருணித்ததை, குறுந்தொகை நமக்கு இன்றும் நம் கண்முன் கொண்டு வந்து நிறுத்தும் அரியகாட்சியைப் பாருங்கள்.

மண்ணிய சென்ற
    ஒண்ணுதல் அரிவை
புனல்தரு பசுங்காய்
    தின்றதன் தப்பலிற்கு
ஒன்பதிற்று ஒன்பது
    களிறொடு அவள் நிறை
பொன்செய் பாவை
    கொடுப்பவும் கொள்ளான்
பெண் கொலை புரிந்த நன்னன்

[குறுந்தொகை 292]

**வேலன் :** நல்லபடியா நடக்கட்டும். ஏன் ஐயா திருச்சிக்குத் தானே போறீங்க?

**மணி :** ஆமாம்.

**வேலன் :** எனக்கு திருச்சி யிலே இருந்து ஒரு லாட்டரி சீட்டு வாங்கி வாங்கங்கறேன்.

**மணி :** (சிரித்து கொண்டே) அதென்னடா திருச்சியிலிருந்து ..

**வேலன் :** திருச்சிப் பக்கம் தான் அடிக்கடி முதல் பரிசு விழுது . அது மட்டுமல்ல ஐயா... எங்கப்பா இருந்தது திருச்சி யிலேதானே அதனுலே .. திருச் சியிலே வாங்கினு...முதல் பரிசு விழாட்டி ஒரு நூறு ரூபாயாவது விழுமேனு ஒரு ஆசை ..ஏன்னு ஒரு வாட்ச் வாங்கணும்னு ரொம்ப நாளா ஆசை.

**மணி :** அதுக்கென்னடா தாராளமா வாங்கிக்கிட்டு வாறேன்.

**வேலன் :** இந்தாங்க.

[மடியிலிருந்து ஒரு ரூபா பணத்தை எடுத்துக் கொடுக்கிருன்—மணிவாசகம் வாங்க மறுக்கிருர்.]

**மணி :** இதெல்லாம் வேண்டாம்டா. நான் வாங்கிகிட்டு வர்றேன்...

**வேலன் :** சரீங்க...

(திரை)

## காட்சி 2

கதாபாத்திரங்கள் :
இடம் : தோட்டம்
வேலன்—பவானி

[மாந்தோப்பில் — மறைவான இடத்தில் வேலனின் மடியில் தலே சாய்ந்து படுத்திருக்கிருள் பவானி. வேலன், அவளது கார்குழலேக் கோதிவிட— பவானி வேலனின் கைகளேப் பிடித்து விட்டுக் கொண்டிருக்கிருள்].

**பவானி :** வேலா! அப்பா ஊருக்குப் போற அன்னிக்கு எனக்கு அழுகையே வந்திடுத்து.

**வேலன் :** அப்பா ஊருக்குப் போருர்னு வருத்தம் வரத்தானே செய்யும் ..

**பவானி :** அதுக்கில்லே... வந்து ..

**வேலன் :** என்னது... ?

**பவானி :** உன்னே நினேச்சுத் தான் அழுகை வந்தது...

**வேலன் :** எதுக்காக என்னே நினேச்சு நீ அழணும் ?

**பவானி :** எங்கப்பா காலே ரெண்டு மணி நேரம் ஓயாமல் அமுக்கி விட்டுக்கிட்டு இருந்தியே. பாவம் உன் கைகள் என்ன ஆகும் ..

**வேலன் :** அதுக்காகத் தான் என் கையை அமுக்கிவிடறியா .. பவானி வேலேக்காரன்...செய்ய வேண்டிய கடமை ..

**பவானி :** நல்ல கடமை... அதனுலே உன் கையை ஒருமணி நேரமாவது பிடிச்சுவிட்டால்தான் என் மனசு ஆறும் போலிருக்கு.

**வேலன் :** நாம ரெண்டு பேரும் இப்படி இருக்கற காட்சியைப் பார்த்தால் எவனுவது என் உடம்பைப் பிடிச்சு விடுவாங்க...

**பவானி :** வேலா! நீ என்ன சொல்லறே...

**வேலன் :** நம்ம ரெண்டு பேரும் ஒருத்தருக்கொருத்தர் காதலிக்கறதை இந்த சமுதாயம் ஏத்துக்காது.

**பவானி :** ஏன் ?

**வேலன் :** சமுதாயம் சந்தனச் சோலை அல்ல; அது சரியான ஒரு 'சிலந்திக் கூடு'' அப்படீன்னு ஒரு சினிமாவிலே என்னை மாதிரி ஒரு வேலைக்காரன் உன்னை மாதிரி எஜமானிபொண்ணுகிட்டே வசனம் பேசினது எனக்கு ஞாபகம் இருக்கு ..

**பவானி :** சினிமா வசனத்தை வைச்சு வாழ்க்கையை எடை போடாதே வேலா ..

**வேலன் :** எதனாலே அப்படி சொல்றே...

**பவானி :** எங்கப்பா...சீர்திருத்த மனப்பான்மை கொண்டவர்.

**வேலன் :** அதனாலே நம்ம கல்யாணத்தை அடுத்த முகூர்த்தத்திலே நடத்துவார்னு நீ எதிர் பார்க்கறே இல்லே...

**பவானி :** ஆமாம் ... ஏன்னா .. நான் கண்கலங்கினால் அவரு பார்த்துக்கிட்டு ஒரு நாளும் சும்மா இருக்கமாட்டார்...

**வேலன் :** என்ன வேவா பவானி... சின்னப் பிள்ளையிலே யிருந்து ஒண்ணாப் பழகினோம்.. ஒண்ணும் புரியாமல்...இப்போ .. அது காதலா மாறிடுத்தே...அந்த காதல் கைகூடுவதற்கு ஒரே வழி எனக்கு லாட்டரியிலே முதல் பரிசு விழணும்.

**பவானி :** முதல் பரிசுன்னா இந்த மாசம் மூணு லக்ஷமாச்சே . வேலா...மூணு லக்ஷம் மட்டும் உனக்கு விழுந்தது,மறு நிமிஷமே மூணு முடிச்சு என் கழுத்திலே நீ போடறது நிச்சயம்.

[மாம்பழம் ஒன்றை அணில் கொத்திக் கீழே தள்ளுகிறது - வேலன் மடியில் வந்து விழுகிறது. இருவரும் மகிழ்ச்சி பொங்க...மாம்பழத்தை ஒன்றாகக் கடித்துசுவைத்து தின்கின்றனர்.]

*(திரை)*

## காட்சி 3

**கதாபாத்திரங்கள் :**

**இடம் :** மணிவாசகம் வீடு

மணிவாசகம்—அஞ்சுகம்—
வேலன்—பவானி

[மணிவாசகம் ஊஞ்சலில் அமர்ந்திருக்க—மனைவி அஞ்சுகம் வெற்றிலை மடித்துக் கொடுக்கிறாள்.]

**அஞ்சு :** பையனைப் பார்த்தீங்களே...பிடிச்சிருக்கா எப்படி ? ஒண்ணுமே சொல்லலீங்களே...

**மணி :** என்னத்தைச் சொல்லறது பையன் நிறைய படிச்சிருக்கான்.

**அஞ்சு :** எஸ். எஸ். எல். சி. படிச்சிருப்பானா ..

**மணி :** உனக்குத் தெரிஞ்ச படிப்பு அது ஒண்ணுதானே பையன் இன்சினீயரிங் படிச்சிருக்கான். பத்து தலைமுறைக்கு சாப்பிடலாம் அந்த அளவுக்கு சொத்தும் சுகமும் இருக்கு.

**அஞ்சு :** அப்படீன்னா முடிச்சிட்டு வரவேண்டியது தானே.

**மணி :** பையன் வயசு இருபத்தாறுதான்.

**அஞ்சு :** அப்புறம் என்ன தேதி வைக்க வேண்டியதுதானே.

**மணி :** பூப் போட்டுப் பார்த்தோம்...நல்ல பொருத்தம்...

**அஞ்சு :** பத்திரிகை அடிக்க வேண்டியதுதானே...

**மணி :** முழுக்க சொல்றதுக்கு முன்னே நீயே முடிவைச் சொல்லிக்கிட்டு போனு எப்படி ?

**அஞ்சு :** என்ன சொல்றீங்க...

**மணி :** எல்லாம் பெற்றிருந்த பையனுக்கு அழகுதான் இல்லே... இருபத்தாறு வயசுன்னு யாரும் நம்பமாட்டாங்க நாற்பது வயசு ஆள் மாதிரி தெரியுது . தலை ஒரே வழுக்கை .

**அஞ்சு :** இப்படி ஏதாவது சாக்கு போக்கு சொல்லிக்கிட்டே இருங்க . உங்க பொண்ணுக்கு சுயம்வரம் வையுங்க . வயசு வந்த பொண்ணை இப்படி எத்தனை நாளைக்குத்தான் வீட்டிலே வைச்சுக்கிட்டு இருக்கிறது......இந்தா பாருங்க . நான் கண்டிப்பா சொல்லி விட்டேன்......ஐப்பசிக்குள்ளே பவானி கல்யாணத்தை முடிச்சிட வேண்டியதுதான்...

**மணி :** மாப்பிளை என்ன என் மடியிலேயா இருக்கான்...யார் யாருக்கு எங்கெங்கே பிராப்தமோ அங்கங்கே தானே நடக்கும்.

—திரை—

## காட்சி 4

**இடம் :** பொதுமேடை

[அலங்கார மேடைமீது விழாத் தலைவர் அமர்ந்திருக்கிருர்பெரும் அதிகாரிகள்—காவலர்— காவற்துறை அதிகாரிகள் புடைசூழ— மேடையின் ஒரு ஓரம் பரிசு பெறப் போகும் அதிர்ஷ்டசாலிகளுள் ஒருவனுக முதல் பரிசு பெற்ற வேலனும் அவனுக்குத் துணையாக பக்கத்தில் மணி வாசகமும் உட்கார்ந்திருக்கின்றனர்— மக்கள் கூட்டம் வெள்ளம் எனப் பொங்கிவிடுகிறது— கூட்டம் தொடங்கி வாழ்த்துரையும், பேச்சுரையும்—சிற்றுரையும்—சிங்கார உரையும் முடிகிறது. தலைவர் மகிழ்ச்சி பொங்கப் பரிசுச் சீட்டை வேலனுக்கு வாழ்த்தி வழங்குகிருர்.

**தலைவர்:** வேலன்—வேடன்—விருத்தன் என்று பார்த்திருக்கிரேம். ஆனுல் இங்கு வேலன்—வேலைக்காரன். பணக்காரன் என்று ஓர் அதிர்ஷ்டக்காரனைக் காண்கின்ற வாய்ப்பினைப் பெறுகின்ரேம். ஏழைகளின் இந்த அரசிலே பஞ்சை பராரிகள் மஞ்ச வாழ்வு காண்கின்றனர். ஏழைகள் சிரிக்க—நாம் ஏற்றத்தைக் காண்கின்ரேம். முதல் பரிசான மூனு லட்சத்தைப் பெறுகின்ற வேலன் பல்வளம் பெற்று—பதினுறு பேறுகளும் பெற்று நாம் இருவர் நமக்கு இருவர் என்று நாடும், ஏடும் நற்றமிழர்வீடும் போற்றிப் புகழ்பாட வாழ்வாங்கு வாழ வாழ்த்துகின்றேன். வணக்கம்.

[வேலன் தலைவரின் கால்களில் விழுந்து வணங்கி பரிசுச் சீட்டுக்கான மூன்று லட்சம் ரூபாய் செக்கைப் பெறுகிருன்]

**வேலன் :** எல்லாருக்கும் கும்பிடறேனுங்க... இந்த மூனு லட்சம் எனக்குமட்டும் சொந்தமில்லீங்க. ஏன்னு... எங்க எஜமான்... எனக்காக வேண்டி.... திருச்சியிலேயிருந்து வாங்கிகிட்டு வந்தாரு... நான் அன்னிக்கே மனசிலே நினைச்சேன். நமக்கு முதல் பரிசு விழுந்ததுன்னு எஜமானுக்கு பாதி கொடுக்கணும்னு ...அதனுலே... இந்த பணத்தை நாங்க ஆளுக்குப் பாதியா எடுத்துக்குரேம்.

# உலக மறதி

மின்னூர் சீனிவாசன்.

கற்பனையாம் சிறகில் — மனம்
கனவு காணுமம்மா!
அற்புதக் கவிபாட — ஓர்
ஆசையும் தோணுமம்மா!

அன்பென்றொரு ராகம் — பாட
அழகென்றொரு ராகம்
இன்பம் சுருதியம்மா — உலகம்
எல்லாம் மறதியம்மா!

போரும் பகையுமில்லை — ஒரு
பூசல் ஏசலில்லை;
யாரும் துணையில்லை — திசை
எல்லாம் கவியெல்லை!

சோலைத் தனிமையிலே — மனம்
சொக்கும் இனிமையிலே
மாலைப் பொழுதினிலே — கவி
மலரும் தருணமிதே!



# பண்பாட்டுக்கு ஓர் இயக்கம்

தமிழ்ப் பண்பாடு, பாரதப் பண்பாடு, மனிதப் பண்பாடு, என்றெல்லாம் பேசப்படுகிறதே, பண்பாடு என்ற இந்தச் சொல்லுக்கு என்ன பொருள் இருக்கக்கூடும்?

காட்டுமிராண்டியாக விலங்குகளோடு விலங்காக வாழ்ந்த கற்கால மனிதன் இன்று நாகரிக மனிதனாக உலவுகின்றான். உறவு முறைகளைத் தன் இனத்துக்குள் ஏற்படுத்திக்கொண்டு கூடிய வரையில் அவற்றுக்குக் கட்டுப்பட்டு வாழ முற்படுகிறான். குடும்பம், நகரம், நாடு, மொழி என்றெல்லாம் சில முறைகளை வகுத்துக் கொண்டு சில நெறிகளை ஏற்படுத்திக் கொண்டு ஒழுங்காக வாழ முயல்கிறான். வாழ்க்கையை அழகு படுத்திக் கொள்ளவும் அதை இன்பமாக்கிச்சுவைக்கவும் அவனுக்குக் கல்வி, கலை, இலக்கியம், முதலிய சாதனங்கள் தேவைப்படுகின்றன. வயிற்றுப் பசியும் உடற்பசியுமே முக்கியமானவை என்றும். அவற்றை எப்படி வேண்டுமானாலும் தணித்துக் கொள்ளலாம் என்றும்நம்பியிருந்த கற்காலத்து மனிதன் இன்றுஇந்த நிலைக்கு வளர்ந்திருப்பதையே நான் மனிதனின் பண்பாட்டு வளர்ச்சி எனக் கூறலாம் என நினைக்கிறேன்.

மனிதனின் மன வளர்ச்சி, சிந்தனைத் தெளிவு, தன் பொறிபுலன்கள் மீது அவனுக்குள்ள கட்டுப்பாடு, இயற்கையின் மீது அவன் செலுத்தும் ஆதிக்கம், நாகரிகமாக வாழும் பயிற்சி போன்றவை மனிதனின் பண்பாட்டைக் காட்டக் கூடியவை. காலங்காலமாக வளர்ந்து வரும் கடவுள் நம்பிக்கை, சமய உணர்வு, கலை—இலக்கியச் செல்வாக்கு. கல்வி அறிவு முதலியன அவனைச் சிறிது சிறிதாகப் பண்படுத்தி இன்றைய நிலைக்குக் கொண்டு வந்திருக்கின்றன.

தமிழ்ப் பண்பாடு ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சரியான முறையில் உருவாகத் தொடங்கி விட்டது என்பதற்குச் சான்றுகள் நம்முடைய அற நூல்களும் இலக்கியங்களும் ஆகும். வள்ளுவம், நாலடி, சிலம்பு, அகப்புறப் பாடல்கள் ஆகியவை நம்முடைய பண்பாட்டின் சின்னங்கள் நிலையான பண்பாட்டு அடிப்படை இல்லாத மண்ணில் இவை முளைத்திருக்க முடியாது. அடுத்து, இடைக்காலத்திலும் நம் பண்பாடு வளர்ந்துவந்திருக்கிறது என்பதற்கு நமது விண்ணை முட்டும் கோயில்கள் சான்றாகத் திகழ்கின்றன. கம்பர் ஜயங்கொண்டார், ஆழ்வார்கள், நாயன்மார்கள் சேக்கிழார் முதலியோர் நமது பண்பாட்டை வளர்த்தவர்கள்.

இந்த இடைக்காலத்தில் பக்தி இயக்கத்தால் நாட்டில் ஏற்பட்ட தீவிரமான கலாச்சார பண்பாடு மறுமலர்ச்சியை நாம் நினைவில் வைத்துக்கொள்வது நல்லது. சிற்பம். சித்திரம், காவியம் ஆடல் பாடல், போன்ற எல்லாக் கலைகளுமே அப்போது புத்துயிர்

பெற்று வளர்ந்திருக்கின்றன. வானளாவும் கோயில்களைக் கட்டியதில் தமிழர்களுக்கு இணையானவர்கள் உலகில் வேறெங்கும் இல்லை, என்ற பெருமையைப் பெற்றவர்கள் நாம்.

கோயில்களே கலைக் கூடங்களாகவும் கல்விக் கூடங்களாகவும் விளங்கியிருக்கின்றன என்பதையும் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும் மாமன்னர்களின் மாளிகைகள் இந் நாட்டில் பாதுகாக்கப் படவில்லை. ரோமாபுரியில் மன்னர்களின் மாளிகைகளும், அடிமைகளுக்கும் சிங்கங்களுக்கும் போர் நடந்த கூடங்களும் இன்றுகூடப் பழைமைச் சின்னங்களாகப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. நம் நாட்டில் மனிதன் அழியாப் பொருளில் நம்பிக்கை வைத்துச் காலத்தால் அழியாத கல் மாளிகைகளை அதற்கு ஊர்தோறும் நிறுவியிருக்கிறான்.

## கலைகளும் கட்டுப்பாடும்

கலைகள் உணர்ச்சிப் பெருக்கிலிருந்து பிறப்பவை. சுவைப்போரிடம் உணர்ச்சிப் பெருக்கை ஏற்படுத்தும் ஆற்றல் பெற்றவை. அவற்றிலும் இன்னிசை, கூத்து நாட்டியம், சிற்பம், சித்திரம், போன்ற நுண்கலைகள் மனிதனின் உள்ளக் கட்டுப்பாட்டைச் சிதறச் செய்யும் வலிமை வாய்ந்தவை. ஆகவேதான், அக்காலத்தில் தமிழகத்தில் பரவியிருந்த புறச் சமயத்தவர் நுண்கலைகளை ஓரளவு புறக்கணித்தனர் என்றும் கூறப்படுகிறது. அத்தகைய கலைகளையே பக்தி நெறியின் வழிப்படுத்தி ஆக்க சக்திகளாக மலரச் செய்த நம்முடைய முன்னோரின் திறனை நாம் இப்போது எண்ணிப் பார்த்து வியக்க வேண்டும்.

அகிலன்

நுண்கலை மனிதனை மிருகமாக மாற்றிக் கற்கால நிலைக்கு இழுத்துச் செல்லவும் வல்லது. மாறாக மனிதனை வானுறையும் தெய்வத்தின் நிலைக்கு உயர்த்தவும் வல்லது. கலைகளைக் கட்டுப்படுத்திப் பயன்படுத்தத் தெரிந்த இனம் தமிழ் இனம் என்பது இறையுணர்வுக்கும் கலையுணர்வுக்கும் ஏற்படுத்தியிருந்த தொடர்பின் மூலம் வெளிப்படுகிறது. அழகுணர்ச்சி மிக்க கலைகளை நம்முடைய முன்னோர் அறவே ஒதுக்கிவிடவுமில்லை. அவற்றை நெறிகெட்ட முறையில் தான்தோன்றித்தனமாக தலை விரித்தாடும்படி விட்டு விடவும் இல்லை. மனிதர்களின் நிர்வாணச் சிலைகளையும் ஓவியங்களையும் மேலை நாட்டார் நகரங்கள் தோறும் வடிப்பதற்கு முன்பே நம்முடைய சிற்பிகளும் கலைஞர்களும் வண்ணச் சிற்பங்களையும் சித்திரங்களையும் கோயில்களுக்குள் வடித்துக் குவித்திருக்கின்றனர். கோயில்களை மையமாகக் கொண்டும் வளர்ந்த நம்முடைய ஆடல்களையும் பாடல்களையும் சற்றே நினைத்துப் பாருங்கள்.

உணர்ச்சிகளை அறநுபடுத்தும் ஆற்றல் உள்ளதே இந்த மண்ணில் கலை என்று ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. உணர்ச்சிகளுக்கு வெறியூட்டி விகாரப்படுத்தும் எதுவும் நம்மைப் பொறுத்த வரையில் கலையாக மதிக்கப்படவில்லை.

ஒழுக்கம் என்பதும் கட்டுப்பாடு என்பதும் நாகரிக வளர்ச்சிக்குரிய நெறி முறைகள். தனக்குத் தானே பொறி புலன்களை கட்டுப்

படுத்திப் பயன்படுத்தத் தெரிந்தவன் சுதந்திர மனிதனாக உலவுகிறான். வீட்டுக்கும் நாட்டுக்கும் பயன் தருபவனாக வாழ்கிறான். கட்டுப்பாடற்றவன் சிறைக்குள் தள்ளப்பட்டு அடிமையாகிறான். சமுதாயத்துக்குச் சுமை அவன். தனி மனிதனுக்கு எது கிடைக்குமோ அதுதான் அப்படிப்பட்ட சமுதாயத்துக்கும் கிடைக்கும்.

தமிழன் தன் கலைகளுக்கும் இலக்கியங்களுக்கும் பிற பண்பாட்டுத் துறைகளுக்கும் அன்று விதித்துக்கொண்ட சுய கட்டுப்பாடுகளே அவனுடைய வளர்ச்சிக்குக் காரணங்களாக விளங்கியிருக்கின்றன. இன்று அதே தமிழன் எந்தத் திசையை நோக்கி எவ்வாறு இழுத்துச் செல்லப் படுகிறான் என்பதையும் நாம் கவனிக்க வேண்டும்.

**கால மாற்றத்தில் கலைகள்**

காலம் மாறி விட்டது. எல்லாக் கலைகளுமே சமயத்துறையையோ பக்தி நெறியையோ சார்ந்துதான் இன்றும் இருக்கவேண்டும் என்று கூற முடியாது. ஜெட் விமானம் பறக்கும் யுகம் இது. பிற நாடுகளின் கலாசாரப் பண்பாட்டு வளர்ச்சியும், வீழ்ச்சியும் நம்மைத் தாக்கவே செய்யும். பத்திரிகை, வானொலி சினிமா, டெலிவிஷன், போன்ற இயந்திர சாதனங்கள் கலைகளை வேகமாகப் பரப்பும் ஆற்றல் பெற்றுள்ளன.


இந்த இயந்திரங்களால் கலாசாரப் பண்பாட்டு வளர்ச்சியை உலகில் தீவிரமாக ஏற்படுத்தவும் முடியும்; அழிக்கவும் முடியும். விஞ்ஞானமும் தொழில் துறையும் புற வாழ்க்கை வசதிகளைப் பெருக்க உதவுகின்றன. அதே சமயம் அணு குண்டுகளையும் அவைதான் உற்பத்தி செய்திருக்கின்றன.

ஆகவே, விஞ்ஞான வளர்ச்சியையும், தொழிற் புரட்சியையும் நாம் குறை கூறிப் பயனில்லை. அவற்றை ஆக்கரீதியாகப் பயன் படுத்துவதும், அழிவை நோக்கித் திருப்புவதும் நம் கையில்தான் இருக்கின்றது. கலாச்சாரப் பண்பாட்டுத் துறையின் வளர்ச்சிக்கும் அதன் வாயிலாக மனிதனின் மன வளர்ச்சிக்கும் பயன்படுத்தப் பட வேண்டியவை அச்சியந்திரம், ஒலிபெருக்கி, சினிமா, யந்திரம் போன்றவை. இவை இன்றைய நூற்றாண்டு வாழ்க்கையின் அங்கங்களாகி விட்டன.

இந்த இயந்திரங்கள் நம்முடைய கலைகள், கலாசாரம், பண்பாடு, இவற்றை நல்லவிதமாக வளர்க்கவும், பரப்பவும் உதவி செய்கின்றனவா? அல்லது அவற்றினை நாம் மறக்கும் அளவுக்கு கலாசார வீழ்ச்சிக்குக் காரணமாக இருக்கின்றனவா? மேலை நாட்டுக் கலாசார மோதுதல்களையோ, நம் நாட்டின் பிறபகுதி கலாசாரக் கலப்பையோ நம்மால் புறக்கணிக்க முடியாது. ஆனால் மேலைநாட்டு கழிசடைப் போக்குகளை நாம் கலாசாரம் என்று ஏற்றுக் கொள்வது சரியா என்பதையும் சிந்திக்க வேண்டும். எதிலும் கொள்ள வேண்டியதைக் கொண்டு, தள்ள வேண்டியதைத் தள்ளுவதுதான் முறையாகும்.

நம்முடைய பயில் முறை, நாடக மேடைகளில் நடிக்கப் பெறும் பல நாடகங்கள், நம்முடைய திரைப் படங்கள், நம்முடைய பத்திரிகைகளில் வெளி வரும் கதை-கட்டுரை-படங்கள், பல அரங்குகளில் முழங்கப்படும் இசைகள், ஆடப்படும் ஆட்டங்கள் இவ்வளவையும் எடுத்துக் கொண்டு நாம் ஆய்வு நடத்திப் பார்த்தால் நம்முடைய கலாச்சாரத்தில் எத்தனை சதவீதம்கலப் படம் என்பது விளங்கும். கலப்

படமும் போலி யும் உணவுப் பண்டங்களிலும் மருந்துகளிலும் மிகுந்திருந்தால் நாம் முகம் சுளிக்கிறோம். 'தமிழர் திருநாள்' என்று அழைக்கப்படும் பொங்கலுக்காக அனுப்பப்படும் வாழ்த்துக்களில் உள்ள புகைப் படங்களைப் பார்த்தால் போதும் நம் கலாச்சாரப் பண்பாட்டு நிலைமை!



வானளாவும் கோயில்களைக் கட்டியதில்...............

நம்முடைய இளம் தலைமுறையினர் நம்மைப்போல் இருக்க வேண்டும் என நாம் எதிர்பார்க்க வேண்டாம். ஆனால், அடிப்படை மனிதப் பண்பாட்டிலிருந்து அவர்கள் நழுவி விழ நாம் வழுக்கும்பாதைகள் அமைத்துக்கொடுப்பது, நாம் அவர்களுக்குச் செய்யும் பச்சைத் துரோகமாகும். இரக்கம், பிறருக்கு உதவும் துடிப்பு, அடுத்தவர் நலன், பொறுமை, பொறுப்புணர்ச்சி, ஆர்வம் இவ்வளவும் அவர்களுக்கு வேண்டும்.

படித்தவர்களிடையே ஹிப்பித்தனமும், கஞ்சாச் சுகமும், தன்னல வெறியும் கலை என்ற பெயரால் பரப்பப்படுவது மோசடியாகும். சினிமாக் கவர்ச்சியைக் காட்டி இப்போது திரை உலகைவிட பத்திரிகைகளே அதிக வியாபாரம் செய்து வருகின்றன. 'பணம் பண்ணுவது ஒன்றே குறி' என்ற கொள்கையில், எதைச் செய்துதான் பணம் பண்ணுவது என்ற நெறி இல்லாமல் போய்விட்டது.

பணத்திலே இவர்கள் குபேரர்களாகிவிட்டால் போதுமா? குபேர சம்பத்துள்ள ஒரு பணக்கார நாட்டில் இப்போது நடைபெற்று வரும் சில நிகழ்ச்சிகளைப் பார்ப்போம். நடுத் தெருவிலோ அல்லது ஓடும் ரயிலிலோ ஒருவரைக் கொலை செய்தால் கூட அடுத்தவர் ஏன் என்று கேட்பதில்லை கூட்டமாயிருந்தும் கூட மனிதர் தடுக்க முயல்வதில்லை. நாள்தோறும் நடைபெறும்கொலைகள், கொள்ளைகள், கற்பழிப்புகள், அடிதடிகள், சிறு திருட்டுக்கள் அதிகமாகி வருகின்றன. பல்கலைக் கழகங்களும் கல்லூரிகளும் கூட கஞ்சா, அபின், சதை வெறி இவற்றுக்கு இரையாகி வருகின்றன. கணவன் மனைவி உறவு, பெற்றோர் பிள்ளை உறவு போலித்தனமாகி வருகிறது.

செல்வச் சிறப்பில் தலைசிறந்து விளங்கியும் இந்த நிலை அந்த நாட்டுக்கு வந்துள்ளதற்குக் காரணம் அங்குள்ள கட்டுப்பாடில்லாத டெலிவிஷன்களும், சினிமாக்களும் பத்திரிகைகளும் என அந்த நாட்டு அறிஞர்கள் கூறுகின்றார்கள். நாம் அந்த நாட்டு உடை, நடை, பழக்க வழக்கம், உறவு, ஆடல், பாடல்

இவற்றை நம்முடைய கலாசாரப் போர்வையில் இறக்குமதி செய்து கலப்பட வாணிபம் செய்யப் பார்க்கிறோம்.

**நாம் என்ன செய்யப் போகிறோம்?**

கல்லூரிகளையும் பல்கலைக் கழகங்களையும் பெருக்குவதால் மட்டுமோ, தெருவுக்குத் தெரு கதாகாலட்சேபங்களும், கீதோபதேசங்களும், வள்ளுவர் விழாக்களும் ஏற்பாடு செய்தால் மட்டுமோ, கோயில் திருப்பணிகளும் கும்பாபிஷேகங்களும் நடத்துவதால் மட்டுமோ நம்முடைய நாகரிகத்தையும் பண்பாட்டையும் நம்மால் காப்பாற்றிவிட முடியாது.

குறைந்த விலையில் நமக்குக் கிடைக்கும் பத்திரிகைகள், நம்முடைய சினிமாக்கள், அவற்றின் பாட்டுக்கள் - ஆட்டங்கள் இவற்றைப் பற்றி நம்மில் சிலர் ஆய்வு நடத்த வேண்டும் ஒரு கல்லூரியில் சில மாணவர்கள் நடத்திய ஆய்வுகளில் பல உண்மைகள் வெளிவந்ததைக் கண்டு நான் திடுக்கிட்டேன். நம்முடைய இளைஞர்களில் பலர் விழிப்பாடு தான் இருக்கிறார்கள். குறுக்கு வழி வாணிபப் போட்டிக்காக நடைபெறும் சீரழிவுகள் அவர்களுக்குத் தெரியாமல் இல்லை.

உண்மையை மக்களுக்கு எடுத்துச் சொல்லி நாட்டில் கலாசாரப் பண்பாட்டு மறுமலர்ச்சியை ஏற்படுத்த நமக்கு ஓர் அமைப்பு வேண்டும். கட்சி அரசியலுக்கும் சமயச் சார்புக்கும், பிற கட்டுப்பாடுகளுக்கும் அப்பாற்பட்ட பண்பாட்டுத் துறை சிந்தனையாளர்கள் நாட்டில் அங்கங்கே இல்லாமல் இல்லை. முதலில் மாவட்டத்தின் தலைநகரம் தோறும் ஒரு கலாசார பண்பாட்டு நிறுவனம் இருந்தால் போதும். நாளடைவில் இளைஞர்களின் ஆதரவு பெற்று அது ஓர் புது வாழ்வு இயக்கமாகவே நாட்டில் வளர்ந்துவிடும்.

நமக்குப் பொருளாதார வளர்ச்சி மட்டும் போதாது. பொருளை இழந்தால் மீட்டுவிடலாம். மனிதனுடைய நல்லுணர்ச்சிகளையோ, நற்சிந்தனைகளையோ, நற் செயல்களையோ நாம் இழந்து விடுவோமானால் பிறகு அவற்றை மீட்கப் பல தலைமுறைகள் ஆகலாம்.

★ ★ ★

## கலை, மனப் பண்பு

கலை, ஓர் இன மக்களின் மனப் பண்பு, இவ்வின மக்களிடையே தோன்றும் தெளிவு, வீரம், ஆகியவற்றின் எடுத்துக்காட்டு! எனவே கலை இன வளர்ச்சிக்கு ஏற்றபடி மாறியும், விரிந்தும் வருமென்பதே நுண்ணறிவினரின் துணிபு. கலை உலகில், அவ்வப்போது மாறுதல் உண்டாகும் இனத்துக்கோர் கலையும், இடத்தின் இயல்பு, தட்ப வெப்பம் ஆகியவற்றுக்கு ஏற்ற முறையிலும், கலை உண்டாகும், வளரும் மாறும்!

— பேரறிஞர் அண்ணா



# ஒரு எஸ்.டி.சியும் 'மான்மார்க்' குடையும்



பஸ்ஸை விட்டு இறங்கிய ஏகாம்பரம் தன் குடையை விரித்துப் பிடித்துக் கொண்டான். மழை அழுது கொண்டிருந்தது. உடம்பையே சல்லடைக் கண்ணாகத் துளைத்துவிடத் தயாராகி விட்டது மாதிரி ஒரு சில துளிகள் காற்றின் வீச்சால் வேகத்தோடு மேலே விழுந்தன. பஸ்ஸை விட்டு இறங்கிய சிப்பந்திகள் ஓட்டமும் நடையுமாக ஐம்பதடி தூரத்திலிருந்த ஆபீஸ் வரந்தாவை நோக்கி விரைந்தனர். நல்ல வேளை, ஏகாம்பரம் அன்று குடையோடு வந்திருந்தான்.

முன்னும் பின்னும் குடையில்லாதவர்கள் விரைந்து போவதைப் பார்த்ததும், யாருக்காவது உதவி செய்யலாமே என்ற நினைப்பில், ஏகாம்பரம் திரும்பிப் பார்த்தான். தலையில் கைக்குட்டையைப் போட்டுக்கொண்டு, கையிலிருந்த தோற்பையைமார்போடுஅணைத்த படியே பின்னே வந்துகொண்டிருந்தார் அவர்.

'யாரது?...ஓ! நம்ம ஏ. எஸ்... குடை கொண்டுவல்லே போலிருக்கு...'

ஏகாம்பரம் திரும்பிப் பார்த்துவிட்டு, பவ்யமாக தயங்கி நின்று, "குடைக்குள்ளே வந்துடுங்கோ சார்..." என்றான். அவரும், அந்த அழைப்பை எதிர்பார்த்துக் காத்திருந்தவரே போல ஓடிவந்து குடைக்குள் ஒடுங்கிக் கொண்டார். ஏகாம்பரத்திற்குப் பெருமை பிடிபடவில்லை. தன்னுடைய மேலதிகாரி தன் குடையின் கீழ் வருகிறார் என்ற பெருமையாலும்—அதே நேரத்தில் மதிப்பு கலந்த அச்சத்தாலும்—அவன் தடுமாறிப் போனான். மழைச்சாரல் அவர் மீது துளியும் பட்டுவிடாமல் அவர் பக்கமாகவே குடையை வாகாகச் சாய்த்துப் பிடித்துக்கொண்டான். அவர் அவனைவிட உயரமாக இருந்ததால் தூக்கியே பிடிக்க வேண்டியிருந்தது. சிங்கராச்சாரி தெருவில் ஸ்ரீபார்த்தசாரதி ஸ்வாமி திருவீதி வலம்வரும்போது பட்டுக் குடைகளைத் தூக்கிப் பிடித்துக் கொண்டே செல்லும் காட்சியை அவன் நினைத்துக் கொண்டான். வலது தோளுக்குமேல், குடைக் கம்பியிலிருந்து நழுவி, அதிர்ந்து விழுந்த நீர்த்துளிகள் அவனுடைய அழுக்குப்படிந்தசட்டையை நனைத்தன.

ஆபீஸ் வரந்தாவை அடைந்ததும் ஏகாம்பரத்தை நோக்கி, ஆளையே சுருட்டி விழுங்கிவிடுவது போன்ற புன்னகையுடன் அவர் சொன்னார்: "ரொம்ப தேங்க்ஸ்...நான் கொஞ்சம் கேன்டீன் வரை போகணும்... நீங்கள்..."

ஏகாம்பரம் அவர் சொல்ல வந்ததைப் புரிந்துகொண்டு "குடைதானே ... பரவாயில்லை... நீங்க எடுத்துட்டு போயிட்டு வாங்க" என்று அவர் கையில் குடையைத் திணித்துவிட்டு வராந்தாவிற்குள் தாவினான்...

அன்று பகல் முழுதும் எல்.டி.சி. ஏகாம்பரத்திற்குப் பெருமை தாள முடியவில்லை. அசிஸ்டண்ட் செகரட்டரி ஒருவர் தன்னிடம் உதவி பெற நேர்ந்ததை எண்ணி அவன் பூரித்துப் போனுன். 'என்ன இருந்தாலும் நம்ம ஏ. எஸ். நல்ல மனுஷன்...எவ்வளவு நல்லாப் பேசருர்? என் பேரைக்கூட அவர் கேட்கலே...ரொம்ப நாள் பழகின நண்பன் கிட்டே உரிமையோடு கேட்கிறது மாதிரி அவர் நடந்து கொண்டார். என்னை அவர் நல்லாத் தெரிஞ்சி வெச்சுருக்கார்...தெரியாம இருக்குமா? எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்ச் மூலம் இந்த டென். ஏ. ஒன் வேலைக்கு வந்தப்போ அவர்தானே இண்டர்வ்யூ நடத்தினுர்!...மனுஷனுக்குக் கொழுத்த ஞாபகசக்தி... ஆபீஸ்லே கூடப் பேசிக்கிருங்களே...'நம்ம ஏ. எஸ். ஒருத்தரை ஒரு முறை பார்த்தாப் போதும், ஆளை நல்லா ஸ்டடி பண்ணிடுவார்...எப்பவும்பேரைக் கூட இனியஷியலோட சேர்த்து தான் கூப்பிடுவார்'...உம்... ஞாபக சக்தி இல்லேண்ணு மினிஸ்ட்ரியல் சர்வீஸ்லே நிர்வாகம் பண்ணிக் குப்பை கொட்ட முடியுமா? அவரு டி. எஸ். ஆகப்போறதா பேசிக்கிருங்க...ப்ரமோஷன் லிஸ்ட்லே அவர்தான் டாப்லேஇருக்காராம்.'

ஏகாம்பரத்தின் சிந்தனை அவரையே சுற்றிச் சுற்றி வந்தது. தன்னை ஏ. எஸ். ஞாபகம் வைத்துக் கொண்டிருக்கிருர் என்கிற நினைவே கர்வம் ஊட்டுவதாக இருந்தது.

மாலை ஐந்து மணிவரை ஃபைல் களோடு மூழ்கிக் கிடந்த அவன், வீட்டுக்குப் புறப்பட எண்ணி, இருக்கையை விட்டு எழுந்தான். வருமா, வராதா என்று தீர் மானிக்க முடியாதபடி மழை மேகம் வானம் முழுதும் இருண்டு குடை போல் கவிந்திருந்தது. நாலைந்து முறை இருமிக் கொண்டான். நான்கு தூறல் போட்டால் போதும்...அடங்கிக் கிடக்கும் ஆஸ்துமா அவனேடு தோழமை கொள்ளத் தொடங்கி விடும்.

ஏ. எஸ். இன்னும் குடையைத் திரும்பி அனுப்பவில்லை. போய்க் கேட்கலாமா என்று நினைத்தான். 'சே! நாமாகப் போய்க்கேட்டால் எதாவது நினைத்துக் கொள் வாரே.'

இரவு சாப்பாட்டு நேரத்தில், தன் மனைவி "குடையை ஏன் கொண்டு வரவில்லை?" என்று கேட்டபோது, "குடைதானே, ஆபீஸ்லேயே வச்சிட்டு மறந்துட்டு வந்துட்டேன். நாளைக்கு எடுத்துக்கலாம்" என்று கூறி சமாளித்துக் கொண்டான்.

"ஆபீஸ்லே வெச்சிட்டு யாராவது மறந்துட்டு வருவாங்களா? காலம் கிடக்கிறகிடையிலே எவனுவது எடுத்துட்டுப் போயிட்டா திரும்பி வருமா? அந்தக் குடை வாங்கப் பட்டபாடு அதுக்குள்ளே மறந்து போச்சு போலிருக்கு...இப்ப மழை கிழை பேஞ்சா எப்படி வெளியே போவீங்க...?" என்று மனைவி கேட்டபோது அவனுக்குச் சற்று வருத்தமாகத்தான் இருந்தது.

அடுத்த நாள் தன் ஊழியர் மூலம் ஏ. எஸ். தன் குடையைத் திருப்பியனுப்புவார் என்று எதிர் பார்த்தான். குடை வரவில்லை. மறுநாளும் வீட்டில் மனைவியின் அர்ச்சனை கிடைத்தது.

ஒருவாரம் ஆகிவிட்டது. அவன் எதிர்பார்த்தது நடக்கவில்லை. சிரமப்பட்டு—'வாயைக் கட்டி வயிற்றைக் கட்டி' என்பார்களே அதுமாதிரி—சிக்கனமாக இருந்து சேர்த்து, மழைக்கால உபயோகத்

தின் பொருட்டு அவசரத்தேவைக் கென்று, இப்ராஹிம் கம்பெனி யில் வாங்கிய அந்தப் புத்தம் புதிய 'மான் மார்க்' குடை, அவன் கையை விட்டுப்போனது, அவனைப் பொறுத்தவரை ஈடு செய்ய முடியாது இழப்பாகவே தோன்றியது.

ஒரு நாள் காலை பதினேரு மணியளவில் ஏ. எஸ். ஸிட மிருந்து அழைப்பு வந்தது. 'குடையைத் திருப்பித் தருவதற் காகத் தான் அழைக்கிருர். ஊழியர் மூலம் கொடுத்தனுப்ப லாம்...நேரடியாக நன்றி சொல்ல அழைக்கிருர் போலும்! என்ன இருந்தாலும்பண்பானமனுஷன்... அவர் 'நன்றி'ன்னுசொல்றப்போ, 'என்னங்க...இது என்ன உதவி. இதுக்குப்போய் நன்றி சொல்ல ணுமா'ன்னு நான் சொல்லணும்' என்றெல்லாம் நினைத்துக் கொண்டான்.

ஏகாம்பரம் கதவைத் தள்ளிக் கொண்டே உள் ளே சென்று, ஏ. எஸ். ஸின் முன் நின்ருன், வணங் கிஞன்.

முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்க, வந்தவனை உட்காரும் படிக் கூடச் சொல்லாமல் கீழே குனிந்த படியே "என்னய்யா இத்தனை மிஸ்டேக்ஸ்...டைப் பிஸ்ட் அடிச்சு வெச்சதைப் பார்த் துக் கம்பேர் பண்ணித் திருத்தக் கூடத் தெரியலே. உன்னை நம்பி நான் ஸைன் பண்ணிட்டா மேலே இருக்கிறவன் என் முகத்திலே விசிறி அடிப்பானேய்யா......... மேனுஸ்கிரிப்டையும் டைப்டு காப்பியையும் ஒத்துப்பார்க்கத் தெரியாத நீ சொந்தமா என் னய்யா டிராஃப்ட் போட்டு கிழிக் கப் போறே..." என்று சீறி விழுந்தார்.

ஏகாம்பரத்திற்குத் தொண் டையை யாரோ இறுக்கிப் பிடிக் கிருற்போல் இருந்தது; வார்த் தையே வரவில்லை. மேலெல் லாம் வியர்த்துக்கொட்ட, சர் வாங்கமும் நடுங்கிய வண்ணம் "எக்ஸ்க்யூஸ்மிசார்...இனிமெ சரி யாச் செய்யறேன்" என்ருன்.

அவர் தலையை நிமிர்த்தி, எரித்து விடுகிறவரைப்போல ஏற இறங்கப் பார்த்தார். அவர் கை மட்டும் சிவப்பு நாடாவால் கட்டப் பட்டிருந்த பைலை—முடிச்சை— மெல்ல அவிழ்த்துக் கொண்டிருந் தது.

"உம் பேர்?"

"ஏ. கே. ஏகாம்பரம்..."

"சரியா வேலையைப் பார்க்க ணும்...இப்படியெல்லாம் அலட்சி

**எழில்முதல்வன்**

யமா இருந்தா சீட்டைக் கிழிச்சி வீட்டுக்கு அனுப்பிடுவேன்..."

அவன் பேசவில்லை; குதித்து வந்த இருமலை அடக்கிக் கொண்டு, கலங்கிய விழிகளோடு அந்த அறையை ஒரு முறை பார்த்தான். ஒரு ஸ்டாண்டில் அவனுடைய புத்தம் புதிய மான் மார்க் குடை தூக்குப் போட்டுக் கொண்டது மாதிரிப் பரிதாப மாகத் தொங்கிக் கொண்டிருந் தது.

"ஏன் நிக்கறே? போய்யா!"

அவருடைய குரல் தன்னைப் பிடரியைப் பிடித்து வெளியே தள்ளுவதுபோல் உணர்ந்தான். சட்டெனத் திரும்பினுன்.

ஏகாம்பரத்திற்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. அவர் தன்னிடம் அப்படிச் சீறி விழுந்தது கூடத் தவருகத் தெரியவில்லே. முன்பின் தெரியாதவரிடம் கேட்பதுபோல் அல்லவா 'உம் பேர்'? என்று கேட்டார். அதைத்தான் அவனல் பொறுத்துக்கொள்ள முடியவில்லே. 'நம்மிடம் குடையை வாங்கி வைத்துக் கொண்டு இத்தனை நாளாகியும் கொடுக்காமல் இருக்கிற இந்த ஆள், அந்த நினேவே இல்லாதவர் மாதிரி, இப்படிக் கடுமையாக நடந்து கொண்டாரே! அவரால் எப்படி அவ்வாறு நடந்துகொள்ள முடிந்தது?'

மறுநாள் அவன் வீட்டை விட்டுப் புறப்பட்ட போதே ஒரு முடிவுக்கு வந்திருந்தான். 'இன்றைக்கு எப்படியும் குடையைக் கேட்டு கையோடு வாங்கிவிட வேண்டும். கொடுத்ததைத் தானே கேட்கிறேம். இதிலே என்ன தப்பு? ஒரு வேளை அந்த ஆள் மறந்தே கூடப் போயிருக்கலாம்'.

அவன் ஆபீசில் நுழைந்த போதே, எதிரே தூரத்தில், எதிர்ப்புறத்து வாசல் வழியாக ஏ. எஸ். வந்து கொண்டிருப்பதைப் பார்த்தான். ஆ! அந்தக் குடையைத்தான் வாக்கிங் ஸ்டிக் மாதிரி அந்த மனுஷர் எவ்வளவு லாவகமாக வீசி வீசி நடந்து வருகிருர்!

குடையில்லாமல் நாலேந்து நாள் மழையில் நனேய நேர்ந்ததால், அவனுள்ளே ஒடுங்கியிருந்த ஆஸ்துமா இழுப்பு, அழையாத விருந்தாளியைப் போல் தன் பிரசன்னத்தை உணர்த்தத் தொடங்கி இருந்தது. மூச்சுவிடும் போது 'கொர்' 'கொர்' என்ற தளர்ந்த ஓசை ஆரோகண அவரோகண கதியில் மெல்லக் கேட்டது. ஆபீசில் முடுக்கி விட்ட இயந்திரம்போல் தன் கர்மயோகத்தை அவன் செய்து முடித்துவிட்டு, மாலேயில் ஆபீஸ் முடியும் நேரத்தில் ஏ. எஸ்.ஸின் அறைக்குள் நுழைந்தான்.

அவன் கால்கள் அச்சத்தால் பின்னிக் கொண்டன. கழுத்தில் சுற்றியிருந்த மப்ளரை எடுத்துக் கையில் வைத்துக் கொண்டான். அதுவரை அவனிடம் இருப்பதாக அவன் நம்பிக்கொண்டிருந்த துணிச்சல் எங்கேயோ ஒளிந்து கொண்டு விட்டது. குடை என்கிற சொல்லேக் கூட அவனல் சொல்ல முடியவில்லே. நாக்கு அண்ணத்தோடு ஒட்டிக்கொண்டது.

"என்னய்யா?"

'உன்னே யார் அழைத்தார்கள்? என்ன வேலேயாக நுழைந்தாய்?' என்று கேட்காமல் கேட்டது ஏ. எஸ். ஸின் குரல்.

"நேத்து நடந்ததுக்கு மன்னிப்புக் கேட்டுக்க வந்தேன்..."

"அதுக்கென்னய்யா இப்ப... போ, போயி வேலேயை பாரு..."

"இல்லே..."

அவன் எதையோ சொல்வதற்காக வார்த்தைகளேத் தேடினன்.

"சரி, சரி, போய்யா?"

ஏகாம்பரம் போன வேகத்திலேயே திரும்பி விட்டான். வெளியே வந்த பிறகு அவனுக்குத் தன்னேப் பற்றியே மிகவும் அகௌரவமான அபிப்பிராயம் ஏற்பட்டது. 'நான் குடையைக் கேட்பதற்குத் தானே போனேன்! மன்னிப்புக் கேட்கவா? சே! இத்தனே கோழையாக இருக்கக்கூடாது!'

மழை மாதமாகிய டிசம்பரும் கழிந்தது. ஒரு புதிய குடை வாங்க வேண்டுமென்று அவன் ஆசைப்பட்டது நிறைவேருமலே போய் விட்டது. உப்புக்கும்

துளிக்குமே குடும்பம் திண்டாடுகிற போது குடை வேறு கேடா?

அன்று மாலை அவன் ஆபீசை விட்டுப் புறப்பட்டான்; மாடிப்படி வழியாக இறங்கி அவன் வராந்தாவை வந்தடைந்த போது வெளியே சிறு தூறல் போடுவது தெரிந்தது. ஆபீசில் உள்ளவர்கள் ஒவ்வொருவராக வெளியேறிக் கொண்டிருந்தனர்.

அதோ—

ஹெல்த் செக்ஷன் சூப்பிரிடண்டெண்ட் ராகவாச்சாரி சின்னஞ்சிறு குடையை கவிழ்த்து வைத்தாற் போலிருக்கும் தன் அப்ளாக் குடுமியை அவிழ்த்து உதறி முடிந்து கொண்டே போகிறார்.

—டைப்பிஸ்டு சோபனா...

—ஏ–2. சேஷாத்திரி...

—அட்டெண்டர் ஆராவமுது...

—வாட்டர்பாய் செல்லையன்...

ஏகாம்பரம் அனைவரையும் வேடிக்கையாகப் பார்த்துக் கொண்டே நின்றான்.

ஏ. எஸ்.ஸும் புறப்பட்டுவிட்டார்.

ஷெட்டில் இருந்த காரை—(அது அவருக்குப் புதிதகாக 'அலாட்' ஆகி வந்திருந்த ஹெரால்டு)—டிரைவர் கொண்டு வந்து வாசலில் நிறுத்தினான்.

பைல்களால் நிரப்பப்பட்டு, தவளையை விழுங்கிவிட்டுத் திணறும் நீர்ப்பாம்புக் குட்டிபோல் சூல் கொண்டிருந்த தோற்பையைக் கையில் எடுத்துக்கொண்டு வந்த ஏ. எஸ்., காரின் கதவைத் திறந்து கொண்டு உள்ளே உட்கார்ந்தார். அவருடைய பார்வை வராந்தாவில் எங்கோ பார்த்தபடி நின்று கொண்டிருந்த ஏகாம்பரத்தின் மீது விழுந்தது.

"ஹலோ...மிஸ்டர். ஏ. கே. ஏகாம்பரம்..."

—கைதட்டி அழைத்தார்.

அவன் வந்தான்.

"ஒரு சின்ன ஹெல்ப்...என் அறையிலே குடையை வெச்சுட்டு மறந்துட்டு வந்துட்டேன்...கொஞ்சம் எடுத்து வரலாமா?"

ஏகாம்பரம் அவசரமாகத் திரும்பினான். சில நிமிடங்களுக்குப்பின் அவன் குடையோடு திரும்பிவந்தான். பிறந்து ஒரு வாரம்கூட ஆகாத குழந்தையை அதன் தாய் எவ்வளவு பரிவோடும் பத்திரமாகவும் எடுப்பாளோ—அப்படி எடுத்து வந்து பணிவோடு காருக்குள் வைத்தான்.

அந்த விநாடியிலும் கூட அந்தக் குடையின் மீது அவன் பாத்தியதை கொண்டாடவில்லை. கார் பறந்து மாயமாய் மறைந்தது.

பிறகென்ன?

ஏ. எஸ். குடையைத் திருப்பிக் கொடுத்தாரா இல்லையா என்று எனக்குத் தெரியாது. ஒன்று மட்டும் தெரியும். டென்—ஏ-ஒன் வேலைபார்த்து வந்த ஏ. கே. ஏகாம்பரம் வேலைநீக்கம் செய்யப்பட்டு இப்பொழுது ஏறத்தாழ இரண்டுவாரம் ஆகிறது. ★

## உலக வரலாறு

இருட்டறையில் இன்னலுற்ற மக்கள் இன்பம் காண விழைந்த ஒவ்வொரு சமயமும் ஒடுக்கப்பட்டனர். ஆண்டை — அடிமை! உயர்ந்தவன் — தாழ்ந்தவன்! மதகுரு — பக்தன்! மிராசு — உழவன்! பிரபு—பணியாளன்! முதலாளி — தொழிலாளி! இவர்களிடையே ஏற்பட்ட வர்க்கப் போராட்டங்களே உலக வரலாறாகும்!

–பேரறிஞர் அண்ணா

# கல்

**கல் !—**

என்னை இப்படித்தான் எல்லோரும் பெயரிட்டு அழைக்கிறார்கள். நான் பிறப்பில் மூத்தவன். ஏன்? படைப்பின் தலைமகன் என்று கூடச் சொல்லலாம். சொல்லுகிறார்கள்.

“கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே...” என்று தொடங்கும் பழமையான பாடலிலே கூட என்னைத்தான் முன் வைத்துப் பெருமைப் படுத்துகிறார்கள். அந்த அளவுக்கு என்மீது புகழையும், பெருமையையும்ஏற்றி வைத்தும் கூட—

இதோ...நான் இங்கே தேடுவாரற்று ஒரு ஒதுக்குப்புறத்தில் கிடக்கிறேன். என்னைச் சுற்றி புல்லும் புதரும் மண்டிக்கிடக்கின்றன.

தூரத்து மலைச்சரிவிலிருந்து ஓடிவரும் சிற்றருவி என் உடலைக் கழுவித்தூய்மையாக வைத்திருக்கிறது. காலங்கள் ஓடி மறைகின்றன; பருவங்கள் மாறுகின்றன; இரவு; பகல்; வெயில்; மழை; பனி; காற்று; எல்லாவற்றுக்கும் நான் ஈடு கொடுத்துக் கொண்டிருக்கிறேன். இருந்தும் என்னைத் தேடுவாரில்லை. நாடுவாரில்லை.

நான் காலங்காலமாக மௌனமாக அழுது கொண்டிருக்கிறேன். என்னைச் சுற்றிலும் முளைத்துக் கிடக்கும் புல் பூண்டுகளைக்கூட மனிதன்—கால் நடைகளுக்கு உணவாக்கி அறுத்துக் கொண்டு போய்விடுகிறான். ஆனால் நானோ இருந்த இடத்தை விட்டு அசையாமல் அப்படியே கிடக்கிறேன். விரக்தி ஏற்படும் வேளையில்— என்னை நானே சபித்துக் கொண்டு, குமுறும் நேரத்தில், குளிர்ந்த காற்றலைகள் என் திரடேறிய மேனியின் மேல் புரண்டுசெல்கின்றன.

ஆ! அது எவ்வளவு இதமாக, இன்பமாக இருக்கின்றது தெரியுமா? என் துன்பதுயரங்களையெல்லாம் மறந்து அப்படியே அமைதியில் மூழ்கி விடுகிறேன்—

காலம் சுழல்கிறது.

அருவியில் நீர் வற்றி விட்டது. பச்சையும் பசுமையுமாக மிளிர்ந்த சோலைகளில் கூட இலைகள் பழுத்து உதிர ஆரம்பித்து விட்டன. அங்குமிங்கும் அலை மோதிப் பறந்து திரியும் சருகுகளின் சலசலப்பைக் கேட்டுக் கேட்டுச்செவிகள் கசந்து விட்டன.

வழக்கமாக என்மீது வந்து அமர்ந்து இளைப்பாற்றிக் கொள்ளும் அந்தப் பறவைகூட இப்பொழுது வருவதில்லை.

எத்தனை காலங்களுக்குத் தான் நான் இப்படியே வாழ்வது? எனக்கு விமோசனமே கிடையாதா? ஐயோ, யாராவது என்னைப் பயன் படுத்திக் கொள்ளுங்களேன்—என்வாழ்வு முழுவதும் இப்படியே கழிந்து விடத்தான் போகிறதா? யுகம் யுகமாக என் இதயத்துக்குள் அடக்கி வைத்திருக்கும் ஆசைகளை நிறைவேற்றிக் கொள்ள வழியே இல்லையா?

ஒரு நாள்—

யாரோ சிலருடைய காலடியோசைகளைக் கேட்டு அதிர்ந்து போனேன். மிகமிக அருகில் வந்தார்கள்; தொட்டுத் தடவித் தட்டிப்பார்த்தார்கள்.

# இளமைப்பித்தன்

இவர்கள்யார்?

மனிதர்கள்!

இதுஎன்ன? என்னை எங்கே எடுத்துச் செல்லுகிறார்கள்? எதற்காக இப்படி என்னை புரட்டி உருட்டு கிறார்கள்? நான் எங்கே போகிறேன்?

கண்ணிருந்தும் என்னை ஏறெடுத்துக் கூடப் பார்க்காத இந்த மனிதர்களிடம் எனக்கென்ன வேலை? நான் கல்; வெறும் கல்; அவர்களின் காலடிகளிலே மிதிபட்டு, உதைபட்டு மதிப்பிழந்து கிடக்கும் வெறும் சடப்பொருள். இப்போது ஏன் உறவு கொண்டாடுகிறார்கள்?

'கல்—கல்—கல்'—

இந்த மெல்லிய ஒலிகளின் ஓசையோடு நாட்கணக்காய், மாதக்கணக்காய் எத்தனைசிற்றுளிகளை என் மீது பாய்ச்சி ஓடவிட்டார்கள் தெரியுமா? சித்திரவதை செய்து செதுக்கிச்செதுக்கிப் புண்படுத்திவிட்டார்கள் தெரியுமா?

கடைசியாக ஒரு மனிதன் வந்தான்.

அவன் இதயத்தில் மலர்ந்த கனவுகளுக்கு ஏற்றமாதிரி ஏதோ ஒரு வடிவம் கொடுத்தான். நீண்ட நெடுங்காலமாக அவன் நெஞ்சில் ஊறிய ஒரு கவிதையை, கற்பனையை, என் மீது உருக்கி ஊற்றி-என்னை ஒழுங்குபடுத்திவிட்டான். அவனுடைய இலட்சியத்தைநிறைவேற்றிக் கொண்டு—இதயதாகத்தைத் தணித்துக் கொண்டு போய் விட்டான்.

இப்போது நான் கல் அல்ல; சிலை! சிற்ப இலக்கியத்தின் சிகரத்தில் நின்று கொண்டிருக்கிறேன். ஆனால்—

இந்த இருட்டு மண்டபத்தில் ஏன் என்னைச் சிறைவைத்திருக்கிறார்கள்?

என் மீது ஏன் மலர்களைச் சொரிகிறார்கள்? அன்று என்னை மதிக்காத மனிதர்கள்—இன்று என் காலடியில் விழுந்து வணங்கி கோடிக் கணக்கான வரங்களைக் கொடுக்கச் சொல்லி மண்டியிட்டுக் கேட்கிறார்களே ஏன்? கல்லாகக்கிடந்த நான் சிலையாக மாறியதாலா!

"இறைவனே! என்னை மீண்டும் கல்லாக்கி விடு; நான் தனிமையில் இருக்கவேண்டும். இந்த மனிதர்கள் எங்கோ போய்கொண்டிருக்கிறாகள்! இதுவே என் 'கல் மனத்தில்' ஒலிக்கும் கடைசிக் குரல்—

ஆம்! நான் கல்லாக வேண்டும்!

★

## முயற்சி கூலி தரும்

வாழ்க்கையில் நாம் சிறந்த பொருள்களை வாழ்க்கைக்கு வளமான பொருள்களைச் சிறிதும் வாட்டமின்றிப் பெற முடியாது. அதற்கு ஓயாத உழைப்பும் சலியாத முயற்சியும் வேண்டும்!

—பேரறிஞர் அண்ணா

# இளந்தமிழா உன்னைக்காண

இளந்தமிழா! உன்னைக்காண
இன்பம் மிகப் பெருகுது
இதுவரைக்கும் எனக்கிருந்த
துன்பம் சற்றுக் குறையுது
வளந்திகழும் வடிவினோடும்
வலிமைபேசி வந்தனை
வறுமைமிக்க அடிமைநிற்கு
வந்தவூக்கம் கண்டுநான்
தளர்ந்திருந்த சோகம்விட்டுத்
தைரியங்கொண் டேனடா
தமிழர்நாட்டின் மேன்மைமீளத்
தக்ககாலம் வந்ததோ!
குளிர்ந்த எந்தன் உள்ளம்போலக்
குறைவிலாது நின்றுநீ
குற்றமற்ற சேவை செய்து
கொற்றமோங்கி வாழ்குவாய்.

அன்பினோடு அறிவு சேர்ந்த
ஆண்மை வேண்டும் நாட்டிலே
அச்சமற்ற தூயவாழ்வின்
ஆற்றல்வேண்டும் வீட்டிலே
இன்பமான வார்த்தைபேசி
ஏழைமக்கள் யாவரும்
எம்முடன் பிறந்தபேர்கள்
என்ற எண்ணம்வேண்டுமே
துன்பமான கோடிகோடி
சூழ்ந்துவிட்ட போதிலும்
சோறுதின்ன மானம்விற்கும்
துச்சவாழ்வு தொட்டிடோம்
என்பதான நீதியாவும்
இந்த நாட்டில் எங்கணும்
இளந்தமிழா! என்றும்நின்று
ஏடெடுத்துப் பாடுவாய்.

**நாமக்கல் கவிஞர்**

# இன்பம் மிகப் பெருகுது!

ஓடிஓடி நாட்டிலெங்கும்
உண்மையைப் பரப்புவாய்
ஊனமான அடிமைவாழ்வை
உதறித்தள்ள ஓதுவாய்
வாடிவாடி அறம்மறந்து
வறுமைப்பட்ட தமிழரை
வாய்மையோடு தூய்மைகாட்டும்
வலிமைகொள்ளச் செய்குவாய்
கூடிக்கூடிக் கதைகள் பேசிச்
செய்கையற்ற யாரையும்
குப்பையோடு தள்ளிவிட்டுக்
கொள்கையோடு நின்று நீ
பாடிப்பாடித் தமிழின் ஓசை
உலகமெங்கும் பரவவே
பார்த்தயாரும் வார்த்தைகேட்டுப்
பணியுமாறு சேவைசெய்.

தமிழனென்ற பெருமையோடு
தலைநிமிர்ந்து நில்லடா
தரணியெங்கும் இணையிலாஉன்
சரிதைகொண்டு சொல்லடா
அமிழ்தமென்ற தமிழிசையை
அண்டமுட்ட உலகெலாம்
அகிலதேச மக்களுங்கண்
டாசைகொள்ளச் செய்துமேல்
கமழ்மணத்தின் தமிழில்மற்ற
நாட்டிலுள்ள கலையெல்லாம்
கட்டிவந்து தமிழர் வீட்டில்
கதவிடித்துக் கொட்டியே
நமது சொந்தம் இந்தநாடு
நானிலத்தில் மீளவும்
நல்லவாழ்வு கொள்ளச் சேவை
செய்துவாழ்க நீண்டநாள்.

வெ. இராமலிங்கனார்

# பட்டிமண்டபம்

பட்டி மண்டபம் என்பது இலக்கிய ஆராய்ச்சியாளர்களுக்கு ஒரு விருந்து மண்டபம் போன்றது. ஒன்றற்கொன்று மாறுபட்ட கருத்துக்களை யுடையவர்கள் தத்தம் கருத்துத்தான் உண்மையானது; சிறந்தது என்று வலியுறுத்திப் போராடும் இடந்தான் பட்டி மண்டபம் ஆகும். போராட்டம் நாட்டிலே நடந்தால், உயிர்க் கொலைகள் நடக்கின்றன; பழிச் செயல்கள் தொடர்கின்றன; பட்டினியும் துன்பமும் மக்களை வருத்துகின்றன; ஆள்வோர்க்கும் அவை மனக்கவலை தருவதாக அமைகின்றன. ஆனால் இலக்கிய அரங்கிலே நிகழும் போராட்டங்கள் அறிவை வளர்ப்பனவாகவும், மொழியுணர்வைத் தூண்டுவனவாகவும், உண்மை ஆய்வனவாகவும் அமைகின்றன. எனவே இளந்தமிழன் இதழில் பல பட்டி மண்டபங்களை நடத்தலாம் எனத் திட்டமிட்டுள்ளோம்.

முதலாவதாக பட்டி மண்டபத்தில் முத்தமிழ்க் காப்பியமாகிய சிலப்பதிகாரத்தை ஆய்வுக்குரிய பொருளாக எடுத்துக் கொள்ளலாம்.

சிலப்பதிகாரம் உண்மைக் கதையா? கற்பனைக் கதையா? என்னும் பொருளை ஆராயலாம்.

சிலப்பதிகாரக் கதையைப் படிக்கும்போது அது ஓர் உண்மைக் கதையாகத்தான் இருக்க வேண்டும் என்ற உணர்வு தோன்றுகின்றது. சிலப்பதிகார நிகழ்ச்சிகள் பல வரலாற்றுச் சான்றுகளாக அமைவதைப் பார்க்கிறோம். ஆகவே இக்கதை உண்மை வரலாறே என்று முடிவு செய்யத் தோன்றுகிறது.

சிலப்பதிகாரத்தைப் படிக்கும் போது அதில் வரும் பல நிகழ்ச்சிகள், துணைக் கதைகள், உட்கதைகள் அப்பட்டமான கற்பனைகளாக இருக்கின்றன. அவை அறிவு வளர்ச்சி மிகுந்த இக்காலத்து மக்கள் ஏற்றுக் கொள்ளத்தக்க நிகழ்ச்சிகளாக இல்லை. எவ்வகையிலும் அவை நடந்திருக்க முடியாதென்றே தோன்றுகிறது.

சிலப்பதிகாரம் உண்மை வரலாறு? கட்டுக் கதையா? என்ற தலைப்பில், சிலப்பதிகாரத்திலிருந்தும், மற்ற தமிழ்ப் பழ நூல்களிலிருந்தும் தக்க ஆதாரங்களைக் காட்டி உங்கள் கருத்துக்களைத் தெளிவான நடையில் எழுதியனுப்ப வேண்டுகிறோம். அடுத்த இதழிலிருந்து இரண்டு கருத்துக்களுக்கும் ஒவ்வொரு கட்டுரை வீதம் தொடர்ந்து வெளிவரும். தகுந்த புலமை ஆராய்ச்சியில்லாத கட்டுரைகள் ஏற்றுக் கொள்ளப்பெற மாட்டா. வெளிவந்த கட்டுரைகளில் இரு சார்பிலும் தேர்ந்தெடுக்கப் பெற்ற இரண்டு கட்டுரைகளுக்கு, பாராட்டும் தக்க பரிசும் ஆண்டு முடிவில் ஒரு சிறப்பு நிகழ்ச்சியில் வழங்கப் பெறும். பரிசு எவ்வளவு என்று நாம் இப்போது கூறப் போவதில்லை. ஆனால் தகுதிக்குத் தகச் சிறந்த பரிசாகவே இருக்கும்.

புலவர்களே, இலக்கிய வித்தகர்களே, தமிழ் எழுத்தாளர்களே உங்கள் ஆராய்ச்சியைத் தொடங்குங்கள். கட்டுரைகளை எழுதியனுப்புங்கள். தலைப்பில் பட்டி மண்டபம் என்று குறிப்பிட்டு கட்டுரைகளை அனுப்பவேண்டிய முகவரி: ஆசிரியர், இளந்தமிழன், 202, ஜானிஜான்கான் தெரு, சென்னை—14.

# பழகப் பழகப் பாசம்

எனக்கு அந்த எண்ணம் எழுந்திருக்க வேண்டாம். ஆனால் மனத்தில் தோன்றிய அந்த எண்ணத்திற்கு நான் ஆளாகிவிட்ட பிறகு என்னால் அதை நிறைவேற்றாமல் இருக்க முடியவில்லை.

சொன்னால் யாரும் என்னைப் பைத்தியக்காரன் என்று தான் நினைப்பார்கள். என் மனைவியே அப்படித்தான் நினைத்தாள். இன்னும் அப்படித்தான் நினைத்துக் கொண்டிருக்கிறாள்.

விஷயத்தை உடைத்துச் சொல்லி விடுகிறேனே, கேளுங்கள்.

## இது ஒரு மனோதத்துவக் கதை

வேதாசலம்

பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னால் இந்தக் கதை ஆரம்பமாகிறது. திருவிழாவிற்குப் போனவன் சுவாமியை வணங்கிவிட்டு, வேடிக்கை பார்த்துவிட்டுப் பேசாமல் திரும்பியிருக்கலாம். அப்படிப் பேசாமல் திரும்பியிருந்தால் நான் இப்படி மனவேதனைப் பட்டுக் கொண்டு இருக்க வேண்டி வராது. திருவிழாக் கூட்டத்தில் பெற்றோரைப் பிரிந்த பிள்ளைகளைக் காவலர் முகாமில் (Police Camp) கொண்டு வந்து சேர்த்திருந்தார்கள். அந்தப் பிள்ளைகளைப் பற்றி ஒலி பெருக்கியின் மூலம் அடிக்கடி தகவல் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். பெரும்பாலும், பிள்ளைகள் எல்லோரையும் அவரவர் பெற்றோர் வந்து அடையாளம் சொல்லி அழைத்துக் கொண்டு போய்விட்டார்கள். ஆனால், ஒரே ஒரு பையனை மட்டும் யாரும் வந்து அழைத்துக் கொண்டு போகவில்லை. மூன்று நாட்களாக யாருமே அந்தப் பிள்ளையைத் தேடிக் கொண்டு வரவில்லை.

இன்ஸ்பெக்டர் ரங்கநாதன் என் நண்பர். கடவுளாகப் பார்த்துச் சேர்த்து வைத்த நட்புத்தான். ஏன் இப்படிச் சொல்லுகிறேனென்றால், கோயில்களிலும் திருவிழாக்களிலும் அடிக்கடி சந்தித்துச் சந்தித்து எங்கள் நட்பு வளர்ந்தது என்பதற்காகத்தான். அவர்தான் எனக்கு இந்த விவரத்தைச் சொன்னார். அந்தப் பிள்ளையையும் காண்பித்தார்.

அந்தப் பையனுக்கு இரண்டு வயதிருக்கும். அள்ளி அணைத்துக் கொள்ள வேண்டும் என்ற ஆவலைத் தூண்டுகிற அழகு. கண்டவர்களின் மனக் கவலையைத் தீர்க்கக்கூடிய அந்தச் சுடர் விழிகளில் ஏக்கம் அப்பிக் கொண்டிருந்தது. தாய் தந்தையரைக் காணாததால் ஏற்பட்ட தாபம் போலும்!

“பெற்றோரைக் கண்டு பிடிக்க முடியாவிட்டால் என்ன செய்வீர்

கள்?'' என்று ரங்கநாதனைக் கேட்டேன்.

''என்ன செய்வோம், அநாதை விடுதியில் சேர்த்து விடுவோம்'' என்று அவர் எவ்விதமான உணர்ச்சியுமின்றிப் பதிலளித்தார்.

எனக்கு என்னவோ போலிருந்தது.

அந்தப் பையனை அநாதை என்ற பெயரில் வளரவிடக் கூடாது என்று எனக்குத் தோன்றியது. அந்தச் சிறுவனைப் பார்க்கப் பார்க்க, அவன் அநாதையாக வளரப் பிறந்தவனல்ல என்ற எண்ணம் என் மனத்தின் அடித்தளத்தில் வலுப்பட்டுக்கொண்டே வந்தது என் ஆவலை அடக்க முடியாமல் நான் வாய்விட்டுக் கேட்டு விட்டேன்.

''இன்ஸ்பெக்டர் சார், நான் இந்தப் பையனை வளர்க்க அனுமதிப்பீர்களா? அதாவது அவனுடைய பெற்றோர் அகப்படாவிட்டால், அல்லது அகப்படுகிற வரையில், நான் என் வீட்டில் வைத்து வளர்க்கலாமா?''

இன்ஸ்பெக்டர் ரங்கநாதன் என்னை ஒரு மாதிரியாகப் பார்த்தார். 'இது என்ன பைத்தியக்காரத்தனம்?' என்று கேட்பது போலிருந்தது அந்தப் பார்வை,

என்னைப் போன்ற நிலையில் உள்ளவர்கள் இப்படிப்பட்ட ஆசைகளைக் கொண்டால் அது பலவிதமான எண்ணங்களை உண்டாக்கச் செய்யும் என்பதில் ஐயமென்ன? யாராவது பிள்ளையில்லாத பெரியவர்கள் இப்படி ஆசைப்பட்டால் அர்த்தமுண்டு.

நான் ஓர் இளைஞன். எனக்கு மணமாகி மூன்று ஆண்டுகள் தான் ஆகிறது. ஒன்றரை வயதுக் குழந்தையொன்று வீட்டில் நடை பழகிக் கொண்டிருக்கிறது. அடுத்தடுத்து இன்னும் எத்தனையோ பிறக்கப்போகின்றன இப்படிப் பட்ட நிலையில் உள்ள நான் ஓர் அநாதைக் குழந்தையை எடுத்து வளர்க்க ஆசைப்பட்டது குழப்பத்தைத்தானே உண்டாக்கும்.

சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்ததில் இன்ஸ்பெக்டர் ரங்கநாதன் எனக்கு அந்தக் குழந்தையின் மேல் உண்டாகிவிட்ட அசைக்க முடியாத ஈடுபாட்டைக் கண்டு என் வேண்டுகோளுக்கு ஒப்புக் கொண்டார்.

சில பாரங்களில் கையெழுத்திட்டுவிட்டு நான் அந்தப் பையனை என் வீட்டுக்குத் தூக்கிக் கொண்டு சென்றேன்.

பிள்ளையை இறக்கி விட்டு நான் விஷயத்தைச் சொன்னபோது, ''இது என்ன பைத்தியக்காரத்தனம்?'' என்று தான் என் மனைவி கேட்டாள். ''நமக்கென்ன பிள்ளை குட்டி இல்லையா?'' என்று அடுத்த கேள்வியையும் அவள் கேட்டாள்.

''பிள்ளை குட்டியில்லாதவர்கள் தான் இன்னொரு பிள்ளையை எடுத்து வளர்க்க வேண்டுமா?'' என்று நான் கேட்டபோது அவள் எனக்குப் பைத்தியம் முற்றி விட்டதென்றே நினைத்திருக்கிருள்.

நாட்டில் உள்ள அநாதைகளின் எண்ணிக்கை பற்றியும், அநாதைகள் அதிகமாகிக் கொண்டு போவதால் நாட்டில்

ஏற்படும் தொல்லைகள், சிக்கல்கள் பற்றியும் ஒரு பொருளாதார அரசியல் சொற்பொழிவு செய்து, அநாதைகளை எடுத்து வளர்ப்பவர்களுக்கு, மோட்ச சாம்ராஜ்யத்தில் கிடைக்கும் பலாபலன்களையும், அடுத்த பிறப்பில் உண்டாகும் புண்ணியப் பேறுகளையும் விளக்கி ஓர் இதோபதேசமும் செய்து முடித்த பிறகு, என் மனைவி எனக்கு இட்ட கட்டளை, "உடனே அந்தப் பிள்ளையைத் திருப்பிக்கொண்டு போய் போலீசில் ஒப்படைத்து விட்டு வாருங்கள்!" என்பதுதான்.

இவ்வளவு எடுத்துச் சொல்லியும் அவள் மனம் கரையாதது கண்டு எனக்குக் கோபம் வந்துவிட்டது. "நீ வளர்க்காவிட்டால் போ. நானே இந்தப் பிள்ளையை வளர்த்துக் கொள்கிறேன்!" என்று சொல்லி விட்டேன்.

அன்று ஏற்பட்ட சண்டையில் இரவு நானும பட்டினி; அவளும் பட்டினி. அந்தப் பிள்ளை பசித்து அழுதபோது தூக்கிக்கொண்டு ஓட்டலுக்குப் புறப்பட்டேன்.

என்ன நினைத்தாளோ, அவள் ஓடி வந்து வழியை மறித்தாள். பிள்ளையை என்னிடமிருந்து வெடுக்கென்று தூக்கிக்கொண்டு அடுக்களைப் பக்கம் போனாள். அவள் என்ன செய்தாளோ, எதைக் கொடுத்தாளோ, அப்பொழுதே அந்தப் பிள்ளையின் அழுகை நின்றது.

அதன் பிறகு அவள் என்னிடம் 'பிள்ளையைத் திருப்பிக் கொண்டு போய் ஒப்படைத்து விடுங்கள்' என்று சொல்லவேயில்லை. யாரும் அந்தப் பிள்ளையைத் தேடிக் கொண்டு போலீசுக்கு வரவுமில்லை. அது எங்கள்

# பழந்தமிழ் பழகுக

[கீழ்க்கண்ட பழந்தமிழ்ச் சொற்களுக்கு மும்மூன்று பொருள்கள் கொடுத்துள்ளோம். ஒரு பொருள் சரியானது; மற்றவை இரண்டும் எங்கள் கற்பனை. சரியான பொருளைக் கண்டு பிடியுங்கள் பார்க்கலாம்.

**உங்கள் விடையைச் சரிபார்த்துக்கொள்ள 64—ஆம் பக்கம் பார்க்கவும்]**

1. **வற்கடம்:—வற்றல் —பஞ்சம் —வறுமை**
2. **கேழல் : —கிழட்டு யானை — பன்றி—குள்ளநரி.**
3. **பன்னி : —பன்றி — மனைவி —கிளி.**
4. **அயரியோர்: — கொலைகாரர் —சோம்பேறிகள் — குடியர்.**
5. **பிணிமுகம்: — நோய் — முகமூடி—மயில்.**
6. **மாகம்:— மாமரங்கள் — திசைகள்—பெருங்கிணறுகள்.**
7. **புருவை:—இளமை —அருமை —பெருமை.**
8. **அமலை:—சிறு குன்று — அபலைப் பெண்—ஆரவாரம்.**
9. **தொழுதி:—மாட்டுக் கொட்டில் — கூட்டம் — பணிவு.**
10. **மடுப்ப:—மடக்கி—ஊற்றி— மடித்து.**

வீட்டிலேயே வளர்ந்து வந்தது. என் மனைவியின் பொறுப்பில் தான் என்று நான் சொல்ல வேண்டுமா என்ன ?

ஆரம்பத்தில் ஊரில் உள்ள வர்கள், என் நண்பர்கள் சிலர் வந்து, "உனக்கேனடா இந்தத் தொல்லை!" என்று கேட்டு விட்டுப் போனார்கள். பின்னால் காலப் போக்கில் அவர்களுடைய உபதேசத் தொல்லைகள் குறைந்து விட்டன.

என் கட்டாயத்துக்காகத்தான் என் மனைவி அந்தப் பிள்ளையை வளர்த்து வந்தாள். அந்தப் பிள்ளையின் துரதிர்ஷ்டமோ என்னவோ எங்களுக்கு அடுத்தடுத் துப் பிறந்த இரண்டு குழந்தைக ளும் ஆண்களாகவே இருந்தன.

மூன்று ஆண் பிள்ளைகளுக்கும் மூத்த ஆண் பிள்ளையாக அவன் வளர்ந்து வந்தான். அந்தப் பிள்ளை பெண்ணாக இருந்திருந் தால் ஓரளவு என் மனைவியின் அபிமானத்தைப் பெற்றிருக்குமோ என்னவோ!

அன்பு இல்லாவிட்டாலும், அவள் அந்தப் பிள்ளையை ஒழுங் காகத்தான் வளர்த்து வந்தாள். சிற்சில சமயங்களில் என் காதில் விழும்படியாக குலம் கோத்திரம் தெரியாத அந்தப் பிள்ளையை வளர்க்க நேரிட்டதற்காக வருந் தித் தனக்குள்ளே பேசிக்கொள் வாள். அப்போதெல்லாம் நான் அவளைத் தனியே அழைத்து, "நம் குழந்தையாக அவனை நாம் ஏற்றுக் கொண்டபோதே அவன் நம் குலத்தைச் சேர்ந்தவனாகி விட்டான். அவனை வேறு குல மாக இனி நினைக்கவும் நினைக் காதே. நம்முடைய பிள்ளைக ளோடு பிள்ளையாக-ஒரே மாதிரி யாக வளர்ப்பதானால் அவன் இங்கேயிருக்கட்டும். இல்லாவிட் டால் அவனை அநாதை விடுதி யிலே கொண்டுபோய்ச் சேர்த்து விடுகிறேன்!" என்று சொல் வேன்.

---

## நாட்டுச் சிறப்பு

1. பெரிய ஆற்றையே தன்னுள் அடக்கிக் கொள்ளக் கூடிய குளங்களும் இருக் கின்றன.

2. வீறு பொருந்திய வேந்தர்கள் விரும்பி உறவு கொள்ளுகின்ற குடிமக்களும் உள்ளனர்.

3. பழைய உயர்ந்த வேதத்தை நிகர்க் கின்ற புதிய பாட்டுக்களும் இருக் கின்றன.

4. வேள்விக்கு நிகரான சிறப்புள்ள வேளாண்மையும் உள்ளது.

—விளம்பி நாகனார்.

பிள்ளையை வீட்டுக்குக் கொண்டு வந்தபோது போலீசில் திருப்பி ஒப்படைக்கச்சொன்ன என் மனைவி பின்னால் சில சமயங்களில் நான் இவ்வாறு சொன்ன போது அவனை அநாதைவிடுதியிலே கொண்டு போய் விட இசையவில்லை.

பிள்ளையிடம் அன்பில்லா விட்டாலும், என் மனம் மாறுபடுமே என்று பயப்படுகிருள்—அதனால் தான் அவனை அக்கரையாக வளர்த்து வருகிருள் என்று நான் எண்ணிக் கொண்டேன்.

ஆனால், இந்த எண்ணம் எவ்வளவ தவருனது என்பது இப்போதல்லவா தெரிகிறது!

இப்போது நினைத்துப் பார்த்தால் தான், என் மனைவி அந்தப் பிள்ளையிடம் எவ்வளவு வேற்றுமையாக நடந்து வந்திருக்கிருள் என்று தெரிகிறது. பல பழைய நிகழ்ச்சிகள் என் மனக்கண் முன்னே தோன்றுகின்றன. அப்போதெல்லாம் அவை பெரிதாகப் படவில்லை. இப்போது அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு மாபாதகமாக அவள் எனக்கெதிராகத் திட்டமிட்டுச் செய்த சதியாகவல்லவா தோன்றுகின்றன. நினைத்துப் பார்க்க நினைத்துப் பார்க்க என் நெஞ்சில் ஆத்திரம் கிளர்ந்தெழுந்தது.

கோபுவுக்கு — கோபாலன் என்று தான் அந்தப் பிள்ளைக்குப் பெயர் இட்டிருந்தேன்—ஐந்து வயதாகும்போது நடந்த அந்த நிகழ்ச்சி இப்போது எனக்கு நினைவு வருகிறது.

திடீரென்று ஒரு தேசத் தலைவர் இறந்து விட்டதன் காரணமாக அன்று காரியாலயத்தை

## கண்ணனைக் கண்ட கண்கள்

"கண்ணு உன்னைக் கண்ணுல் காண விரும்புகிறேன். கண்ணெளி கொடுப்பாயா?" என்று பிறவிக் குருடனுன திருதராட்டிரன் கேட்டான்.

கண்ணன் அவ்வாறே அருள் புரிந்தான்.

கண்ணனின் திருவுருவைக் கண்டு, அவனைக் கட்டித் தழுவிக் கொண்டு மகிழ்ச்சியடைந்த திருதராட்டிரன் கண்ணனை நோக்கி, 'கண்ணு, என் ஆசை தீர்ந்தது. கண்ணை மூடிவிடு' என்ருன்.

கண்ணன் ஆச்சரியப் பட்டு, 'ஏன் இப்படிச் சொல்கிறீர்கள்? என்று கேட்டான்.

'கண்ணு, உன்னைக் காணும்போது ஆனந்தமாயிருக்கிறது-உன்னைப் பார்த்த கண்ணுல் துன்பம் நிறைந்த இத்த உலகக் காட்சிகளைக் காண விரும்பவில்லை.' என்ருன் திருதராட்டிரன்.

அரை நாள் வேலையோடு மூடி விட்டார்கள். தினம் மாலை 6 மணிக்கு வீட்டுக்கு வருகிறநான், அன்று பகல் இரண்டு மணிக்கே வந்து விட்டேன். வீட்டில் நான் கண்ட காட்சி அப்போது என் மனத்தை உலுக்கிவிடவில்லை என்றாலும், இன்று நினைத்துப் பார்க்கும் போது எரிச்சல் தருவதாகத் தான் இருக்கிறது.

வெயில் நேரம். என் பிள்ளைகள் மூவரும் மனைவியும் கூடத்தில் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தார்கள். கோபு அங்கேயில்லை. சிறிது நேரம் சென்று நான் கொல்லைப்புறம் சென்ற போது, அங்கே அவன் தன் சிட்டுக் கைகளால் பாத்திரம்துலக்கிக் கொண்டிருந்தான்.

"கோபு. நீ ஏனடா இந்த வேலையெல்லாம் செய்கிறாய்?" என்று அவன் கைகளைக் கழுவி விட்டு உள்ளே அழைத்துக் கொண்டு வந்தேன். என் மனைவியை எழுப்பி அவனை வேலை வாங்கியதற்காகக் கோபித்துக் கொண்டேன். அவள், தான் அவனைப் பாத்திரம் துலக்கச் சொல்லவில்லையென்றும், அவனாகப் போய்த் துலக்கியிருக்கிறான் என்றும் சொல்லித் தப்பித்துக் கொண்டாள்.

நான் அப்போது இந்த நிகழ்ச்சியைப் பற்றிப் பெரிதாக ஒன்றும் நினைக்கவில்லை. என் மனைவியோ, நான் இல்லாத சமயங்களில் அந்தப் பிள்ளையைப் பலவாறு வேலை வாங்கி வந்திருக்கிறாள்.

கடைசிப் பையனைத் தவிர மற்ற இரண்டு பேரையும் கோபுவையும் பள்ளியில் சேர்த்து விட்டிருந்த சமயம், மற்றொரு முறை நான் அவளுடைய பேதச்செயலைக் காண நேர்ந்தது. ஒரு நாள் ஆபீஸ் வேலையாகத் தெருவில் போய்க் கொண்டிருந்தபோது கொதிக்கும் வெயிலில் கோபு இரண்டு டிபன் காரியர்களைத் தூக்கிக்கொண்டு எதிரில் வந்து கொண்டிருந்தான்.

"என்னடா இது?" என்றேன்.

"தம்பிகளுக்குச் சாப்பாடு கொண்டு போகிறேன்" என்றான்.

மேலும் அவனைக் கிண்டிக் கிளறி விசாரித்ததில் வாடிக்கையாக அவன் தான் மத்தியானம் சோறு எடுத்துப் போவதென்று தெரிந்தது.

அன்றைக்கே நான் பிள்ளைகளுக்குச் சாப்பாடு எடுக்க ஓர் ஆயாவை ஏற்பாடு செய்து விட்டேன். என் மனைவியையும், அவனை வேற்றுமையாக நடத்தியது குறித்துக் கடுமையாகப் பேசிக் கண்டித்தேன்.

அவள் எதற்கும் அஞ்சவில்லை. என் எதிரில் எதுவும் நடக்காதது போலவேயிருந்தது. ஆனால் என் கண்ணுக்குப் பின்னால்—நான் வீட்டை விட்டு வெளியேறிய பிறகு—அவள் தன்னிச்சைப் படியே நடந்து கொண்டிருக்கிறாள். கோபுவை ஒரு வேலைக்காரனைப் போலவே—சம்பளமில்லாமல் கிடைத்த ஒரு வேலைக்காரனைப் போலவே—நடத்தியிருக்கிறாள். இத்தனைக்கும் அந்தப் பிள்ளை என்னிடம் ஒரு வார்த்தை வந்து சொன்னதில்லை.

என் திட்டமென்ன, நினைப்பென்ன, இப்போது நடப்பதென்ன என்று அடிக்கடி சிந்தித்தேன். அவன் அனாதையாக வளரவேண்டுமென்றே விதியிருக்கும் போது நம்மால் அதைமாற்ற முடியுமா என்று சில சமயம் என் மனத்தைச் சமாதானப் படுத்திக் கொள்ள முயன்றேன். ஆனால் மனம் கேட்கவில்லை.

ஓய்விலிருக்கும் போதெல்லாம் கோபுவைப் பற்றிய சிந்தனை என் மன வரங்கில் வந்தாடியது. சிந்தனை சுழலச் சுழல என் மனைவியின் மீது எனக்கு வெறுப்பு வளரத் தொடங்கியது. கணவன் மனமறிந்து வாழாத மனைவியுடன் எப்படி வாழ்வது? இவளை விட்டுவிட்டுக் கோபுவை அழைத்துக் கொண்டு வேறூர் ஊருக்குப் போய் விடலாமா என்று கூடத் தோன்றும். ஆனால், மற்ற பிள்ளைகள்?

என் மனைவி என் திட்டத்தையே குலைத்துவிட்டாள். என் பிள்ளைகளும் கோபுவைத் தம்முடன் பிறந்தவனாகவே எண்ணும்படி—சிறிது வேற்றுமை கூட இல்லாமல் வளர்க்க வேண்டும் என்பது என் ஆசை. ஆனால் இப்போது? அவன் அனாதைப் பிள்ளையென்று எல்லோரும் நன்கு உணர்ந்தே அவனுடன் பழகுகிறார்கள். பருவ இயல்புக்கேற்ப அவனுடன் ஒன்றாக உறவாடிப் பழகினாலும், அவன் தங்கள் அண்ணனல்ல என்று தெரிந்தே பழகுகிறார்கள். அவர்கள் மீது குற்றமில்லை.

என் மனைவி மீதுள்ள கோபத்திற்காக அவர்களை விட்டுப் பிரிந்து வாழ்வதும் சரியல்ல.

எப்படியோ என் இலட்சியம் உருக்குலைந்து விட்டது. இப்போது என்ன செய்வது?

கோபாலன் தான் ஓர் அனாதை என்று தெரிந்துகொண்டு விட்டான். அவன் மீது நான் கொண்டுள்ள அன்பையும் தெரிந்து வைத்திருக்கிறான். இப்போது அவன் ஒரு விவரம் அறிந்த பிள்ளை. இனி தான் அனாதையல்ல என்ற உணர்ச்சியை அவன் மனத்தில் உருவாக்க முடியாது. இருந்தாலும்

---

## இடிக்குப்பின் மழை

உலகப் பேரறிஞர் சாக்ரடீஸ் ஒருநாள் ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கியிருந்தார். அப்போது எதற்காகவோ அவருடைய மனைவி அவரையழைத்தாள். சாக்ரடீஸ் அதைக் கவனிக்கவில்லை. தான் கூப்பிட்டும் பேசாதிருப்பதைக் கண்ட அவள் அவரை இரைச்சலிட்டுத் திட்டினாள். அப்போதும் அவர் பேசாமல் இருந்தார். அவளுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. ஒரு குடம் நிறையத் தண்ணீரை மொண்டு வந்து அவர் தலையில் ஊற்றினாள்.

சாக்ரடீஸ் சிரித்துக் கொண்டே, ‘இடியிடித்த பிறகு மழை பெய்யாமல் போகுமா?’ என்று கூறினார்.



**கற்புடைய பெண் போன்றது கல்வி**

இதயத்தைத் தாக்கி வருத்தும் ஒரு பெண், ஆண்களால் விரும்பப்படுகின்ற பெண்மையை உடையவளாய் இருப்பினும், அவளுடைய பெண்மை நலத்தைப் பேடிகள் அடைய முடியாது. நல்லொழுக்க முடைய வீரர்களே அவளை அடைய முடியும். குற்றமில்லாத கல்வியும் அறிவுடையவர்களிடத்தில் சேருமேயன்றிச் சிரிப்புக்காளாகக் கூடிய தன்மையுடைய மூடர்களிடத்தில் சேராது. —குமர குருபரர்.

---

அவனை நல்ல நிலையில் வைக்க வேண்டும்.

ஒரு தாயின் அல்லது பெண்ணின் கண்காணிப்பில் வளர வேண்டிய பருவத்தை அவன் கடந்துவிட்டான். இனி அவன் என் வீட்டில் தான் இருக்க வேண்டும் என்பதில்லை. பேசாமல் ஒரு விடுதியுள்ள பள்ளியில் சேர்த்துவிட்டு வந்துவிட வேண்டும். அதுதான் சரியான வழி. இனிமேல் இந்தப் பாதகியின் கொடுமையிலிருந்தாவது அவனுக்கு விடுதலை கிடைக்கட்டும்.

இந்த முடிவுக்கு நான் வந்து வெகு நாட்களாகி விட்டன. ஜூன் மாதம் பிறந்து பள்ளிக்கூடங்கள் திறக்கட்டும் என்று காத்திருந்தேன்

கோபு எட்டாவது வகுப்பு எழுதிப் பாசாகி விட்டான். ஜூன் பிறக்க இன்னும் ஐந்தாறு நாட்கள் தானிருக்கின்றன. ஜூன் ஐந்து ஆறு தேதிகளில் பள்ளிக்கூடங்கள் திறப்பார்கள். சென்னையில் கொண்டுபோய் ஏதாவது பள்ளியில் சேர்த்துவிட வேண்டியதுதான்.

முதலில் என் மனைவி சாமானியமாக ஒத்துக்கொள்ளவில்லை. இங்கே நன்றாகத்தானே படிக்கிறான் என்றாள். பிள்ளைகளோடு பிள்ளையாய் இருக்கட்டுமே என்றாள்—நான் அவள் சொல்லுவதற்கெல்லாம் இணங்கக் கூடியவனாக இல்லை என்று தெரிந்த பிறகு தான் 'எப்படியோ செய்யுங்கள்' என்று சொல்லிவிட்டுச் சும்மாயிருந்தாள்.

சென்னைப் பட்டணம்—என் கனவுகளுக்கு ஏற்ற இடம். கோபுவை ஏதாவது ஆஸ்டலில் சேர்த்துவிட வேண்டியது அங்கு தங்கிக் கொண்டு அவன் பள்ளியில் படிக்க வேண்டும். நண்பர்களோடு ஜாலியாகப் பழக வேண்டும். கட்டுப்பாடெதுவும் இல்லாதவனாய் அனாதையென்ற உணர்ச்சி சிறிதுமின்றி வாழப் பழக வேண்டும். இப்படியெல்லாம் நினைத்துக்கொண்டு சென்றேன்.

ஆனால், சிறந்த பள்ளிக்கூடம் என்று பலர் கூறக்கேட்டு நான் சென்ற பள்ளிக்கூடத்தில் ஆஸ்டல் விதிகளைக் கேட்டபோது எனக்கு கோபுவை அங்குச் சேர்த்துவிட மனமே வரவில்லை. எத்தனைக் கட்டுப்பாடுகள்! பிள்ளைகள் சினிமாவுக்குக் கூடப் போகக்கூடாதாம்!

பள்ளிக்கூடத்தை யடுத்திருந்த ஒரு ஓட்டல் அறையை ஏற்பாடு செய்து கொடுத்துவிட்டுத் திரும்பி வந்தேன்.

நாட்கள் பறந்தன.

இப்போது கோபு பிரியூனியர் சிடி எழுதிவிட்டு விடுமுறைக்கு வந்திருந்தான். அடுத்த ஆண்டு பீ.ஏ. படிக்க வைக்கவேண்டு மென்று நினைத்திருந்தேன். பீ.ஏ. படித்தபின் ஒரு வேலையில் உட்கார்த்தி வைத்துவிட்டால் போதும் ஓரளவு அவனுக்கு என் கடமையைச் செய்துவிட்டதாக முடியும். ஒரு தந்தை தன் மகனைத் தானாக வாழக்கூடிய நிலைக்கு வளர்த்து விட்டால் போதாதா என்ன?

கோபு பிரியுனிவர்சிட்டி பாசாகி விட்டான். சென்னையில் போய்க் கல்லூரியில் மேல் வகுப்பில் சேர்ந்து கொள்வதாகப் புறப்பட்டுச் சென்றான்! பீ. ஏ. யில் சேர்ந்துபடிக்கும்படிதான் நான் சொல்லியனுப்பினேன். பி ஈ. வகுப்பில் சேர்ந்திருப்பதாகவும், மிகவும் சிரமப் பட்டு இடம் கிடைத்ததாகவும் கோபு எழுதியிருந்தான். எஞ்ஜினீயரிங் படிப்பென்றால் எவ்வளவு செலவாகும்! என்னால் ஈடுகட்ட முடியுமா? இன்னும் படிக்க வேண்டிய பிள்ளைகள் மூன்று பேர் இருக்கிறார்களே! இவன் வீட்டு நிலைமையறியாமல் நடந்து கொள்கிறானே என்று நான் வருந்தினேன்.

என்னுடைய பொருளாதார நிலையை விளக்கி எழுதி எஞ்சினீயரிங் படிக்கவைக்க வீட்டில் வசதியில்லையாகையால், அதை விட்டுவிட்டு சாதாரண பீ. ஏ. வகுப்பில் சேர்ந்து கொள்ளும்படி எழுதினேன். இடமில்லாமல் காத்துக் கொண்டிருக்கும் வசதியுள்ள பையன் யாருக்காவது அவனுடைய இடம் பயன் படட்டும் என்றும் குறிப்பிட்டிருந்தேன்.

அன்புள்ள அப்பா,

தங்கள் கடிதம் கிடைத்தது. வசதியைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம். வசதியில்லாதவர்களாகவும் திறமையுள்ளவர்களாகவும் இருக்கும் மாணவர்களுக்குக் கிடைக்கும் ஸ்காலர்ஷிப் உதவிப் பணத்திலேயே நான் படிப்புத் தொடங்குகின்றேன். ஸ்காலர்ஷிப் பெறுவதற்காகத் நான் மிகவும் சிரமப்பட்டு முயற்சி செய்தேன். கிடைத்து விட்டது. முயற்சி பயனளித்தது. நான் படித்து முன்னேற ஆசீர்வதியுங்கள்.

கோபாலன்.

ஸ்காலர்ஷிப் வாங்கிப் படிக்கிறானே! அனுதைப் புத்தி போகவில்லை என்று ஒரு நினைப்பு எனக்குள்ளேயே எழுந்தது. அந்த நினைப்பைக் கடிந்து அடக்கிக் கொண்டேன்.

கோபு ஆண்டு தோறும் மேல் வகுப்புக்குப் போய்க் கொண்டிருந்தான். என் பிள்ளைகளும் கல்லூரிகளில் படித்துக் கொண்டிருந்தார்கள்.

என் மனைவி இடையே ஒரு நாள் திருமணப் பேச்சை எடுத்தாள். கோபு படிப்பு முடிந்து முதலில் அவனுக்குத் திருமணம் நடந்த பிறகுதான் மற்ற பிள்ளைகளைப்பற்றிப் பேச்சு எடுக்கலாம் என்று சொல்லிவிட்டேன். என் கண்டிப்பான பேச்சைக் கேட்ட

## ஏன் நிறுத்தினீர்?

பேருந்து வண்டியில் கூட்டம் நிறைய இருந்தது. ஓட்டுநர் நிறுத்து மிடத்தில் வேகத்தைக் குறைத்து நிறுத்தாமல் ஓட்டிச் சென்றார். நின்றிருந்த பயணிகளில் இருவர் ஓடிச்சென்று ஏறு பலகையில் அடிவைத்துத் தொங்கிக் கொண்டு சென்றார்கள். சிறிது நேரத்தில் அவர்கள் சமாளித்து உள்ளே போய் விட்டார்கள்.

அடுத்து ஒரு நிறுத்துமிடத்தில் ஓட்டுநர் வண்டியை நிறுத்தினார்.

“இருக்கிற கூட்டம் போதாதா? இன்னும் ஏற்ற வேண்டுமா?” என்று கூவினார் பழைய ஏறு பலகைப் பேர்வழி!

---

பிறகு அவள் மீண்டும் அதுபற்றிப் பேசவே பயப்பட்டாள்.

கோபு அந்த வருடம் எஞ்ஜினீயரிங் கடைசி வருடம் படித்துக் கொண்டிருந்தான். அடுத்த வருடம் வேலையில் சேர்ந்து விடுவான்.

இந்த நிலையில் ஒருநாள் என் மனைவிக்கு உடம்புக்கு வந்து விட்டது. படுத்தவள் எழுந்திருக்கவேயில்லை. நாளுக்கு நாள் உடல் இளைத்து வந்தது. மருந்துகளும் ஊசிகளும் எவ்விதமான பயனும் தரவில்லை.

ஒரு நாள் டாக்டருடன் நான் அவள் உடம்பைப் பார்த்துக் கொண்டிருந்தேன். டாக்டர் புறப்பட்டபோது நானும் அவரைப் பின் தொடர்ந்தேன். “கொஞ்சம் இருங்களேன்” என்று அவள் கூப்பிட்டாள். அவளருகில் போய் நாற்காலியில் அமர்ந்தேன், “கோபுவைப் பார்க்க வேண்டும் போலிருக்கிறது” என்று சொன்னாள்.

“பரீட்சை சமயம், இப்போது வேண்டாம்” என்று நான் கண்டிப்பாகச் சொல்லி விட்டேன். அவள் மறுத்துப் பேசவில்லை.

நான்கு நாட்கழித்து மாலையில் நான் ஆபீசிலிருந்து திரும்பி வந்தேன். அன்று காலையில் அவளுடம்பு மிகவும் பலவீனமாயிருந்தது. எப்படியிருக்கிறாள் என்று பார்ப்பதற்காக நேரே அவள் அறைக்குச் சென்றேன்.

அங்கே நான் கண்ட காட்சி என்னைத் திடுக்கிட வைத்தது.

கோபு அங்கேயிருந்தான். சும்மா யிருக்கவில்லை. அவள் காலை அமுக்கிக் கொண்டிருந்தான்.

“ஏண்டா கோபு, பரீட்சை சமயத்தில் இங்கே ஏன் வந்தாய்?” என்று கண்டிப்பான குரலில் கேட்டேன்.

“அப்பா, பரீட்சை அடுத்த ஆண்டு எழுதிக் கொள்ளலாம். அம்மா உடம்பைக்கவனிக்காமல் விட்டுவிட்டால் திரும்பக் கிடைக்குமா? ஏனப்பா எனக்குக் கடிதமே எழுதவில்லை. கோடி வீட்டுக் குப்பண்ணா என்னை வீதியில் கண்டு சொன்னவுடன் இரயி

லேறி வந்து விட்டேன். தம்பிகள் கூட ஒருவரும் எழுதிப் போட வில்லையே!'' என்ருன் கோபு.

கோபு அவளைத் தன் அம்மா என்று நினைக்கிருனு? அவளிடம் அவ்வளவு பாசம் கொண்டிருக்கிருனு? இது உண்மை தானு? என்ருல் நம்பமுடியவில்லை.

கோபு வந்த நான்கைந்து நாட்களில் அவள் உடம்பு தேறிவிட்டது. சோறு சாப்பிடத் தொடங்கிவிட்டாள்.

டாக்டர் சொன்ஞர் :

''நோயாளிகளின் மனப்போக்கு விசித்திரமானது. மனத்திற்குப் பிடித்தவர்கள் அருகில் இருந்தால் நோய் பறந்து விடுகிறது''

கோபு அவள் மனத்துக்கு பிடித்தவனு? என்ருல் நம்ப முடியவில்லை. தனக்குப் பிறந்த பிள்ளைகளை வைத்துவிட்டு, அவனை வேலை வாங்கினுளே தன் பிள்ளைகளுக்கும் சேர்த்து அவனை வேலை பார்க்க வைத்தாளே—அவளுக்குக் கோபுவின் மேல் அன்பா?

சிந்தனையோடு வந்து சோபாவில் சாய்ந்தேன். வாரப் பத்திரிகையொன்று அருகில் இருந்த மேசையின் மேல் கிடந்தது. ஏதோ ஒரு பக்கத்தை எடுத்துப் படித்தேன். அதில் யாரோ ஒரு மேஞட்டறிஞரின் பொன்மொழி என்னைக் கவர்ந்தது. ''முதல் பார்வையில் வெறுப்புக்கானவர்களும் பழகப்பழக விருப்புக்குள்ளாவார்கள்''

உண்மையில் மனப்போக்கு என்பது விசித்திரமானதே!

★ ★ ★

## அநியாயம்! அநியாயம்!!

ஓர் ஆங்கிலம் அல்லது பிரெஞ்சுக் கதையைப் பார்த்துக் கதை எழுதுவோருக்குச் சென்ற சில வருஷங்களாக ஓர் துர்க் குணம் ஏற்பட்டிருக்கிறது. அவர்கள் அக் கதைகளின் நாயகர்களின் பெயர்களை எடுத்துவிட்டு, அவைகட்குப் பதிலாகத் தமிழ்ப் பெயர்களைப் போட்டுக் கதைகளை ஏறத்தாழ அப்படி அப்படியே மொழிபெயர்த்து விடுகிருர்கள். இவைகளில் இரண்டு விதமான கஷ்டங்கள் ஏற்படுகின்றன. அவைகளுள் ஒன்ருவது. ஐரோப்பிய பழக்க வழக்கங்களை நம்முடைய பழக்க வழக்கங்கள் என்று தவருக வர்ணிக்க வேண்டியிருக்கிறது. அக் கதைகளை நம் சிறுவர்களும் சிறுமிகளும் படிப்பதால் நமது வாழ்க்கை முறைகள் மெல்ல மெல்ல மாறி மேஞட்டு முறைகளைப் பின்பற்றத் துவங்கி விடுகின்றன. அநியாயமாய் இப்பொழுதே இந்தத் தீமை நாட்டில் பரவத் துவங்கி விட்டது. இனியாவது நமது ஆசிரியர்கள் இத்தகைய விளைவு ஏற்படாதபடி பார்த்துக் கொள்ள வேண்டும்.

—வ. வெ. சு. ஐயர்.

# தமிழனென்று சொல்லடா தலைநிமிர்ந்து நில்லடா!

*தமிழனென்று சொல்லடா*
*தலைநிமிர்ந்து நில்லடா!*

வீரக்குரல் ஒன்று விண்முட்ட எழுந்தது. நாமக்கல்லிலிருந்து ஒலித்த இந்த வீரக்குரல் தமிழ் நாடெங்கும் எதிரொலித்தது. தமிழ் தமிழர் தமிழ்நாடு என்று பேசுவதெல்லாம் பாரத ஒருமைப் பாட்டுக்கு மாறுபட்டதென்று நினைக்கின்ற பெரும்பாலோர் கூட்டத்தினிடையிலே யிருந்து தான் இக்குரல் வெளிப்பட்டது நாமக்கல்லாரின் இந்தக் குரல் அவருடைய தெளிவை—தெளிந்த ஞானத்தை —வெளிப்படுத்துவதா யிருந்தது.

தமிழன், தான் தமிழன் என்ற உணர்ச்சி பெற்றால்தான், தான் இந்தியன் என்ற உண்மையையும் நிலைநாட்ட முடியும் என்றதெளிவு அவரிடமும் இருந்தது. தமிழ் நாட்டில் பிறந்து, தான் தமிழன் என்ற உணர்வு பெறாதவன்எப்படி ஓர் உண்மையான இந்தியனாக இருக்க முடியும்?

ஒரு தமிழனாகவோ, வங்காளியாகவோ, தெலுங்கனாவே, மலையாளியாகவோ, குஜராத்தியாகவோ, மராட்டியனாகவோ உள்ள ஒருவன்தான் இந்தியனாக இருக்க முடியும். ஏனென்றால் இவர்கள் எல்லோரும் சேர்ந்ததுதான் இந்திய சமுதாயம். தமிழனாக இல்லாதவன் இந்தியனாக இருக்க முடியாது என்பது எப்படி உண்மையோ அப்படியே — தமிழன் என்ற உணர்வு இல்லாதவனிடம் இந்தியன்என்ற உணர்வை எதிர்பார்க்கவே முடியாது.

தாய்மொழிப் பற்று இல்லாதவனிடம் நாட்டுப்பற்று இருக்க முடியாதுஎன்று அண்ணல்காந்தியடிகள் கூறியது இக்கருத்துக்கு வலுவூட்டுவதாகும்.

காந்தியதத்துவத்திலே ஆழ்ந்த பற்றுக்கொண்ட நாமக்கல் ராமலிங்கனார் இந்தத் தெளிவு பெற்றிருந்த காரணத்தினால்தான்,

தமிழன் என்றோர்
  இனமுண்டு
தனியே அவற்கொரு
  குணமுண்டு
அமிழ்தம் அவனுடை
  மொழியாகும்
அதுவே அவனுடை
  வழியாகும்

என்று தமிழ் இனப்பற்றோடு பாடினார்.

கவிஞர் நாமக்கல் இராமலிங்கனாரின் தமிழ்ப்பற்றும், நாட்டுப்பற்றும், காந்தியப் பற்றும் அவரை ஓர் இலட்சிய வீரராக ஆக்கின. காந்திய வழியில் அசையாத நம்பிக்கையும், அவ்வழியை மனமாரக் கடைப் பிடித்த நேர்மையும் காந்திய வழியே கடைத்தேறும் வழியென அவ்வழியேநடந்து காட்டிய பெருமையும் நாமக்கல் கவிஞர் பெருமகனாருக்கே உரியதாகும்.

கத்தியின்றி ரத்தமின்றி
யுத்தமொன்று வருகுது
சத்தியத்தின் நித்தியத்தை
நம்பும்யாரும் சேருவீர்!

என்று சத்தியாக்கிரகப் போராட்டத்துக்குப்பிரசாரம்செய்த பெருங் கவிஞரின் இந்த பாடல் வரிகள் எளிய சொற்களிலே இதயத்திலே ஒரு நேர்மையுணர்ச்சியை—நேர்மையோடு கூடிய வீர உணர்ச்சியை வீரத்தோடு கூடிய சாந்த உணர்ச்சியை சத்தியப் பெருவழியைப் பரப்பும்சக்தி வாய்ந்த வரிகளாக விளங்குகின்றன. எளிய சொற்களினுல்ஓர்ஆழ்ந்த தத்துவத்தை-தத்துவச் சார்புடையஓர் உணர்ச்சியை உண்டாக்க முடியும் என்பதை இவ்வரிகள் மெய்ப்பித்துவிட்டன.

தாய்மொழிப்பற்றும் தாய்நாட்டுப்பற்றும் இளைய பாரதத்திலே கொழுந்துவிட்டெரியச்செய்தகவிஞரின் இலக்கியப்பணி பிரசாரப் பணியாகமட்டும்நின்றுவிடவில்லை தமிழ் இலக்கியவரலாற்றிலே ஒரு நிலையான-தனித்தன்மை வாய்ந்த ஓர் இடத்தைக் கவிஞர் பெற்றுவிட்டார்.

'என்கதை' என்ற அவருடைய தன்வரலாறும்,'அவளும்அவனும்' என்ற!புதுமைக்காப்பியமும் 'மலைக்கள்ளன்' என்கிற நெடுங்கதையும் என்றும் மின்னொளி மாருத இலக்கியச் சித்திரங்களாகும்.

அவருடைய 'திருக்குறள் உரை' சிந்தனைக்கு விருந்தூட்டுவதாகும். பழைய தமிழ் உரையாசிரியர்கள் ஆங்காங்கேதடம்மாறிப்போவதையெல்லாம் சுட்டிக்காட்டி ஆங்காங்கே புதிய கருத்துக்களை பகுத்தறிவு எண்ணங்களை விதைத்து அவர் எழுதியுள்ளஉரைகள் இலக்கியத் திறனய்வுத் துறையினருக்கு வழி காட்டியாக விளங்கக்கூடியதாகும்.

புதிய தமிழ்நாட்டின் முப்பெருங் கவிஞர்களிலே ஒருவராகத்திகழ்ந்தவர் நாமக்கல் கவிஞர். கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளையையும்,பாவேந்தர் பாரதிதாசனையும்கூற்றுக்குப் பறிகொடுத்த பின்னர், நம்மிடையேயும் ஒரு பெருங் கவிஞர் வாழ்கின்ருர் என்று பெருமைப்பட்டுக் கொண்டிருந்த தமிழ் உள்ளமெல்லாம் துணுக்குற—துயருற—துவண்டிட 23-8-72-ஆம் நாளன்று அவரும் அமரராகிவிட்டார்.

மக்களாட்சியிலே அரசவைக் கவிஞராக விளங்கும் பேறு அவருக்குக் கிடைத்தது. பத்தாண்டுகள் மேலவை உறுப்பினராக இருந்து வந்திருக்கிருர். பாரத அரசு அவருக்குப் 'பத்ம பூஷன்' விருது வழங்கிச் சிறப்பித்தது. தமிழக அரசு மாதம் ரூ. 250/- உதவிப்பணம் வழங்கி வந்துள்ளது.

கவிஞரின் சிறந்த நெடுங்கதையான மலைக்கள்ளன் திரைப்படமாக்கப் பெற்றது. அக்கதைக்குரிய உரையாடல்களைக் கலைஞர் எழுதினுர் என்பதும் புரட்சி நடிகர் நடித்தார் என்பதும் குறிப்பிடத்தக்க செய்திகள்.

கவிஞரின் கவிதைகள் 'தமிழன் இதயம்' என்ற தலைப்பில் ஒரு தொகுதியாக வெளிவந்தன. 'தமிழன் இதயம்' தமிழுணர்ச்சியையும் தேசிய உணர்ச்சியையும் ஒருங்கே மக்கள் மனத்திலே உண்டாக்கிய சிறந்த நூல்.

'பாண்டியா, நீ ஒரு கவிஞனடா' என்று பாரதியாரால் பாராட்டப் பெற்ற நாமக்கல் கவிஞரின் பரு உடல் மறைந்தாலும் தமிழன் இதயத்தில் அவருடைய கவியுரு மறையாது நிலைத்து நிற்கும் என்பதில் ஐயமில்லை.

# உயிர்கள் என்றால் என்ன?

பொதுவாகச் சொன்னால், மனிதன் எத்தனை எத்தனை ஆச்சரியமான இயந்திரங்களையும் கருவிகளையும் தன் அறிவுக் கூர்மையால் செய்து விடலாம். ஆனால் ஓர் உயிருள்ள பொருளை மட்டும் மனிதனால் செய்ய முடியாது.

நாம் வாழும் இந்த உலகத்தில் உள்ள பொருள்களை பொதுவாக இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கலாம். உயிருள்ளவை, உயிரற்றவை என்ற இரு பெரும் பிரிவுகளில் எல்லாப் பொருள்களும் அடங்கிவிடும்.

உயிருள்ளவை என்றால் என்ன, உயிரற்றவை என்றால் என்ன என்று நம்மால் தெளிவாக விளக்கிக் கூற இயலாது. ஆனால், அவை என்ன என்ன என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

கல்லுக்கும் மண்ணுக்கும் உயிர் கிடையாது. அவை இருக்கும் இடத்தை விட்டு அசைவதே இல்லை எவ்விதமான தொழிலையும் செய்வதே இல்லை. அவை போலவே, தங்கம், வெள்ளி, இரும்பு, செம்பு போன்ற உலோகங்களுக்கும் உயிர் கிடையாது.

ஓர் இடத்தை விட்டு மற்றோர் இடத்திற்குச் செல்லக் கூடிய பொருள்களாயிருந்தாலும், காற்றுக்கும், நெருப்புக்கும், தண்ணீருக்கும் உயிர் கிடையாது.

சக்திகளாகிய மின்சாரம் காந்தம் போன்றவற்றிற்கும் உயிர் இருப்பதாகச் சொல்ல முடியாது. மேற் கூறிய பல பொருள்களைக் கொண்டு மனிதர்களால் செய்யப்படும் எந்தப் பொருளுக்கும் உயிர்கிடையாது.

உயிருள்ளவை எவை? ஈ, எறும்பு, பல்லி, பூரான் போன்ற பூச்சி வகைகளையும் நத்தை பாம்பு போன்ற ஊரும் வகைகளையும், மீன் திமிங்கிலம், முதலை போன்ற நீர்வாழ் வகைகளையும், காக்கை குருவி, புறா, பருந்து போன்ற பறக்கும் வகைகளையும், யானை, புலி, கரடி, சிங்கம், ஆடு, மாடு, மான், குதிரை போன்ற விலங்கு வகைகளையும், மனிதர்களையும் உயிருள்ளவை என்கிறோம்.

புல் பூண்டு மரம் செடி கொடி ஆகிய தாவரங்களும் உயிருள்ளவையே

மேற்கூறியவற்றைக் கொண்டு உயிருள்ளவற்றின் தன்மைகளை நாம் ஒருவாறு எடுத்துக்கூறலாம்.

1. உயிருள்ளவை அனைத்தும் மூச்சுவிடுகின்றன.

2. உயிருள்ளவை அனைத்தும் ஏதாவது உணவை உண்ணுகின்றன.

3. உயிருள்ளவை அனைத்தும் தம் இனத்தைப் பெருகச் செய்கின்றன.

வேறு எத்தனை வேறுபாடுகள் இருந்தாலும் உயிருள்ளவை

*திரு. வேலப்பன் உயிர் நூல் கற்கும் மாணவர். தாம் கற்றதைப் பிறர்க்கு உணர்த்தும் ஆற்றல் பெற்ற தலைமாணாக்கர். அவர் உயிர் நூலை மிக எளிதாகவும் சுவையாகவும் தமிழில் எழுதக் கூடியவர் என்பதை இந்த முதல் கட்டுரையே தெளிவு படுத்துகிறது. திரு. வேலப்பன் தொடர்ந்து 'இளந்தமிழன்' இதழ்களில் எழுதி வருவார்.*

---

அனைத்துக்கும் இந்த மூன்று தன்மைகளிலும் வேற்றுமை கிடையாது.

உயிர்கள் என்றால் என்ன என்பதை இப்போது நாம் ஓரளவு புரிந்துகொண்டோம்.

நிலாவில் உயிர்கள் கிடையாது என்கிறார்கள். கல்லும் மண்ணுமாய்க் கிடக்கும் நிலாவின் மேல் பரப்பில் எவ்விதமான உயிர்ப் பொருள்களையும் காணவில்லை என்று நிலாவிற்குப் போய் வந்தவர்கள் கூறுகிறார்கள். நிலாவும் நம் உலகம் போன்றதே. ஆனால் நிலாவில் உயிர்கள் எதுவுமே இல்லாதபோது, நம் உலகில் மட்டும் கோடிக்கணக்கான உயிர் வகைகள் வாழுகின்றன. இந்த உயிர்கள் எப்படித் தோன்றின? உயிர்கள் எப்படித் தோன்றின என்று தெள்ளத் தெளிவாக யாராலும் கூற முடியாது.

இருந்தாலும் சில அறிஞர்கள் இந்தக் கேள்விக்குப் பதில் அளிக்க முயன்றிருக்கிறார்கள். அவர்கள் முயற்சியின் காரணமாக நாம் பல புதிய உண்மைகளை அறியும் வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது.

**வேலப்பன்**

மனிதன் குரங்கிலிருந்து வந்தான் என்று சொல்லக் கேட்டிருப்பீர்கள். இந்தக் கொள்கையை முதன் முதல் எடுத்துக் கூறியவர் சார்லஸ் டார்வின் என்ற உயிர் நூல் விஞ்ஞானி ஆவார்.

அவருடைய விளக்கப்படி, உலகில் மனித இனம் முதன் முதலில் தோன்றவில்லை. அவருடைய கொள்கையைப் பரிணாம வாதம் என்று சொல்வார்கள்.

அவர் தம்முடைய கொள்கையை விளக்கி எழுதியிருக்கும் நூல் மிகப் பெரியதாகும். ஆனால், அதை மிகச் சுருக்கமாக இங்கு நாம் கூறுவோம்.

உலகில் முதன் முதலில் கண்ணுக்குத் தெரியாத மிகச் சிறிய உயிர்கள் தோன்றின. அந்த உயிர்களின் ஒரு பிரிவு நாளாவட்டத்தில் பெரிதாகியது. இப்படியே படிப்படியாக உயிரினங்களின் ஒவ்வொரு பிரிவும் வளர்ச்சியடைந்து புழுக்களாகவும் பூச்சிகளாகவும் மாறின. அவற்றில் ஒவ்வொரு பிரிவும் வளர்ந்து ஊர்வனவாகவும், பறப்பனவாகவும், நடப்பனவாகவும் மாறின. கடைசியில் விலங்குகளில் ஒரு பிரிவாகிய குரங்குகளின் ஒரு பிரிவு மனிதனாக மாறிற்று. இந்த மாறுதல் ஏற்பட அதாவது கண்ணுக்குத் தெரியாத நுண்ணு

யிர்களிலிருந்து, மனித இனம் வரை பலவேறு மாறுபாடுகளை யடைந்து உயிர் வகைகள் பல தோன்றி வளர்வதற்குக் கோடிக் கணக்கான ஆண்டுகள் ஆகியிருக்க வேண்டும்.

டார்வினின் பரிணாம வாதத்தை ஓரளவு சுருக்கமாக விளக்குவதென்றால், இந்த அளவுதான் கூற முடியும்.

உலகின் உயிர் இனங்களெல்லாம் அப்படி அப்படியே தாம்தாமாகத் தோன்றினவா, அல்லது டார்வின் கூறுகிறபடி படிப்படியாக ஒன்றிலிருந்து ஒன்று கிளைத்து வளர்ந்தனவா என்பதிலே உயிர் நூல் அறிஞர்களிடையே கருத்து வேறு பாடு இருந்து வருகிறது. ஆனால் உயிர் இனங்களையும், அவற்றின் பண்புகளையும் உற்று நோக்கும் பொழுது, டார்வின் தத்துவம் உண்மையாகத்தான் இருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. எனவே, டார்வினின் பரிணாம வாதத்தை—உயிர்கள் ஓரினத்திலிருந்து பல்வேறு இனமாகக் கிளைத்து வளர்ந்தன என்ற தத்துவத்தைப் பெரும்பாலான அறிஞர்கள் ஒப்புக் கொண்டு விட்டார்கள்.

---

## பழந்தமிழ் பழகுக-விடை

1. வற்கடம்—பஞ்சம்.
   "அக்காலத்துப் பாண்டிய நாடு பன்னீரியாண்டு வற் கடம் புக்கது"
   —இறையனுர் அகப் பொருள் உரை

2. கேழல்—பன்றி
   "கடுங்கட் கேழ லிடம்பட வீழ்ந்தென வன்றவன் உண்ணுதாகி"
   —புறநானூறு

3. பன்னி—மனைவி
   "கன்னியை அழிசெயக் கருதினேன், குரு பன்னியை நோக்கினேன், பருகினேன் நறை, பொன்னிகழி களவினில் பொருந்தினேன் என இன்னவர் உறுகதி என்னதாகவே."
   —கம்பராமாயணம்

4. அயரியோர்—சோம்பேறிகள்
   "செறு தீ நெஞ்சத்துச் சினம் நீடினேரும் சேரா அறத்துச் சீரிலோரும், அழி தவப் படிவத் தயரியோரும், மறுபிறப்பில்லெனு மடவோரும் சேரார் நின்னிழல்"
   —பரிபாடல்

5. பிணிமுகம்—மயில்
   "மணிமயில் உயரிய மாறு வென்றிப் பிணிமுக வூர்தி ஒண் செய்யோனும்"
   —புறநானூறு

6. மாகம்—திசைகள்
   "நீரும் நிலனும் தீயும் வளியும் மாகம் விசும்போடைந்துடன் இயற்றிய"
   —பத்துப்பாட்டு

7. புருவை—இளமை
   "பகுவாய்ப் பல்லிப் பாடோர்த்துக் குறுகும் புருவைப் பன்றி"
   —அகநானூறு

8. அமலை—ஆரவாரம்
   "புட்ட வேந்தனை அட்ட வேந்தன் வாளோர் ஆடும் அமலையும்"
   —தொல்காப்பியம்

9. தொழுதி—கூட்டம்
   "இரும்பிடித் தொழுதி யொடு பெருங்கயம் படியா"
   —புறநானூறு

10. மடுப்ப—ஊற்றி
   "தண்கமழ் தேறல் பொன் செய் புனைகலத்து ஏந்தி நாளும் ஒண்டொடி மகளிர் மடுப்ப மகிழ் சிறந்து"
   —புறநானூறு

# 1. கழுவும் முறைகள்

**பிளேட்டுகள், மங்குகள், கிளாசுகள்**

இனிப்புப் பொருள்கள் வைத்திருந்த சட்டிகள் தட்டுகளை சூடான சோப்புக் கரைசல் நீரால் கழுவ வேண்டும். பிசைந்த மா, முட்டை, மீன் முதலியவை வைத்திருந்த, சட்டி முட்டிகளை சோப்புக் கரைத்த குளிர்ந்த நீரால் கழுவ வேண்டும். எண்ணெய்ப் பசையுள்ள பாத்திரங்களை முதலில் இலேசாகச் சுடுகின்ற தண்ணீரை ஊற்றி அவற்றின் மேலேயே சோப்பைத் தேய்த்துப் பிறகு அந்த இலேசான சூடுள்ள தண்ணீரால் கழுவ வேண்டும். சோப்பு நாற்றத்தைப் போக்குவதற்கு இலேசாகச் சாம்பலை மேலாகப் போட்டுத் தேய்த்துக் கழுவலாம்.

சட்டி பானைகள் விளக்க வைத்திருக்கும் சாம்பலை, கல் மண் இல்லாமல் நன்றாகக் கொழித்து வைத்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் அவை கையில் உருத்துவதுடன், உலோகச் சட்டிகள் பிளேட்டுகளில் கீறல் விழச் செய்யவும் கூடும். விளக்கிக் கழுவ வைத்திருக்கும் தண்ணீரில் இலேசாகக் காடியை (Vinegar) ஊற்றிக் கொள்வது நல்லது. விளக்கிக் கழுவுவதால் கையில் ஒருவிதமான வரவரப்பு ஏற்படாமல் தடுப்பதற்கு இது துணை செய்கிறது. பாத்திரங்களிலும் ஒரு புதிய மினுமினுப்பை உண்டாக்கும் தன்மை இந்தக் காடி கலந்த தண்ணீருக்கு இருக்கிறது.

எக்காரணத்தைக் கொண்டும் அலுமினியப் பாத்திரங்களை (Washing Soda) சோடா உப்பினால் கழுவக் கூடாது. அலுமினியப் பாத்திரத்தை சோடா உப்பு அரித்துத் தின்று விடும் தன்மையுள்ளது. ஆகவே இந்த விஷயத்தில் கவனமாயிருக்க வேண்டும்.

பால் வைத்திருந்த கிளாசுகளையும் சட்டிகளையும் முதலில் குளிர்ந்த தண்ணீரால் கழுவிவிட வேண்டும். அதன் பிறகுதான் விளக்கிக் கழுவ வைத்திருக்கும் தண்ணீருக்குள் அவற்றைப் போடவேண்டும். பால் வைத்திருக்கும் சட்டிகளில் நாம் சூடான தண்ணீரை ஊற்றிக் கழுவுவோமானால், ஆடை படர்ந்தது போல் ஒரு கறை அவற்றின் மீது படியும்.



விளக்கிக் கழுவ வைத்திருக்கும் தண்ணீருக்குள், கழுவ வேண்டிய எல்லாப் பாத்திரங்களையும் போட்டு ஊறவைக்க வேண்டும். அவற்றில் முதலில் கண்ணாடிப் பாத்திரங்களையும் பிளேட்டு, மங்குகளையும் எடுத்துக் கழுவிவிட வேண்டும். பொதுவாக விளக்கிக் கழுவுவதில் கையாள வேண்டிய முறை என்னவென்றால், எளிதாக முடியக்கூடியதை முதலில் செய்யவேண்டும் என்பதே. அந்த முறையில் கண்ணாடிப் பாத்திரங்களை முதலில் செய்வதே பொருத்தம்.

கண்ணாடிப் பாத்திரங்களை விளக்கிக் கழுவிய பின் புத்தொளியோடு இருக்கச் செய்வதற்கு இலேசாக நீலங் கரைத்த தண்ணீரால் கழுவிப் பிறகு காயவைக்கலாம். கோப்பைகளில், காப்பி, டீ ஆகியவற்றின் கறைகள் படிந்திருப்பதை நீக்குவதற்கு, காடி கலந்த நீரில் அவற்றை ஊற வைத்து, ஒரு கந்தையில் உப்பைத் தொட்டுக் கொண்டு தேய்க்க வேண்டும்.

சோடா மா (Banking Soda) வுடன் ஒரு ஸ்பூன் அளவு சோப்புப் பவுடரைக் கலந்துகொண்டு தேய்த்தால் போகாத காப்பிக் கறையும் போய்விடும்.

போத்தல்கள், குறுகியவாயுடன் கூடிய சாடிகள் ஆகியவற்றைக் கழுவுவது கஷ்டமாகத்தான் இருக்கும். உடைந்த முட்டை ஓடுகள் சிறு குழாங்கற்கள், காப்பித்தூள் ஆகியவற்றை உள்ளேகொட்டிக் குலுக்க வேண்டும்.

எலுமிச்சம்பழத்தைச் சிறு சிறு துண்டுகளாக நறுக்கிப் போத்தலுக்குள் போட்டு, அரைப் போத்தல் அளவு தண்ணீரை ஊற்றிக் குலுக்கி எடுத்துக் கழுவினாலும் அவை சுத்தமாகும்.

குழந்தைகளின் பால் போத்தல்களை, குளிர்ந்த நீர்விட்டு பிரஷினால் தேய்த்துக் கழுவ வேண்டும். குழந்தை பால் குடித்து முடித்த ஒவ்வொரு முறையும் உடனுக்குடன் போத்தலைக் கழுவிவிட வேண்டும். இல்லாவிடில் பால் கறை பிடித்துப் போகும். போத்தல் ரப்பர்களை தண்ணீருக்குள் அமுக்கிக் கைவிரல்களால் துளாவிக் கழுவுவதோடு அவற்றின் துவாரத்தின் வழியாகவும் தண்ணீரை அமுக்கிப் பீச்சி சுத்தப்படுத்த வேண்டும்.

தர்மாஸ் பிளாஸ்க்குகளைக்கழுவ சோடாமாவு கரைத்த சுடு தண்ணீரைப் பயன்படுத்த வேண்டும். அதன் மூடியை அடிக்கடி கழுவிக் காயவைக்க வேண்டும். இரண்டு மூன்று மூடிகள் வைத்துக்கொள்வது நலம். மூடும்போது கார்க் மூடியை அப்படியே மூடாமல், அதன் அடியில் வழுவழுப்பான தாளை வைத்து மூடுவது நல்லது. வைக்கும் பொருள் கார்க்கினுள் போய்விடாமல் இருப்பதற்கும், எளிதாகத் திறப்பதற்கும் இந்த முறை உதவியாயிருக்கும்.

பிளாஸ்கில் எதுவும் இல்லாத போது, அதை மூடாமலே வைத்திருக்க வேண்டும்.

**வெள்ளிச்சாமான்கள்**
**கழுவும் முறை**

வெள்ளிப் பாத்திரங்களைப் பளபளப்பாக வைத்திருக்க, சிறிது சில்வர் கிரீம் எடுத்து, அதை பேப்பர் டவலால் பாத்திரத்தைத் தேய்க்க வேண்டும். நன்றாகத் தேய்த்த பிறகு சூடான நீரில் கழுவிப் பின் மறுபடியும் பேப்பர் டவலால் துடைத்துக் காயவைக்க வேண்டும்.

வெள்ளிப் பாத்திரங்களில் முட்டையினால் ஏற்பட்ட கறையை நீக்குவதற்கு, சிறிது பொடி

உப்பை அதன் மீது தூவி, ஈரத் துணியால் துடைக்க வேண்டும்.

வெள்ளிப் பாத்திரங்களைச் சுத்தப் படுத்திப் பளபளப்பாக்க இன்னொரு சிறந்த முறையிருக்கிறது. ஓர் அலுமினியச் சட்டியில் இலேசாகக் காடிகலந்த நீரைஊற்றிக் கொதிக்கவைக்க வேண்டும். பிறகு அந்தச் சூடான நீரில் சிறிது உப்பும் சோடாமாவும் கொட்டி மறுகொதி வரும்வரைக் காத்திருந்து, கொதித்தவுடன் சுத்தம் செய்யவேண்டிய வெள்ளிப் பாத்திரங்களை கொதி நீருக்குள் போடவேண்டும். வெள்ளிச் சாமான்கள் பளபளப்பாகும்வரை நீர் கொதித்துக் கொண்டிருக்கும்படி விட்டுவைக்க வேண்டும். பிறகு வெள்ளிப் பாத்திரங்களை எடுத்து, சோப்புக் கரைத்த நீரால் தேய்த்துக் கழுவி, உலர்ந்த



துண்டொன்றினால் துடைக்க வேண்டும்.

அடிக்கடி பயன்படுத்தாத வெள்ளிப் பாத்திரங்களை ஒருமுறை பாலிஷ் செய்த பிறகு, மெல்லிய தாளில் சுற்றிவைத்திருப்பது நல்லது. காற்றுப்பட்டால், காற்றில் உள்ள ஈரத்தால், அவற்றில் ஒருவித வெள்ளைக் கறை படிவதை இது தவிர்க்கும். மேலும் பாத்திரங்கள் ஒன்றோடொன்று உராய்ந்து கீறல்கள் ஏற்படாவண்ணம் தடுக்கும். உபயோகத்திற்கு எப்பொழுதும் எடுக்கக் கூடிய முறையில் பளபளப்பாக இருக்கும்.

வெள்ளி நகைகள் கறை பிடியாமல் இருப்பதற்கு அவற்றை வார்னிஷ் செய்து வைத்திருக்கவேண்டும். வார்னிஷ் பண்ணிய நகைகளை அவ்வப்போது இலேசான துணியால் துடைத்துக் கொண்டால் போதும், பளிச்சென்று வந்துவிடும்.

இலேசாகப் பால் கலந்த தண்ணீரால் வெள்ளிப் பாத்திரங்களைக் கழுவினால், அவை பிரகாசமாக இருக்கும்.


### செப்புப் பாத்திரங்கள்

செப்புப் பாத்திரங்கள், பித்தளைப் பாத்திரங்களை விளக்குவதற்கு நாம் சாதாரணமாகப் புளியைப் பயன்படுத்துகிறோம். புளி போட்டு விளக்காவிட்டால் அந்தப் பாத்திரங்கள் பார்க்க சகிக்காத முறையில் காட்சியளிக்கும். புளிபோட்டு விளக்கியபின், கழுவித் துடைத்துவிட வேண்டும்.

அரிசி அல்லது கோதுமை மாவு, உப்பு, காடி ஆகியவற்றைக் கலந்து ஒரு பேஸ்ட் தயார் செய்து வைத்துக் கொள்ளலாம். விளக்கிக் கழுவுகிற இடத்தில் இந்தப் பேஸ்ட்டை வைத்துக் கொண்டு, செப்புப்பாத்திரங்களை, இதைக் கொண்டு தேய்த்துக் கழுவித் துடைத்துக் காயவைத்து விடவேண்டும்.

செப்புப் பாத்திரங்களைச் சுத்தப் படுத்த எலுமிச்சம்பழமும் பயன்படும். பாதியாக வெட்டிய எலுமிச்சம்பழத்தை அதன்மேல் பகுதியில் உப்பைத் தொட்டுக் கொண்டு பாத்திரத்தைத் தேய்த்து சூடான நீரில் கழுவி, நல்ல துண்டால் துடைத்துவிட்டால், தகதக வென்று ஆகிவிடும்.

உணவு சம்பந்தமான வேலையில் பயன்படாத குத்துவிளக்குப் போன்ற செப்புப் பித்தளைப் பாத்திரங்களுக்கு வார்னிஷ் பூசி



ஆளவந்த கப்பல்
நம்மை
அடக்கவந்த கப்பல்
சூழவந்த கப்பல்
நம்மைத்
துன்புறுத்தும் கப்பல்
வெள்ளைக்காரன் கப்பல்
நமக்கு
வேண்டாமடி கண்ணே
கொள்ளைக்காரன் கப்பல்
நமக்குக்
கூடாதடி கண்ணே

---

வைத்துவிட்டால், அடிக்கடி கெட்டுப் போகாமல் இருக்கும். வார்னிஷ் குலைய ஆரம்பிக்கும்போது அதை சாராயத்தின் துணையால் அகற்றிவிட்டு மீண்டும் புதிதாக வார்னிஷ் செய்து வைத்துக் கொள்ளலாம்.

அலுமினியப் பாத்திரங்களைத் தேய்த்துக் கழுவ இரும்புப் பஞ்சை (ஸ்டீல் உல்) பயன்படுத்தவேண்டும். உப்புக்கள் அதிகமாகக் கலந்துள்ள சவுக்காரங்களால் தேய்த்துக் கழுவுவதால், அலுமினியப் பாத்திரங்களின் நிறத்தில் மாறுபாடு ஏற்படுகின்றது. ஆகவே சவுக்காரங்களைப் பயன்படுத்தாமல் இருப்பது நல்லது.

சாதாரணமாக அலுமினியப் பாத்திரங்களைக் கழுவ சாம்பலும் தேங்காய்க் குடுமியும் போதும். அதில் பற்றுப் பிடித்திருந்தால் தான் ஸ்டீல் உல்லைப் பயன்படுத்த வேண்டும். பயன்படுத்துகின்ற ஸ்டீல் உல்லும் மிருதுவானதாக இருக்கிறதா என்று பார்த்துக் கொள்ளவேண்டும்.

அலுமினியப் பாத்திரத்தில் உணவுப் பொருள் எரிந்து கரியாகி ஒட்டிக் கொண்டிருந்தால் அதை எளிதான முறைகளால் அகற்ற முடியாதபோது, அந்தப் பாத்திரத்தை அப்படியே அடுப்பில் வைத்து இலேசாகத் தீயெரித்து, அந்தக் கரி சுருண்டு வரும் வரை சூடேற்றவேண்டும். பிறகு தேங்காய் நார் அல்லது ஸ்டீல் உல்லால் தேய்த்துக் கழுவிக் கொள்ள வேண்டும்.

**இருப்புச் சட்டிகள்**

இருப்புச் சட்டிகள் பெரும்பாலும் எண்ணெய்ப் பொருள்களால் உணவு சமைக்கவே பயன்படுத்தப் படுகின்றன. அவற்றை அப்படியே கழுவாமல் துடைத்து விட்டுப் பயன்படுத்தலாம் என்றாலும், எண்ணெய்ப் பசையே நாளடைவில் ஓர் அழுக்காக மாறிவிடும் ஆகையால் அடிக்கடி அதைத் தேய்த்துக் கழுவி வரவேண்டும். தோசைக் கல்லை வேண்டுமானால், வாரம் ஒரு முறை தேய்த்துச் சுத்தப்படுத்திக் கொள்ளலாம். ஆனால், தாளிக்கிற கரண்டி, இருப்புச் சட்டி முதலியவற்றை அன்றாடம் சுத்தமாகக் கழுவி விடவேண்டும். சூடான நீரால் சோப்புப் போட்டுக் கழுவ எண்ணெய்ப்பசை நீங்கும். அமோனியா உப்பையும் தேய்க்கப் பயன்படுத்தலாம். தேய்ப்பதற்கு ஸ்டீல் உல்லைக் கையாளலாம்.

நன்றாகக் கழுவியபின், நீர்த்துளிகள் சிறிதும் இல்லாதபடி துடைத்துக் காயவைத்து விட வேண்டும். கழுவிக் காயவைத்த பிறகும், காற்றில் உள்ள ஈரத்தால்

இருப்புச் சட்டிகள் துருப்பிடிக்க வழியுண்டு. ஆகையால், புதிய எண்ணெயை எடுத்து சட்டியின் இருபுறத்திலும் இடைவெளிவிடாமல் இலேசாகத் தடவிவைக்க வேண்டும்.

நம் கவனக் குறைவு காரணமாக எப்போதாவது இச்சட்டிகளில் துருப்பிடித்து விட்டால்—அல்லது நெடுநாளாகக் கவனிக்காமல் இருந்த காரணத்தால் துருப்பிடித்திருந்தால், அதை நீக்குவதற்கு மண்ணெண்ணெயைப் பயன்படுத்த வேண்டும். துருப்பிடித்த இடத்தில் மண்ணெண்ணெயை ஊற்றி, ஸ்டீல் உல்லைக் கொண்டு தேய்த்துத் துருவை அகற்ற வேண்டும். பிறகு மண்ணெண்ணெய் நாற்றம் போக அதை சோப்பிட்டுக் கழுவ வேண்டும். சமையலுக்குப் பயன்படாத, வீட்டிலுள்ள வேறு இரும்புச் சாமான்களில் துருப்பிடிக்காமல் பாதுகாக்க அவற்றிற்கு ஈய வெள்ளை அடித்து விடுவது நல்லது. பார்க்கப் பார்வையாகவும், துருப்பிடித்துப் பாழாகாமலும் இருக்கும்.

டின் சாமான்களை சோப்பிட்டுக் கழுவி, ஈரமில்லாமல் நன்றாகத் துடைத்து வைத்துக்கொள்ள வேண்டும். அடுப்பில் பயன்படுத்தக் கூடிய தகரங்களை, அவற்றின் மீது கரிப் பிடித்திருந்தால் சாம்பல் போட்டுத் தேய்த்துக் கூடுமான வரை தான் கரியை அகற்றவேண்டும். பற்றுப் பிடித்திருந்தால் தண்ணீர் ஊற்றி ஊறவைத்துப் பிறகு தேய்த்து அதை அகற்ற வேண்டும்.

அரிவாள்மனை கத்திகள் முதலியவற்றை எப்பொழுதும் கூர்மையாக வைத்திருக்க வேண்டும். கத்திகளை காய்கறி நறுக்குவதற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும்.



தமிழன் விட்ட கப்பல்
நம்மைத்
தலைநிமிர்த்தும் கப்பல்
சிதம்பரத்தின் கப்பல்
நம்
சுதந்திரத்துக் கப்பல்
பாரதத்துக் கப்பல்
நமது
பாக்கியமடி கண்ணே
வீரர்விட்ட கப்பல்
நமக்கு
வேண்டுமடி கண்ணே!

---

கத்திப் பிடிகளைப் பளபளப்பாக வைத்திருக்க அவ்வப்போது, பாதியாக நறுக்கிய எலுமிச்சம் பழத் துண்டை உப்பில் தோய்த்தெடுத்துப் பிடிகளில் தேய்க்க வேண்டும். கத்திகளில் உள்ள கறை கார்க்கு ஒன்றை எடுத்துத் தேய்த்தால் போய்விடும்.

ஸ்டீல் உல்லைப் பயன்படுத்துவதில் உள்ள தொல்லை அது எளிதாகத் துருப்பிடிக்கும் என்பது தான். துருப்பிடித்த ஸ்டீல் வில்லைப் பயன்படுத்துவதைப் போல் கெடுதல் வேறில்லை. அது துருபிடிக்காமல் இருக்க அதை எப்போதும் ஒரு கண்ணாடிக் குவளையில் சோப்புக் கரைசல் நீருக்குள் அமுக்கி வைத்திருக்க வேண்டும். சோப்புக் கரைசலை நாள் தோறும் மாற்றிக்கொண்டிருக்க வேண்டும்.

# மண் குதிரை

துள்ளும் மான்கள் துள்ளிட— ஆடும் மயில்கள் ஆடிட—பாடும் குயில்கள் பாடிட—பேசும் கிளிகள் பேசிட கோலமிகுந்து கிடந்தது குதிரைமலைக் காடு!

தகடூர்! இதுதான் தலைநகரத்தின் பெயர்.

மழவர் தலைவன்—அதியர் கோமான் அதிகமான் நெடுமான் அஞ்சி! இவன்தான் அத் தகடூர்த் தரணியை ஆண்டு வந்தனன் மாட்சிமை தங்கிட!

இவன் வீரந்துள்ளும் வேலினைப் பெற்றவன்— வீணர் செய்கையை விரைந்து தடுப்பவன்!

காலனையும் எதிர்க்கும் ஆற்றல், கடுஞ்சினத்தோன் இவனிடமுண்டு!



கொடுப்பதையே தொழிலாகக் கொண்ட கொடையாளி மட்டுமல்லன்— படையெடுப்பதையே தொழிலாகக் கொண்ட தூய்மையான வீரனுங்கூட!

கடையேழு வள்ளல்களிலே ஒருவன்—கட்டு மீசையை வளர்க்க எண்ணும் பிரியன் — கடுஞ்சினத்தால் பகைவர்களை நடுங்க வைக்கும் தீரன்!

முடிமன்னர் மூவேந்தரும் போர்ப் பறையைத் தட்டுகின்ற வேளையில்—அதிகமான் யார் பக்கம் இருக்கின்றானோ அம்மன்னனுக்கே வெற்றி மாதா வாகைசூடி வரவேற்பாள்! எனவே, எம்மன்னரும் தம் பக்கம் அதிகமான் சேர்ந்திருப்பதையே பெரிதும் விரும்புவர்!

இத்தகைய ஆற்றல்மிகு அரிமாவோடு மோத எண்ணினான், காஞ்சியை ஆண்டுவந்த தொண்டைமான் என்னும் மன்னன்.

படை குவித்தான் பல்லவர் பெருமை சொல்லும் காஞ்சியிலே! போர்க்கருவிகள் சமைத்தான் போதுமென்ற அளவுக்கு! பின்னர் துடிதுடித்தான் அதிகமானின் கோட்டையை அதமாக்கிக் காட்ட!

இவ்வதிசயச் செய்தி கேட்டு அதிகமான் ஆச்சரியப்படவில்லை! பதிலாக அனுதாபப் பட்டான் தொண்டைமானை எண்ணி.

அவைப்புலவர் ஔவையை அழைத்தான்! தொண்டைமானின் தவறான எண்ணத்தைத் தவிர்க்கும்படி தூதனுப்பினான்.

தூது சென்ற ஔவை, போருக்குத் துணிவுகொண்ட தொண்டைமானைச் சந்தித்தாள்.

புலவர் பெருமாட்டியை வரவேற்ருன் வாள்வேந்தன்—அதற்குப் பின்னர் வாய்வீரம் பேசி நின்ருன்! வந்த மூதாட்டியோ அத்தனையும் கேட்டுக்கொண்டு பதிலேதும் பேசாமல் நின்ருள்.

திரட்டி வைத்திருந்த படையினைத் திறம்படக் காட்டினுன். குவித்து வைத்திருந்த போர்க்கருவிகளின் நேர்த்தியை விளக்கினுன்.

கண்டனள் ஔவை—களிகொண்டு மெச்சினள் காஞ்சிக் காவலனை!

தொண்டைமானே உச்சி குளிர்ந்தான் உணர்ச்சிப் பெருக்கால்! மெச்சிய புலவர்க்கு புகழாரம் சூட்டினுன்.

மகிழ்ச்சியின் உச்சியிலே அவன் அமர்ந்த நேரம் பார்த்து ஔவை சொன்னுள்.

"காஞ்சிக்காவல! கூர்மழுங்கா வேலும்—குத்துப்படா குத்துவாளும் - களங்களைச் சந்தித்தறியாத கருவிகளும் ஏராளம் நின் பாசறையிலே! இவ்விதம் புதுப் போர்க்கருவிகளைச் சேர்த்து வைத்திருப்பதால் மட்டும், வெற்றி உன் பக்கம் நிற்கும் என்பது என்ன நிச்சயம்? மேலும் உன் படை வீரர்கள் களத்தைச் சந்தித்தறியாதவர்கள். போர் முழக்கமிடப் புதுப்படையைத் திரட்டி வைத்திருக்கின்ருய்! இந்நிலையில் வெற்றி உன்னை எப்படி நாடும்?

போர்க்கலையில் அநுபவமுள்ளவனிடம், இனிமேல் அநுபவம் பெறப் போகிறவன் போய் எந்த விதத்தில் வெற்றி காணமுடியும் என்று நீ நம்புகிருய்? எனவே, உன் தவருன எண்ணத்தைத் தவிர்த்து விடு!" என்று துணிவோடு கூறி முடித்தாள்.

"உம் பேச்சுத் திறத்தால் என் எண்ணத்தையே அடியோடு சாய்த்துவிட்ட ஔவை மூதாட்டியே! நீவிர் வாழ்க! நின் புலமை வாழ்க! இனிப் போரில்லை எனப் போய்ச் சொல்லுங்கள்! அதிகமான் நெடுமான் அஞ்சி இனி எனக்கு உற்ற நண்பன் என்பதை உரையுங்கள்" என்று திருந்திய தொண்டைமான் உரைத்தான்.

மட்டற்ற மகிழ்ச்சிகொண்ட ஔவை, தொண்டைமானிடம் விடை பெற்றுக்கொண்ட தகடூர் நோக்கிப் புறப்பட்டாள்.

துணை வந்த இரு குதிரை வீரர்களுடன் பல்லக்கில் சென்று கொண்டிருந்தாள் ஔவை. வழியில் ஒரு ஆறு குறுக்கிட்டது.

அந்த இடத்தில் எல்லோருமாக சிறிது நேரம் இளைப்பாறிவிட்டு, மீண்டும் பயணத்தை ஆரம்பிக்கும் போது—ஒரு வீரன் மற்றவனைப் பார்த்துக் கிண்டலாகப் பேச ஆரம்பித்தான்!

"ஏனப்பா மாரு! உன் குதிரை மண் குதிரையல்லவே? மண் குதிரையாய் இருந்தால் அதை நம்பி ஆற்றில் இறங்கி விடாதே" என்று எச்சரித்தான்.

இவன் இப்படி கேலி பேசியது மாறனுக்கு ஆச்சரியமாக இருந்தது. நம் குதிரையாவது மண் குதிரையாவது? இது என்ன பழமொழி! மண்ணுல் குதிரை செய்து அழகு பார்ப்பார்களே

இலக்கியச்சித்தர்
தங்கவயல்
லோகிதாசன்

## பாரதி கனவுகண்ட பாரதப் பெண்கள்

அஞ்சா நெஞ்சுடைய இரண்டு கல்லூரி மாணவிகள் ஓடும் புகை வண்டியிலிருந்து குதித்தார்கள். ஒருத்தியின் பையிலிருந்த பொருள் களைத் திருடிக்கொண்டு ஓடிய திருடர்களை விரட்டிப் பிடித்தார்கள். புகைவண்டிக் காவல் நிலையத்தில் அந்தத் திருடர்களை ஒப்படைத்தார் கள்.

செல்வி அஞ்சலிகுல்கர்னி, செல்வி அல்காநாயக் இருவரும் பம்பா யைச் சேர்ந்த சைடனும் கல்லூரி மாணவிகள். அவர்கள் சர்ச்கேட் நிலையத்தில் பெண்கள்வண்டியில் ஏறியமர்ந்தார்கள். சிறிது நேரத்தில் அவ்வண்டியில் மூன்று இளைஞர்கள் ஏறினார்கள். அவர்களில் ஒருவன் மோதிரங்கள் சிலவற்றை விற்பனை செய்வதற்காக அப்பெண்களுக்குக் காட்டிக்கொண்டிருந்தான். அப்போது அவனுடன் வந்த இருவர் மிக விரைவாக வண்டியிலிருந்து இறங்குவதைச் செல்வி குல்கர்னி கண் டாள். அவளுக்கு ஐயம் தோன்றியது. சட்டென்று தங்கள் பைகளை நோக்கினாள். தன் தோழியின் பை திறந்திருப்பதையும், அதிலிருந்த பொருள்கள் குறைவதையும் கவனித்த அவள் சற்றும் காலந்தாழ்த்தா மல் தன் தோழியுடன் ஓடும் வண்டியிலிருந்து கீழே குதித்தாள்.

உடன் அவள் தோழியும் குதித்தாள். திருடிக்கொண்டு ஓடியவர் களை அவர்கள் இருவரும் விரட்டிப் பிடித்தார்கள். காவல் அதிகாரிகளி டம் ஒப்படைத்தார்கள். செல்வி குல்கர்னி ஒரு காவல் அதிகாரியின் மகள். திருடர்களின் செயலைச் சட்டென்று புரிந்துகொள்ளும் ஆற்ற லும் அஞ்சா நெஞ்சமும் அவளிடம் இயற்கையாக அமைந்திருந்ததில் வியப்பில்லை. அவள் தோழியும் அவளைப் போலத்தானே இருப்பாள். இன்றைய பாரதப் பெண்கள் தீரத்தில் சற்றும் குறைந்தார்களல்ல என் பதற்குச் சான்றாய் விளங்குகின்றார்கள் இக்கல்லூரி மாணவிகள்.

---

தவிர—அதைக்கொண்டு வந்தா ஆற்றில் சவாரி செய்வார்கள்? இல்லாத செய்கைதான்! என்று லும், இருக்கிறதே பழமொழி!

பக்கத்திலேயே ஔவையை வைத்துக்கொண்டு பழமொழிக்கு விளக்கம் தெரியாமல் இருப்பதா? என்று எண்ணி ஔவையிடம் விஷயத்தை விளக்கினான்!

ஔவை சொன்னாள் :

"வீரனே! "மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்காதே!" என்னும் பழமொழியானது—"மண் —குதிரை" நம்பி ஆற்றில் இறங் காதே! என்பதிலிருந்து மருவி விட்டது மக்களிடையே! இரண் டுக்கும் அதிக வித்தியாசம் தெரிய வில்லை யல்லவா?

மண்-குதிரை நம்பக்கூடாது! அதாவது மண்—குதிர் என்பதற்கு மணல் மேடு—மண்திட்டு என்பது பொருள். இது ஆற்றின் நடுவில் இருக்கும்! மண்திட்டுத் தானே என்று நாம் கால் வைத்து ஊன்று வோமானால், அது உடனே அழுந்தி சரிந்து விடும்! இந்த மண்—குதிரைத்தான் நம்பி ஆற் றில் இறங்காதே என்றார்கள் நமது முன்னோர்.

இந்த மண் குதிர்தான்—மண் குதிரையாக மாறிவிட்டது நாள டைவில்! புரிகிறதா? புறப்படு... புறப்படு அதிகமான் எனக்காக ஆவலோடு காத்திருப்பான்!" என்றார் ஔவை மூதாட்டி.

விளக்கம் பெற்ற மழவவீரன், மகிழ்ச்சி கொண்டு குதிரையை முடுக்கி விட்டான்.

குதிரைகள் விரைந்தன முன்னே-பல்லக்கும் விரைந்தது பின்னே! ✱

# கற்பின் மலர்ச்சி

பன்மொழிப்புலவர்
**கா. அப்பாத்துரையார்**
எம். ஏ., எல்.டி. (விசாரத்)

ஆண் பெண்களின் கடமை உரிமைகளாகத் தமிழர் வகுத்த மைத்துத் திருவள்ளுவர் கட்டமைத்த பண்புகள் முற்றிலும் செயற்கையாய் அமைக்கப்பட்டவை யல்ல; இயற்கை வழியே, உயிரின மலர்ச்சி, மனித இன மலர்ச்சி வழியே அவர்கட்கு இயல்பாய் அமைந்த குணங்களின் மீதே அவை வகுத்துக் கட்டமைக்கப்பட்டன, இதனாலேயே அவை உயர் விலங்கினங்களில் சிலவற்றிலேனும் கருவடிவில் காணப்படுகின்றன—இதனாலேயே அவை மனித இனமெங்கும் மனித நாகரிகம், பண்பாட்டுடன் நாகரிகம், பண்பாடாக, இனங்கள் அறியாமலே பரவியுள்ளன, பரவிவருகின்றன.

தொலை கடந்து, காலங்கடந்து, உலக முன்னேறுந்தோறும், நீர் வளத்தின் அளவே தன் தண்டளவாக வளரும் தாமரைக் கொடி போல, திருக்குறள் அவ்வந்நாகரிகப்படி, காலப்படியின் புத்தம் புதுப்பண்பு பண்பாடுகளுக்கு இசைய என்றும் புத்தம் புதிதாக அமைந்து நிற்பதன் விளக்கமும் இதுவேயாகும்.

காதலுணர்வின் வளர்ச்சியில் நாம் இரு திறங்களைக் காணலாம். ஒன்று அகவளர்ச்சி, உள்ளார்ந்த, உளவளர்ச்சி, இதன் பயனாக உடலும் உளமும் காதலுக்கேற்ற, காதலை உணரத்தக்க உள்வளர்ச்சி பெற்று, புறமிருந்து காதல் தூண்டுதல் வந்தவுடனே முழுதும் மலர்ச்சியுறுகின்றன, இன்னொரு வளர்ச்சி புறவளர்ச்சி, வெளிப்படையாகப் பருவத்தே கிளர்ந்தெழுந்து முனைப்பாகச் செயலாற்றும் நிலையாகும். இதுவும் உள்ளார்ந்த பருவவளர்ச்சியே யானாலும், பருவத்தில் எளிதாகப் புறந்தோன்றிச் செயலாற்றத் தொடங்கும் வளர்ச்சியாகி விடுகிறது.

பெண்டிரிடம் காதல் அக வளர்ச்சியாகவே நீடித்து நிலவுகிறது. ஆயினும் இவ்வளர்ச்சி ஆடவரைவிட மிகுந்த இளமையிலேயே பெண்டிரிடம் தொடங்கி, ஆடவரினும் வேகமாகவே வளர்ந்து, அதன் பயனாக அப்பெண்டிர் அறியாமலே, புறத்தார்க்குக்கூட கூர்ந்து உணருவோர்க்கே, பண்புடையோர்க்கே புலப்படும் வகையில் அச்சம், மடம், நாணம், ஆக வெளிப்படுகிறது. ஆடவன் வளர்ச்சி பெரிதும் புற வளர்ச்சியாய், அகவையிலும் பெண்டிரைவிட மிகப் பிந்தித் தொடங்கி, மிக மெல்லவே வளரினும், புற முனைப்புற நிற்றலால், பெண்டிரைக் கண்டவுடன் அத்தூண்டுதலால் புறத்தும் செயலுருவில் விரைந்து வளர்கிறது.

பெண்டிரின் மென்மை உடல் மென்மையில் மட்டும் அமையவில்லை. காதலே உருவாக அவர்கள் இயல்பாய் அமைவதல்லது,

அதைப் புறமறிவதிலோ, அதன் தன்மைகளைக் கண்டுணர்வதிலோ அவர்கள் வலிமையற்றவர்களா கவே உள்ளனர். காதல் குருத்து விடாத பருவத்தில் பெண்டிர் இத னாலேயே பேதை எனப்படுகின் றனர். இது பருவப்பேதமை, ஆட வர்க்குள்ள அறிவிலாப் பேதை மையன்று. இப் பருவத்திலே அவர்களைக் குடும்பமும் குடும்பச் சூழலும் பண்புகளுமே புற அர ணாக நின்று ஓரளவு காக்கின்றன. பருவம் வந்தபின் கூடக் காதலு ணர்வு பெண்டிரிடம் உள்ளார்ந்த உணர்வாகவே நிற்றலால், குடும் பப் பெண்மையின் இயலார்ந்த பெண்மை அதாவது அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்னும் நாற்குண இயல்பும், அதில் தமிழ் மரபில் மலர்ந்த கற்புஎன்னும் பண்புமே அக அரண்களாக அமைந்து பெண்டிர் காதலுக்குரிய காப்பு அளிக்கின்கிறன.

பெண்டிர் பெண்மையுடனொத்த ஆடவர் பண்பே நிறை. ஆனால் இது ஆடவரிடம் பெண்மைபோல இயல்பாக மலர்வதில்லை, மலரும் போதும் பிற்பட்டே மலர்ச்சியுறு கிறது. அத்துடன் பெண்டிருக்குக் காதல் உயிர், கற்பு உரிமை. ஆட வருக்கே நிறை உயிரன்று, உரி மையுமன்று, கடமை. பேராண் மையோ, கடமை கூட அன்று, பண்புகூட அன்று, பண்பின் மேம் பட்ட சால்பு ஆகும். இயற்கை வழி நின்ற பெண்டிர் இயற்பண் பான பெண்மையும் காதலும் தவ றாது நிற்பவை, தவறின், உடைந் தால் உருப்பட முடியாத ஓடு போல, கண்ணாடி போல எளிதில் ஆக்கம் பெறமுடியாத தாகின்றது. ஆனால் ஆடவன் நிறை, பேராண்மை போன்ற திறங் களோ, துலைக்கோலின் மேல் நோக்குப் போல ஊசலாடியும் தடுநிலை காண்பவை.

குறட்பா கூறும் ஆடவன் பண்பு பெண்டிரின் இயல்பான மென்மை களைப் பாதுகாக்கும் ஆடவரின் உயர் சால்பை வலியுறுத்துகிறது. தனிமையில் செல்லும் போது கண்ட பொற்கிழியை ஒருவன் எடுத்துக் கொள்ளல் எளிது, எவ ரும் குற்றம் காணமுடியாத செய லும் ஆகும். இந்த எளிய ஆதா யத்தைத் துறந்து அதை உரிய வரிடம் தேடிக் கொடுக்கும் ஒரு வனது சமுதாய, அரசியல் பொறுப்புணர்ச்சி எவ்வாறு சரா சரி மனிதனுக்கு மேம்பட்ட சால்பு ஆகுமோ, அது போன்றது ஆட வன் எளிதில் செய்யத்தகும் தவறு களைச் செய்யாது, குடிமைநிலை யில் நின்று பெண்மை காத்தல் ஆகும்.

திருவள்ளுவர் ஆடவனுக்கு, கற்புடைப் பெண்டிரின் நிலையாய கிய குடும்பத்தில் பிறந்து வாழ்ந்து அம்மரபு பேணும் குடும்ப ஆடவ னுக்கு, இந்தச் சால்பைச் சால்பு என்று கொள்ளாமல், அறம் என்றே கொண்டார். ஆகவே தான் இதில் தவறுவதைக் தீமை என்றார்.

உறவு, நட்பு, பாசம் காரண மாகத் தன் குடும்பத்துடன் ஒட் டிய குடும்பம் போல அமைந்து பழகிய குடும்பங்களில் அக்குடும் பத் தலைவருடன் தலைவராகப் பழ கும் ஆடவன் எளிதாக அவர் காப் பில் உள்ள பெண்களை நயவஞ்சக மாக ஏமாற்றி விட முடியும். இது ஆடவன் அறப்பண்புக்குக் கேடான தீமை. ஏனெனில் இதில் உளத்தே நயவஞ்சகம்; உறவியல் நம்பிக்கைக் கேடு; சமு தாய வாழ்விலே, அழிமதி. இத் தீமை தவிர்த்தாலோ, அவன் அறத்தின் அறமாகிய சால்புடைய வன் ஆகிறான். அவன் கற்பின் மலர்ச்சியாகிய தாய்மைக்கு ஒப் பான சான்றாண்மைக்கு ஒப்பாம், தகுதியுடையவன் ஆகிறான்.




# கப்பல் ஓட்டிய தமிழர்

வெள்ளையன் இந்நாட்டை விட்டு விரட்டப்பட வேண்டுமானால், அவனுடைய ஆதிக்கத்தின் ஆணிவேரான வியாபாரத் துறையைத் தான் முதலில் கைப்பற்ற வேண்டுமென்ற ஒரு சிறந்த திட்டத்தை முதலில் வகுத்த பெருமை சிதம்பரனாருக்கே உரியதாகும். 1906—ல் அவரால் ஆரம்பிக்கப்பட்ட 'சுதேசிக் கப்பல் கம்பெனி' இந்த சிறந்த நோக்கத்துடனேயே தொடங்கப்பட்டதாகும். என்றாலும் அவருடைய திட்டம் வெற்றிபெற முடியாதபடி அரசாங்கம் அவரை நாட்டை விட்டே துரத்திவிட்டது. தீவாந்திரத் தண்டனை கொடுக்கப்பட்டது. கடலில் கப்பலோட்ட முயன்ற ஒரு தமிழன் கடல் நடுவே கப்பல் போல மிதந்து கொண்டு இருக்கும் ஒரு தீவில் சிறை வைக்கப்பட்டார்.

ஆறாண்டுகள் பொறுத்து வீரர் சிதம்பரனார் சிறையினின்று வெளியே வந்தபோது வறுமையென்னும் கொடிய பகைவனே அவரை வரவேற்றான். வறுமை அவரை ஆட்டிப் படைத்தது. அன்றாட வாழ்க்கையை நடத்துவதுகூட முடியாது போயிற்று. அவரை ஆதரித்த 'அன்பர்கள்' எல்லோரும் கைவிட்டு விட்டனர். நாட்டின் விடுதலைக்காக ஒரு பெரிய அரசாங்கத்தோடு போராடிய சிதம்பரனார் கடைசியாக வறுமையோடு போராடி அதில் வெற்றி பெற முடியாமல் 1936—ல் உயிர்நீத்தார்.

எந்தக் காரியத்தைச் செய்ய வேண்டுமென்று அவர் அன்று பாடுபட்டாரோ, அந்தக் காரியம் இன்று வெற்றி பெற்றுவிட்டது. 43 ஆண்டுகளுக்கு முன் ஓட்ட வேண்டுமென்று அவர் நினைத்த கப்பல் இன்று ஓடுகிறது. இது அவருடைய கனவை நினைவாக்கும் ஒரு நற்செய்தியாகும். தமிழ் மக்களுக்கு அவர் உண்டாக்கித் தந்த பெருமையாகும். பண்டைக் காலத்தில் கப்பலோட்டிப் புகழ்பெற்ற தமிழர்களின் சிறந்த பண்பை, 'வ. உ. சிதம்பரம்' என்ற கப்பல் நிலைநாட்டிவிட்டது.

—பேரறிஞர் அண்ணா, 13-2-49.

# சிறிது நேரம் சிந்திப்போம்

**தமிழ்.**

இந்த மூன்று எழுத்துக்களைக் கொண்ட சொல்லைச் சொல்லும் போது என் உள்ளமெல்லாம் பூரிப்பு நிறைகின்றது. இந்த மூன்றெழுத்துச் சொல்லிலே காணும் நிறைவை நான் வேறு எதிலும் காணவில்லை.

தமிழ் வழங்கும் நிலத்திலே ஒரு தமிழனைப் பிறந்த நான் பெற்றுள்ள பேறு எத்தகைய பேறு என்று நினைக்கும்போது என்னுள் ஏற்படும் இன்பத்தை நான் அளவிட்டு உரைக்க முடியாது.

தமிழனைப் பிறந்தேன்—தமிழால் வளர்ந்தேன்—தமிழினல் பெருமைக் குரியவனுக சிறந்தேன்—தமிழ் காரணமாக நான் உயர்ந்தேன்!—தமிழே எனக்கு வாழ்வும் வளமும், சீரும் சிறப்பும் மாண்பும் மதிப்பும் அளிக்கிறது. என்பதை நான் மறக்க முடியுமா? மறைக்க முடியுமா? அல்லது மறுக்கத்தான் முடியுமா?

தமிழ் என்று நினைக்கும்போது —என்னைப் போலவே, தமிழைத் தாய்மொழியாகப் பெற்றுப் பயின்று சிறந்து வாழ்ந்த என் தமிழ் மூதாதையரின் ஏற்றத்தையும் ஊட்டத்தையும் எண்ணும் போது துள்ளுகின்ற உள்ளம் என்னை இன்பப் பண்பாடச் செய்கிறது.

என்னைப் போலவேதான் எல்லாத் தமிழர்களும் பெருமையடைவார்கள்—என்னைப் போலவே தான் எல்லாத் தமிழர்களும் இன்ப முறுவார்கள்—என்னைப் போலவே தான் எல்லாத் தமிழர்களும் இசை பாடுவார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன். என் இன்பம் தனி இன்பமன்று; கூட்டின்பம் என்று நான் நினைக்கிறேன். என் பெருமை தனிப்பெருமையன்று—தமிழர் சமுதாயத்தின் பொதுப் பெருமை என்று நான் கருதுகின்றேன். என் சிறப்பு தனிச் சிறப்பன்று—எல்லாத் தமிழர்களுக்கும் உண்டான பொதுச் சிறப்பு என்று நான் நினைக்கிறேன்.

நான் நினைத்தது சரிதானு? சற்று நிமிர்ந்து பார்க்கிறேன்.

எதிரிலே ஒருவன் வருகிருன். அவன் என்னைப்பார்த்து, ''மொழி வெறியன்'' என்று கூறுகிருன்.

உள்ளம் துணுக்கென்கிறது. உடல் பதறுகிறது.

சுட்டுப் பொசுக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு அவனை உற்றுப் பார்க்கிறேன். அவன் யார்?

தெலுங்கனு? மலையாளியா?

இல்லை.

ஆந்திர தேசத்தறிஞனும், மலையாள நாட்டு மேதையும் தத்தம் தாய்மொழிக்குத் தலைமொழிஎன்று கூறித் தமிழைப் போற்றிப் பாடுவோராயிற்றே—அவர்களா என்னைப் பழித்துரைக்க முற்படுவார்கள்?

வங்காளத்தானு? மராட்டியனு? வேறு வடமாநிலத்தவனு?

தத்தம் தாய்மொழியைப் போற்றுவதே தலையாய நாட்டுப் பற்று என்று கூறுபவராயிற்றே அவரெல்லாம்—அவர்களா என்னை இழித்துரைக்க எதிர் வருவார்கள்?

ஆங்கிலேயனா? பிரெஞ்சுக்காரனா? செருமானியனா? உருசியனா?

தமிழில் இன்ன இன்ன சிறப்புக்கள் இருக்கின்றன என்று உலகுக்கெல்லாம் எடுத்துரைக்கும் நடுநெறியாளராயிற்றே அவரெல்லாம்—அவர்களா என்னைக் குறைத்துப் பேச முன்வருவார்கள்?

அப்படியானால் என் எதிரில் நின்று என்னை ஒரு மொழிவெறியன் என்று சுட்டியுரைத்த அந்த மனிதன் யார்?

அவனும் ஒரு தமிழனே!

இந்த உண்மையை உணர்ந்த போதுதான் என் உள்ளம் துணுக்குற்றது; என் துயரம் பெருக்குற்றது.

தமிழுக்காக—தமிழ் வளர்ச்சிக்காக எப்போது எதைச்செய்ய முற்பட்டாலும் அதற்கு முட்டுக்கட்டைப் போடவும் எதிர்வாதம் பேசவும் ஒரு கூட்டம் தமிழ்நாட்டில் இருந்துகொண்டே இருக்கிறது.

தமிழரோடு தமிழராக வாழ்ந்து கொண்டு—தமிழ் மொழியையேயே வீட்டிலும் நாட்டிலும் பேசிக்கொண்டு—தமிழையே பயன்படுத்தி—தமிழ் நாட்டில்—தமிழர் இடையில் தாமும் தமிழர்தான் என்று சொல்லிக்கொண்டு—தமிழுக்குப் பகையாகி நிற்கும் அந்தக் கூட்டம் வேறு எங்கிருந்தும் வந்ததல்ல; இந்த நாட்டிலேயே இருப்பதுதான்!

நெற்பயிரின் இடையிலே புற்களையாக—அமுத நீர்பாயும் ஆற்றிலே கலந்த கரிப்பு நீராக—அந்த இனம் நம்மிடையே ஊடுருவி வாழ்ந்துகொண்டு—நம்முடைய முன்னேற்றம் முயற்சி ஒவ்வொன்றுக்கும் தடையாக இருந்து கொண்டிருக்கிறது. இன்று நேற்றல்ல எத்தனையோ ஆண்டுகாலமாக—தமிழுக்கும் தமிழர் முயற்சிக்கும், —தமிழர் முன்னேற்றத்துக்கும் தடையாக இருந்து வருகிறது அந்தக் கூட்டம். தமிழ்நாட்டைத் தவிர வேறு எந்த நாட்டிலும், இப்படிப்பட்ட ஒரு கூட்டம்—ஏன் ஒரு தனி மனிதன் கூடச் சில நாட்களும் வாழ முடியாது. தாய்மொழிக்கோ, தாய் நாட்டுக்கோ பகையாக வாழ்பவர்களை எந்த நாட்டிலும் விட்டுவைக்கமாட்டார்கள். தமிழ் நாட்டில் மட்டும்தான் நூறு நூறாண்டு காலமாக இப்படி ஒரு கும்பல் - களைக்கூட்டம் வளர்ந்து கொண்டிருக்கிறது. தமிழ்நாடு இதை எப்படிப் பொறுத்துக் கொண்டிருக்கிறது என்பது தான் விந்தையாக இருக்கிறது. நாட்டுப் பற்றும், மொழியுணர்வும் தமிழர்களிடையே தீவிரமாக இல்லை என்பதற்கு இந்தக் கும்பல் வளர்ந்து கொண்டிருப்பதே சான்றாக அமைகிறதா? இந்தக் கூட்டத்தாரின் சொற்களை ஏற்றுத் துணை போகும் தமிழ் மக்கள் சிலருக்கு, நாட்டுப்பற்றும் மொழியுணர்வும் சிறிது கூட இல்லை என்று பொருளா? அப்படிப்பட்ட தமிழ் மக்களுக்குச் சிந்திக்கும் திறன் குறைவு என்பது பொருளா? இந்தக் கூட்டத்தின் சொற்களுக்குச் செவி சாய்க்கும் தமிழர்களுக்கு நாடி நரம்புகளில் உணர்ச்சியோட்டம் இல்லை என்று பொருளா?

என்றென்றும் தமிழரிடையே தமிழுக்கு எதிராகப் பேசிக்-

## அமுதும் நஞ்சும்

**அழகு களிப்பதற்கு எங்ஙனம் உதவுகிறதோ அதைப் போலவே பிறரை அழிக்கவும் செய்கிறது. எனவேதான் புலவர்கள், மாதர்களின் வழியிலே அமிர்தமும் உண்டு—நஞ்சும் உண்டு என்றனர்!**

**—பேரறிஞர் அண்ணா**

---

கொண்டும் செயலாற்றிக் கொண்டும் திட்டமிட்டுக் கொண்டும்—ஓரளவு அதிலே வெற்றிபெற்றுக் கொண்டும் வாழ்ந்து வரும் இந்த சமுதாய எதிர்ப்பு சக்திகளைத் தமிழகம் விட்டு வைத்துக் கொண்டிருப்பதும்—இந்த எதிர்ப்பு சக்திக்குப் பக்கப் பாட்டுப் பாடிக் கொண்டு தமிழ் மக்கள்—தமிழ்ப் பற்றுடைய தமிழ் மக்கள் சிலர் இருந்து வருவதும் எதைக்காட்டுகிறது? தமிழரில் சிலருக்கு இருக்க வேண்டிய தன்மான உணர்வும்—தன்னம்பிக்கையும் இல்லை என்பதைத் தானே காட்டுகிறது. தமிழ்நாட்டைத் தவிர வேறு எந்த நாட்டில் தாய்மொழியை எதிர்த்துக் கொண்டு வாழ முடியும்?

ஒருவேளை, எதிர்ப்பிடையே வளர முடியும் என்ற தன்னாற்றலைத் தமிழ்மொழி பெற்றிருக்கும் காரணத்தால் இந்தக் கும்பலையும் வளரவிட்டுக் கொண்டிருக்கிறதா தமிழ்ப் பெருங்குடி?

எப்படியிருந்தாலும் தமிழ்ப் பெருங்குடி இனி இந்தக் கூட்டத்தை—தமிழுக்குக் கேடு பேசும் கூட்டத்தைவிட்டு வைத்திருக்கக் கூடாது! ஏனெனில் களையை வளர விடுவது என்றென்றும் பயிரின் வளர்ச்சிக்கு ஊறாகவே இருக்குமாதலான்!

பயிரை வளர்க்கும் உழவன் களை காண்டோறும் அதனைக் களைதல் போல, தமிழ் மாநிலத்திலும், தமிழ் நெடிதோங்கி வளர வேண்டுமெனின் இக்களைகளைக் களைதல் இன்றியமையாத பணியாகும்!

இக்களை களையும் பணிக்குத் தமிழர் எல்லோரும்—ஒட்டுமொத்தமாக முனைதல் வேண்டும். இதற்குத் தமிழறிவும்—தமிழுணர்வும் தமிழ்ப்பற்றும் இருந்தால் மட்டும் போதாது. சிந்திக்கும் திறனும்—சிந்தித்த வழி செயலாற்றும் ஆற்றலும்—செயலில் வெற்றி காணும் உறுதியும்—எல்லாவற்றுக்கும் மேலாக நன்மை தீமைகளை ஆராய்ந்து முடிவெடுக்கும் பகுத்தறிவும் தமிழர் எல்லோருக்கும் இருக்க வேண்டும்.

மொழிப்பற்று மட்டும் உடைய ஒருவன் வீணர்களின் வெற்றுரைகளால் அப்பற்றை விட்டுவிட முற்பட வாய்ப்புண்டு. மொழியுணர்வு மட்டுமே உடைய ஒருவன், சூழ்ச்சிக்காரர்களின் வாக்குத் திறமைக்குப் பலியாகித் தன் உணர்ச்சியை விட்டுவிட நேரிடும். பகுத்தறிவோடு சிந்திக்கும் ஆற்றலுடைய ஒருவன் எடுக்கும் செயலை என்றும் நின்று—முழுதாக வெற்றி பெறும் தன்மை உடையதாகும்.

தமிழனுக்குத் தமிழ்ப் பற்றோடு—தமிழ் உணர்வோடு—தமிழ் நாட்டுப் பற்றோடு—தமிழ் இன உணர்வோடு பகுத்தறிவும் இருக்கவேண்டும் என்று நான் கூறுவதற்குச் சான்றாகச் சில நிகழ்ச்சிகளை எடுத்துக்காட்ட வேண்டியது இன்றியமையாததாகும்.

தமிழ்நாடெங்கும்—இசைப் நிகழ்ச்சிகளிலெல்லாம் தமிழ்ச

பாட்டுப் பாடவேயில்லை இசை வாணர்கள்.

இசை பயின்ற தமிழர்களும்—தமிழ்நாட்டு இசையரங்குகளிலே தெலுங்கிலேயே பாடினார்கள். இதிலே ஒரு வேடிக்கை என்னவென்றால் தமிழ்நாட்டிசை யரங்குகளிலே தெலுங்கிலே பாடிய எந்த இசைவாணனும் தெலுங்கு நாட்டிலே பிறந்து தமிழ் நாட்டிலே குடியேறிய தெலுங்கரல்லர். தமிழ் நாட்டிலே பிறந்து தமிழ் பேசி—வீட்டிலும் நாட்டிலும் சந்தையிலும்தெருவிலும் தமிழ்பேசிக் கொண்டிருந்தவர்கள்தான். இசையரங்குகளிலே தெலுங்கிலேபாடிக் கொண்டிருந்தார்கள். இது நெடு நாளாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. நெடுநாளாகத் தமிழர்கள் இதைப் பற்றிச் சிந்திக்கவேயில்லை. தமிழ்ப் பெருங்குடி மக்கள் பலர் தமிழ்நாட்டுத் திருவிழாக்களிலும்—தமிழர் வீட்டுத் திருமண விழாக்களிலும் இப்படிப்பட்ட தெலுங்குப் பாடல்களைப் பாடும் பாவாணர்களை வரவழைத்து ஆயிரக்கணக்கில் பணத்தை அள்ளிக் கொடுத்துக் கேட்டதெல்லாம் தமக்குப் புரியாத பாடல்களே! இந்த இழிநிலை எத்தனை நாளைக்கு நிகழ முடியும். தமிழ் மக்களிடையே பகுத்தறிவோடு சிந்திக்கும் திறன் ஏற்பட்டது. புரியாத பாட்டுக் கேட்டு விவரம் தெரியாமல் தலையாட்டும் ஆட்டு மந்தையா நாம் எல்லாம் என்று சிலர் எண்ண முற்பட்டார்கள். பாடுபட்டு உழைத்துப் பணம் சேர்த்து கேடுகெட்ட தமிழ்த் துரோகத்துக்கா விலை கொடுப்போம் என்று எண்ணினார்கள். அந்த எண்ணத்தின் காரணமாகத் தமிழிசையியக்கம் தோன்றியது. எங்கும் எழுச்சியுடன் விழிப்புணர்ச்சி பெற்ற தமிழர்கள் தமிழிசையரங்குகளைத் தோற்றுவித்தார்கள். தமிழ்நாட்டில் தமிழரிடையில்—தமிழர் வீட்டில்—தமிழர் பணச் செலவில் நடைபெறும் அரங்கெல்லாம் தமிழே ஒலிக்கவேண்டும் என்று அவர்கள் விரும்பினார்கள். தமிழன் வீட்டில் பாடும் பாட்டு தமிழனுக்குப் புரியும் பாட்டாக இருக்கவேண்டும் என்று அவர்கள் தெருத் தெருவாக, ஊர் ஊராக கூட்டம் போட்டுப் பேசி உணர்ச்சியை வளர்த்தார்கள்.

இங்கொன்றும் அங்கொன்றுமாகத் தோன்றிய களையை எடுக்க நேரம் செல்லாது. நிலம் எங்குமே களையாக விளைந்துவிட்டால் அதன் கேடுகெட்ட நிலையை நீக்க எத்தனை முயற்சி வேண்டியிருக்கும் ?

பொறுமையும் — உறுதியும் கொண்டு போராடி தமிழகத்தில் தமிழிசை முழங்க வழிவகுத்தார்கள். அப்போது, தமிழ்ப் பகையாக—தெலுங்கிசை வளர்த்த பெரிய மனிதர்கள் என்ன சொன்னார்கள் தெரியுமா ?

“இசைக்கு மொழி கிடையாது” என்றார்கள். “இசையை மொழியோடு இணைத்துப் பேசுவது பொருளற்றது” என்றார்கள் “இசை மொழிகளைக் கடந்தது” என்றார்கள். இந்த மாயவாதத்திலே சில தமிழர்கள் மயங்கினார்கள். இசை யெல்லாம் கடந்தது—கடவுள்போல என்று அவர்களும் ஒத்திசைத்தார்கள்.

ஆனால் சீறியெழுந்த — தன்மானப்பற்றுடைய — பகுத்தறிவு நலம்பெற்ற தமிழர்கள் கேள்வி எழுப்பினார்கள்.

“இசைக்கு மொழி கிடைாது என்றால் தெலுங்கிலே ஏன் பாட வேண்டும்? வெறும் தம்பூரும் வீணையும் தாளமும் மட்டுமே போதுமே !” என்று கேட்டார்கள்.

தமிழரிடையே விழிப்புணர்ச்சி ஏற்பட்டது,

தமிழ்ப் பகைவர்கள் "தமிழிலே பாட்டுக் கிடையாது" என்ருர்கள். தேவாரமும், திவ்வியப்பிரபந்தமும், பள்ளுகளும் குறவஞ்சிகளும் இருக்கும் போதே—தமிழிலே இசைப்பாட்டுக் கிடையாது என்ருர்கள் முற்றுங் கற்று ஆராய்ந்த பெரும் புலவர்கள் போலே.

தமிழர்கள் எழுச்சி பெறும் ஒவ்வொரு நேரத்திலும் தமிழ்ப் பகைவர்கள் உடனடியாக எழுப்புகின்ற கேள்வி "தமிழிலே என்ன இருக்கிறது ?" என்பதுதான் !

தமிழ்நாட்டிலேயிருந்து கொண்டு தமிழ்ச் சோற்றையுண்டு கொண்டு, தமிழ் பேசிக் கொண்டு "தமிழிலே என்ன இருக்கிறது ?" என்று கேள்வி கேட்கும் ஒரு கூட்டத்தைத் தமிழ்ப் பெருங்குடி பார்த்துக் கொண்டிருக்கிறதே அது போதும் தமிழ்ப் பகை அஞ்சாமல் வளர்வதற்கு;அதுபோதும் அது மேலும் மேலும் தமிழெதிர்ப்புச் சூழ்ந்து வாழ்வதற்கு.

தமிழிலே இசையில்லையா ? என்ற கேள்வி தமிழரிடையே எழுந்தது. மூலை முடுக்குகளிலே, ஏட்டுச் சுவடிகளிலே இருந்த இசை நூல்களெல்லாம் வெளி வந்தன. அது மட்டுமன்று ஆர்வமுள்ள கவிஞரெல்லாம் புதிய இசை நூல்களையாக்கிப் படைத்தார்கள். இசை இலக்கணங்கள் இசை நுணுக்கங்கள் பழந்தமிழ் இசைக் கருவிகளின் ஆராய்ச்சிகள் எத்தனை எத்தனை என்று எண்ணிக் கணக்கிட முடியாத அளவு இசை நூல்கள் எழுந்தன. இத்தனையும் கண்ட பிறகும் இன்றும், தமிழிலே என்ன இருக்கிறது என்று கேட்டுக் கொண்டும்—இசை மொழி கடந்தது என்று கூறிக் கொண்டும் சிலர் இருக்கிருர்கள். அவர்கள் எதிர் பார்ப்பதெல்லாம் மேலும் மேலும் தமிழர்களை அறியாமைக் குழியில் வீழ்த்திக் கொண்டிருக்க வேண்டும் என்பதேயில்லாமல் வேறு என்னவாயிருக்க முடியும்.

தமிழ்ப் பகைவர்களின் இடையிடாத நாசவேலைக்கு எடுத்துக் காட்டாக தமிழிசை வளர்ந்த அடிப்படையை ஒருவாருக எடுத்துக் காட்டினேன்.

இனி மற்ருேர் எடுத்துக் காட்டும் தருவேன்.

(தொடரும்)

★ ★ ★

## நன்றும் தீதாகிவிடும்

பெருஞ்சாலையில் இரண்டு பேர் இரைக்க இரைக்க ஓடிவந்தார்கள். நிறுத்துமிடத்தை அணுகுவதற்குள் பேருந்து புறப்பட்டு விட்டது. இரக்கப்பட்ட ஓட்டுநர் இடை வழியில் நிறுத்தி அவர்களை ஏற்றிக் கொண்டார்.

"ஓட்டுநர் நல்லவராயிருக்கிருர். உதவி செய்யும் மனப்பான்மையிருக்கிறது" என்று பாராட்டினுர் பயணிகளில் ஒருவர்.

"அட போப்பா ! யாரோ சொந்தக்காரர்கள் போலிருக்கிறது. இல்லாவிட்டால் நிறுத்தி ஏற்றிக் கொண்டிருக்கமாட்டார்" என்ருர் வேருெருவர்.

# மன்னரைக் கண்ட மனிதன்

ஒரு மனிதனுக்குத் தன் நாட்டின் மன்னரைக் காணவேண்டும் என்று ஆசை உண்டாயிற்று. தன் நண்பன் ஒருவனிடத்தில் தன் ஆசையை எடுத்துச் சொன்னான். அவன் அரண்மனையில் வேலை பார்க்கும் ஒரு நண்பனிடம் சொல்லி அந்த மனிதனை அரண்மனைக்கு அழைத்துச் செல்ல ஏற்பாடு செய்தான்.

ஒரு குறிப்பிட்ட தினத்தில் அந்த மனிதன், அரண்மனை வேலைக்காரனுடன் மன்னரைக் காணப் புறப்பட்டான்.

இருவரும் அரண்மனையை அடைந்தார்கள். முதல் வாசலைக் கடந்தவுடன், அங்கேயிருந்த கூடத்தின் மத்தியில் ஒருவன் பகட்டான உடையணிந்து அமர்ந்திருந்தான். அவனைச் சுற்றிலும் ஏவலரும் காவலருமாகிய பரிவாரத்தினர் சூழ்ந்து நின்று கொண்டிருந்தனர். அவன் படாடோபமாக அதிகாரங்கள் செய்து கொண்டிருந்ததைக் கண்ட மனிதன் நண்பனை நோக்கி, "இவர்தான் மன்னரா?" என்று கேட்டான்.

"இவரல்லர்" என்று சொல்லி விட்டு அரண்மனை வேலைக்காரன் உள்ளே அழைத்துச் சென்றான்.

இரண்டாம் வாசலைக் கடந்தவுடன் அந்த மனிதன் அங்கே மேலும் படாடோபமாகக் காட்சியளித்த

ஓர் அதிகாரியைச் சுட்டிக் காட்டி, "இவர்தான் மன்னரா?" என்று கேட்டான்.

"இல்லை, வா" என்று சொல்லி மேலும் உள்ளே அழைத்துச் சென்றான் அரண்மனை வேலைக்காரன்.

இப்படியே ஆறுவாசலும் தாண்டி அங்கங்கே தோன்றிய மேல் அதிகாரிகளைச் சுட்டிக் காட்டி, "இவர்தான் மன்னரா?" என்று கேட்டுக் கேட்டுக் கொண்டு சென்றான் அந்த மனிதன்.

"இவரில்லை, இவரில்லை" என்று சொல்லிக் கொண்டே மேலும் உள்ளே உள்ளே அழைத்துச் சென்றான் அரண்மனை வேலைக்காரன்.

ஏழாவது வாசலைத் தாண்டியதும் அங்கே உண்மையான மன்னரே யமர்ந்திருந்தார். அவரைக்


வெளிநாடுகளிலிருந்து
தாயகம் திரும்பியுள்ள
தமிழர்களின் நல்வாழ்வுக்குத்
தொண்டாற்றும் ஒரே ஏடு

**ம று வா ழ் வு**

ஆசிரியர் : பி. வெங்கடேசன்

ஆண்டுக் கட்டணம் ரூ. 5/-

விவரங்களுக்கு:

**ம று வா ழ் வு**

33-ஏ, ஆரணி ரங்கையன் தெரு,

சென்னை - 21

தொலைபேசி எண் : 53797; 51912

# பக்தியினுல் திருந்த வேண்டும்

சமுதாயத்தில் ஒரு மனிதன் மற்றவர்களோடு நன்ருகப் பழகிஞல்தான் அவன் சிறந்தவாழ்வு பெற முடியும். அதற்கு அவனுடைய வாக்கில் உண்மையிருக்க வேண்டும்; வாக்கில் உண்மையிருந்தால் மட்டும் போதாது. நல்ல மனமும் வேண்டும். இவையிரண்டும் இருந்தால் அவனுக்கு பகையிராது. ஆகவே அவன் வளத்தோடு வாழ்வான். அவனுக்கு நோய் நொடியும் வராது. யானே முகனுகிய இறைவனே வணங்குவோருக்கு இப்பேறுகள் கிடைக்கும் என்று கூறுவதன் மூலம் கடவுள் பக்தியினுல் மனிதன் திருந்த வேண்டும் என்ற கருத்தை ஒளவையார் ஒரு வெண்பாவில் விளக்குகிருர்.

வெண்பா இதுதான்:

வாக்குண்டாம் நல்ல
மனமுண்டாம்; மாமலராள்
நோக்குண்டாம் மேனி
நுடங்காது—பூக்கொண்டு
துப்பார் திருமேனித்
தும்பிக்கை யான்பாதம்
தப்பாமற் சார்வார் தமக்கு

—ஒளவையார்

---

கண்ட மனிதன், "இவர்தாஞ மன்னர்?" என்று கேட்கவில்லே. அவருடைய மேன்மைத் தோற்றமும் வீரப்பொலிவும் அவர்தான் மன்னர் என்ற ஐயத்திற்கிடமற்ற எண்ணத்தை யுண்டாக்கிவிட்டன. அவன் மனத்தில் இவருக்கு மேல் எவருமில்லே என்ற உணர்வைப் பதித்துவிட்டன. தான் ஒரு மாபெருந் தலேவர் முன் நிற்கிருன் என்ற பேருணர்வு தோன்றி, அந்த நிலே தனக்குக் கிடைத்ததை யெண்ணி யெண்ணி வியப்புற்றுப் பெருமகிழ்வு பொங்கி அவன் பூரித்துப் போய்ப் பேச்சில்லாமல் நின்ருன்.

கடவுளின் உண்மையை உணர்ந்தவர்களுக்கு, அந்தக் கடவுளின் தன்மையில் ஐயம் தோன்றுவதில்லே. அவர்கள் உறுதியாகக் கடவுளே உணர்ந்துவிடுவதனுல் 'இது கடவுள்தாஞ?' என்று யாரையும் கேட்பதில்லே. இது கடவுள்தாஞ என்று கேட்கும் நிலேயில் உள்ள எதுவும் உண்மையான கடவுள் ஆகா என்பதை இக் கதையிலிருந்து அறிகிறேம்.

—பகவான் இராமகிருஷ்ணர்

# நாய்த் தெய்வம்

முன்னொரு காலத்தில் தேவநாதன் என்று ஒரு வணிகன் இருந்தான். அவன் ஒரு நாயை வளர்த்து வந்தான். அந்த நாய்க்கு அவன் வேளை தவறாமல் உணவு வைப்பான்; நாள்தோறும் குளிப்பாட்டுவான், ஓய்வு நேரத்தில் அதனுடன் விளையாடுவான்; இவ்வாறு அன்புடன் அதை வளர்த்து வந்தான். அந்த நாயும் அவனிடம் மிகுந்த அன்பு வைத்திருந்தது. அவன் செல்லும் இடமெல்லாம் கூடவே சென்றது. அவனுக்குப் பல சிறு வேலைகள் செய்து உதவிபுரிந்து வந்தது.

ஒரு நாள் தேவநாதன் வாணிக வேலையாக வெளியூர் ஒன்றுக்குப் புறப்பட்டுச் சென்றான். வழக்கம் போல அவன் நாயும் கூடவே சென்றது.

போகும் வழியில் களைப்பாறுவதற்காக நன்றாகப் புல்வளர்ந்திருந்த ஓர் இடத்தில் தேவநாதன் படுத்தான். படுத்தவன் அப்படியே தூங்கிப் போய்விட்டான். அந்த நாயும் அவன் பக்கத்திலேயே படுத்துக் கிடந்தது.

திடீரென்று புகைநாற்றம் மூக்கைத் துளைத்தது. நாய் கண்விழித்துப் பார்த்தது. மிக அருகாமையில் காட்டு மரங்கள் தீப்பிடித்து எரிந்துகொண்டிருந்தன. நாய் தேவநாதன் ஆடையைப் பற்றி இழுத்தது. நன்றாக உறங்கிக் கொண்டிருந்த தேவநாதன கண் விழிக்கவில்லை.

என்ன செய்வதென்று தெரியாமல் நாய் திகைத்தது. சிறிது தூரத்தில் ஒரு குளம் இருப்பது தெரிந்

தீது. அதைக் கண்டவுடன் நாய் பாய்ந்தோடிச் சென்றது. அந்தக் குளத்திற்குள் இறங்கியது. உடல் முழுவதும் நனையும்படி தண்ணீரில் மூழ்கியது. பிறகு எழுந்து தேவநாதன் படுத்திருக்குமிடத்திற்கு ஓடிவந்தது. அவன் அருகில் இருந்த புல் தரையில் புரண்டது. இவ்வாறு குளத்தில் மூழ்கி மூழ்கி எழுந்து வந்து அவன் படுத்திருந்த இடத்தைச் சுற்றிலும் இருந்த புல்தரை முழுவதையும் ஈரமாக்கிக் கொண்டேயிருந்தது.

நேரம் ஆக ஆக அது குளத்திற்குப் போகும் வழியில் இருந்த மரங்களிலும் தீப்பற்றிக் கொண்டது. அப்போதும் நாய் நெருப்பினூடே புகுந்து பாய்ந்தோடியது. தண்ணீரைத் தன் உடலில் நனைத்துக் கொண்டு ஓடிவந்து, புல்தரையை ஈரமாக்கியது. இடைவிடாமல் அது தன் வேலையைச் செய்து கொண்டே இருந்தது.

காட்டில் எரியும் நெருப்பு, தன் தலைவனை நெருங்க விடாமல் செய்வதில் அது கண்ணும் கருத்துமாக இருந்தது. தன் உடலில் உயிருள்ள வரையில் அது தன் கடமையை விடாமல் செய்தது.

நெடுநேரம் கழித்துத் தேவநாதன் தூக்கம் கலைந்து கண்விழித்துப் பார்த்தான்.



தன்னைச் சுற்றிலும் இருந்த காடு முழுவதும் எரிந்து சாம்பலாய்ப் போயிருந்த காட்சியைக் கண்டான். அதே சமயம் தான் தீயில் வெந்து சாகாமல் இருப்பதைக் கண்டு வியந்தான். தன்னைச் சுற்றிலும் இருந்த இடம் முழுவதும் ஈரம் மாருமல் இருப்பதையும், புற்கள் பசுமையாகத் தளதளவென்று தலை நிமிர்ந்து நிற்பதையும் கண்டு பெரு வியப்படைந்தான். பார்த்துக் கொண்டிருக்கும்போதே அவனுக்குத் தன் நாயின் நினைப்புவந்தது.

சுற்று முற்றும் அவன் தன் நாயைத் தேடிக் கொண்டு சென்ருன். நெருப்புச் சாம்பலின் ஊடே அதன் காலடித் தடம் கண்டு பின்பற்றிச் சென்ருன். குளத்தின் கரையில் தன் அருமை நாய் சுருண்டு கிடப்பதைக் கண்டான். நெருங்கிச் சென்று பார்த்தபோது, அதன் உடல் முழுவதும் நனைந்திருப்பதையும், ஆங்காங்கே தீச்சுட்டுப் புண்கள் நிறைந் திருப்பதையும் கண்டான்.

அவனுக்கு எல்லாம் விளங்கிவிட்டது. தன்னைக் காப்பாற்றுவதற்காக அந்த நாய் தன்னுயிரைக் கொடுத்திருக்கிற தென்ற உண்மையை அவன் புரிந்து கொண்டபோது, அவன் உள்ளத்தில் எழுந்த வேதனை இவ்வளவென்று சொல்ல முடியாது. உயிரைக் கொடுத்துத் தன்னைக் காத்த அந்த நாயின் நன்றியைத் தேவநாதனுல் மறக்க முடிய வில்லை.

அந்த நாய் செத்துச் சுருண்டுகிடந்த அதே இடத்தில், அந்தக் குளத்தின் கரையில் அதற்கொரு கோயில் கட்டினுன். அந்தக் கோயிலில் அந்த நாயின் உருவச் சிலையைச் செய்து வைத்தான். அதற்கு நாள் தோறும் பால் சோறு படைத்துப் பூசை நடத்த ஏற்பாடு செய்தான்.

தன் நன்றி மறவாமையைக் காட்ட அவனுல் அவ்வளவுதான் செய்ய முடிந்தது!

—பொன்னம்மா

# 50 - காசுக்கு 120 - இட்லி

**மனிதனுக்கு இரண்டு தேவைகள்**
**ஆயிரம் ஆனாலும் ஜெயராதா ஆகாது**

**சீர்வரிசைக்குச் சிறந்தது**
**ஷாக் அடிக்காது**

மனிதனுக்கு இரண்டு கால், இரண்டு கை, இரண்டு கண், இரண்டு செவி, இரண்டு குடல் எப்படித் தேவைப்படுகிறதோ அதே போல உணவு—உணர்வு இவை இரண்டும் மிகவும் தேவை. உணர்வை மாணவர்களுக்கு ஆசிரியர்கள் உணர்த்துகிறார்கள். இன்னொன்று உணவு தேவை. அந்த உணவை இந்த ஜெயராதா மிஷின் நமக்குத் தருகிறது. "ஆயிரம் ஆனாலும் மாயூரம் ஆகாது"! என்று ஒரு பழமொழி உண்டு. நமது முன்னோர்கள் காலத்தை உணர்ந்து சொல்லியிருக்கிறார்கள். பல் வேறு மாவு அரைக்கும் கல்லுரல்கள் தமிழகம் முழுவதும் பயன்படுத்தப்பட்டு இருந்தாலும் மாயூரம் கணபதி நகரில் தயாராகி நாடெங்கிலும் நல்ல புகழோடு விளங்கிவரும் ஜெயராதா மாவு அரைக்கும் இயந்திரம் ஒன்றுதான்.

மாயூரத்திலிருந்துமலேசியா — சிங்கப்பூர், ஜப்பான், லண்டன், வட அமெரிக்கா, தென் ஆப்பிரிக்கா முதலிய நாடுகளுக்குச் சென்று இருக்கிறது.



தினசரி படப்பிடிப்புக்குப் போகும் முன் காலையில் முன்பு ஒரே ஒரு இட்லிதான் சாப்பிடுவேன். ஆனால் இப்பொழுது இரண்டு—அல்லது மூன்று இட்லி சாப்பிடுகிறேன். இதற்குக் காரணம் இட்லி மல்லிகைப் பூப்போல மிருதுவாக இருப்பதோடு நல்ல சுவையோடும் இருப்பதால்தான் தினசரி 40 பேர்களுடைய காலை டிபன் கவலையை இந்த மிஷின் போக்குகிறது. இன்றைய நாகரிக வளர்ச்சிக்குத் தக்கவாறு இதைத் தயாரித்திருப்பது மக்களுக்கு எல்லா விதத்திலும் பல நன்மைகளை ஏற்படுத்துகிறது" என்று கூறுபவர் வேறு யாரும் இல்லை. நடிகர் திலகம் சிவாஜி கணேசன் தான்.

ஸ்டுடியோவுக்குப் படப்பிடிப்புக்குச் சென்றால் இடைவெளியின் பொழுது டிபனை ஹோட்டலிருந்து வரவழைத்துச் சாப்பிடுவேன். செலவு அதிகம் ஆகும். ஆனால் சுவையாகவே இருக்காது. வீட்டு உபயோகத்திற்காக ஜெயராதா மிஷின் ஒன்றை வாங்கிய பிறகு தினமும் இட்லி, தோசை, வடை வீட்டிலிருந்தே

வந்து விடுகிறது. செலவு மிக மிகக் குறைவு. அதே நேரத்தில் மன நிறைவோடு சாப்பிடுகிறேன். இந்த ஜெயராதா மாவு அரைக்கும் இயந்திரத்தின் உபயோகத்தைச் சொல்லித் தெரிந்து கொள்வதைவிட வாங்கி உபயோகித்து அனுபவித்தால் தான் நன்கு தெரியும். என்று மிகைப் படுத்தாது கூறுபவர் வேறு யாரும் இல்லை. முக்தா பிலிம்ஸ் டைரக்டர் வி. சீனிவாசன்தான்.

தஞ்சை மாவட்டம் மாயூரம் கணபதி நகரில் இருக்கும் ஜெயராதா தொழிற்சாலையில் வையந்தி ஹேமமாலினி, ஜெயலலிதா, விஜயாவை எப்பொழுதும் சந்திக்கலாம் என்று கூறியவுடன் தலை மயிரை ஒரேயடியாகப் பிய்த்துக் கொள்ள வேண்டாம். உண்மையில் சந்திக்கலாம். இந்தப் பெயர்களைச் சொன்னதும் ஏதோ என்னவோ என்று எண்ண வேண்டாம். ஜெயராதா தொழிற்சாலையின் உரிமையாளர்களான ஆர். முத்துசாமியும், வி. ஆர். வைத்தியநாதன் சகோதரர்களும் தாங்கள் தயாரிக்கும் மாவு அரைக்கும் கல்லுரல் இயந்திரத்திற்குத்தான் நூதனமான பெயர்களைச் சூட்டியிருப்பதோடு இந்தப் புனிதமான பெயர்களைக்கொண்ட மாவு அரைக்கும் இயந்திரத்திற்கு மக்களிடையே அமோக வரவேற்பையும் நன்கு பெற்றிருக்கிருர்கள்.

ஹோட்டல்கள், வீடுகளில் இந்த மிஷின் ஓடிக்கொண்டிருப்பதோடு படித்துவிட்டு வேலையில்லாதவர்களும், வேலைக் கிடைக்காதவர்களும் ரூ. 4000 மூலதனம் இருந்தால் மாதம் ஒன்று இருந்த இடத்திலிருந்தே ரூ. 300 சம்பாதிக்கலாம்.

அருமைப் பெண்களுக்கு திருமணத்தின் பொழுது சீர்வரிசையோடு இந்த மிஷினையும் சிலர் வாங்கிக் கொடுக்கிருர்கள்.

எவர்சில்வர் வட்டாவை உபயோகிப்பதால் உளுந்து பக்கத்தில் ஒட்டிக்கொள்ளாது.

'ஷாக்' அடிக்காத வகையில் தயாரித்து இருக்கிருர்கள். மின்சாரச் செலவும் அதிகம் ஆகாது. தினமும் ஓடினுல்கூட மாதம் இரண்டு ரூபாய்தான் ஆகும். வீட்டில் இந்தக் கல்லுரலை எங்கு வேண்டுமானுலும் வைத்துக் கொள்ளலாம். ஜெயராதா மாவு மிஷின் ஒன்று வீட்டில் இருந்து விட்டால் போதும் கவலையும் இல்லை. தலையாய டிபன் பிரச்னை நிரந்தரமாகத் தலை தூக்கவே தூக்காது.

ஒரே ஒரு நிமிஷத்தில் தேங்காயைத் துருவிக் கொள்ளலாம். துருவிக்காக 25 ரூபாய் அதிகம்.

வீட்டில் கையினுல் ஒரு படி அரைத்தால் 90 இட்லிதான் கிடைக்கும். ஒரு படி இந்த மிஷினில் அரைத்தால் (கூலி 50 காசு) 120 இட்லி கிடைக்கும். விழுது அதிகம் காணுவதால் இட்லி அதிகம் காணும். இந்த மிஷினில் அரைத்த தோசை கிளாஸ்கோ மல்லைப்போல் நைசாக இருக்கும். இந்த மிஷினில் அரைக்கும் இட்லி—தோசையைச் சாப்பிட்டால் அதிகமாகத் தண்ணீர் தாகம் எடுப்பதில்லை.

இந்த மிஷின் மாவு புளிக்காமல்—பொங்காமல்—கெடாமல் இருக்கிறது. கையினுல் அரைப்பதற்கு இட்லிக்கு இரண்டு லிட்டர் உளுந்துபோட்டால், இந்த மிஷினில் அரைக்க ஒன்றரை லிட்டர் போட்டால் போதும். அரை லிட்டர் உளுந்து லாபம்.

எல்லாவற்றிற்கும் மேலாக உடம்புக்கும் — ஆரோக்கியத்திற்கும் மிகவும் நல்லது.

பேட்டி : **அன்பு**

# கீட்ஸ்

1818-ம் ஆண்டு. இந்த ஆண்டில் எத்தனையோ இன்ப நிகழ்ச்சிகளும் உலக வரலாற்றில் நடந்திருக்கலாம். ஆனால் ஓர் ஆத்மாவுக்கு ஆங்கிலி நாட்டில் இருந்த ஓர் ஆத்மாவுக்கு உண்டான ஒரு துன்ப நிகழ்ச்சியைப் போல் வேறு எங்கும் நடந்திருக்காது. அந்தத் துன்ப நிகழ்ச்சி மறக்க முடியாத ஒரு நிகழ்ச்சி! நினைத்துப் பார்க்க முடியாத நிகழ்ச்சி! நினைவில் நீங்காத கறையாக, நெஞ்சில் ஏதோ ஓர் இடத்தில் ஊசியால் குத்துவது போல் ஒரு ஊமை நோவு. அதிலிருந்து மெல்லமெல்லச் சொட்டும் குருதி. காதல் கதிரவன் தன்னுடைய ஒளிக்கதிரை அதன்மேல் வீச, வீசிய கதிர் அந்தக் குருதியின் மேற்பட்டு அங்கிருந்து அற்புதமான கவிதைகள் அமுதமாகப் பிறக்கின்றன. அந்தக் கவிதைகளை என்னவென்று கூறுவது. படித்தாலே பரவசம் ஊட்டும் பாக்கள். மனிதனைப் படைக்கப் பட்டதிலிருந்து பக்குவம் அடையாத பருவம் தொட்டு, பட்டுப் போகும் பருவம் வரை 'சட்டைப் பையில்' வைத்துக் கொண்டு படிக்கும் காதல் கவிதைகள் அல்லவா! உலகப் புகழ்பெற்ற கவிஞன் 'செல்லி' (P. B. Shelly) தன்னுடைய கோட்டுப் பையில் இறக்கும்வரை வைத்துக்கொண்டு உயிரை விட்டார். உலகக் கவிஞரையே அந்த அளவில் கவரும் வண்ணம் இருந்திருந்தால் எத்தகைய உயர்ந்த கருத்துக்களையும், உணர்ச்சிகளையும் நயம்படப் புனைந்திருத்தல் வேண்டும். எத்தனை இளம் இதயங்கள் இதனை வைத்துக் கொண்டு தூது விட்டனவோ! ஆண்டுகள் பல ஆனாலும் அற்புதம் என்று கூறும் அந்த அமர கவிதைகளைப் படைத்த இளைஞன் வாழ்வில்தான் அந்த ஆண்டின் அந்த நிகழ்ச்சி நிகழ்ந்தது. 'வெண்ட்வொர்த் பிலேஸ்' (Wentworth Place) என்ற இடத்தில் பிரவுண் வீட்டில் தங்கி இருந்த காலத்தில நிகழ்ந்தது. 'ஸ்காட்' பிராயணம் போகும் போது இவருக்கும் சகோதரருக்கும் வீட்டு வாடகை கொடுத்த திருமதி பிரவுண் (Mrs Brawne) அவர்கள் வீட்டில் நிகழ்ந்தது. அவர்களுடைய ஒரே பெண்ணின் மேல் ஏற்பட்ட காதல் விளைவால் நிகழ்ந்தது. வீட்டைச் சொந்தமாகக் கொண்ட அந்த அம்மையாரின் பெண் - உள்ளத்தைத் தொட்டுக் குலுக்கும் ஒரு கவர்ச்சியும், எண்ணத்தை மயக்கும் அழகும், கருத்தைக் கவர்ந்து இழுக்கும் கண்களும் கொண்ட பெண்ணாக அந்த இளைஞர்க்குத் தோற்றம் அளித்தாள். சில பெண்களுக்கு அழகு இருக்கும்; ஆனால்,

விந்தகன்

அதன் தன்மை அறியாதவர்களாக இருப்பார்கள். சில பெண்களுக்கு அழகு இருக்கும்; ஆனால் அதனை வைத்துக்கொண்டு ஆண்களை ஆட்டிப் படைக்கும் படையாகப் பயன்படுத்துவார்கள். சில பெண்களுக்கு அழகு இருக்கும்; ஏன் அந்த அழகை ஆண்டவன் அளித்தான் என்று நொந்து அழுவார்கள். இந்த மூன்று தன்மைகளும் அந்தப் பெண்ணுக்கு இருந்ததோ என்னவோ, ஆனால் ஒவ்வொரு காலத்தில் வேறு வேறு ஆண்டுகளில் உணர்ந்தோ அல்லது தன்னையறியா வண்ணம் ஒருகால் அந்த பெண்ணே மாறினாளோ என்று எண்ணத் தோன்றுகிறது அவர்கள் கடிதங்களைப் படித்தால் இதனை உணரலாம்.) இருந்தும் அந்த இளைஞன் அவளை மிகவும் விரும்பினான்.

தன் உள்ளத்தை யெல்லாம் திறந்து அன்பு காட்டி இருக்கிறான். எதை எதையோ சொல்லிக் காதல் பிச்சை கேட்டிருக்கிறான். இன்னும் என்ன என்ன செய்தானோ, நமக்குத் தெரியாது. ஆனால் ஒன்று மட்டும் தெரியும். இளைஞன் என்ன செய்தும் அந்தப் பெண்ணின் உள்ளத்தை மட்டும் பெற முடியாமல் போய்விட்டது. பாதிக்காதலாக - பகல் கனவாக மாறி அவன் இதயத்தை உடைத்துவிட்டது. அதனால் அவன் மிகவும் துயரத்தில் ஆழ்ந்து போனான். தன் துயரத்தையெல்லாம் வடித்து எடுத்துக் கவிதைகளாக எழுதினான். பகலெல்லாம், இரவெல்லாம் பாப் பாடினான். அப்போதும் அவன் மனம் நிம்மதி அடையவில்லை. அதனால் உடல் நலம் கெட்டது. இவ்வாறு உடல் நலம் கெட்டுப் போனால் உயிருக்கே ஆபத்து என்றும் 'ரோம்' போன்ற வெளி ஊர்களுக்குச் சென்று சிறிது காலம் தங்கி இருந்தால் உடல் நலம் பெறும் என்றும் மருத்துவர்கள் கூறினார்கள். அவர்கள் கருத்தை ஏற்று அந்த இளைஞன் 'ரோம்' நகருக்குப் பிரயாணப் பட்டான். புகை வண்டியில் படுத்துக் கொண்டு ரோமுக்குப்போய்க் கொண்டிருக்கும். அந்த இளைஞன் யார் என்பதனைச் சற்று கவனிப்போம்.

1795ம் ஆண்டு 'தாமஸ்கீட்ஸ்' (Thomas Keats) என்ற பெயர் கொண்ட தந்தைக்கும், 'ஃபிரான்சிஸ் ஜென்னிங்ஸ்' (Frances Jennings) என்ற பெயர் கொண்ட தாயாருக்கும் ஐந்து குழந்தைகளில் முதல் குழந்தையாக 'ஜான் கீட்ஸ்' (John Keats) என்ற பெயர் கொண்ட ஆண் பிள்ளையாக அக்டோபர் 29 அல்லது 31-ம் நாளன்று பிறந்தான். பிள்ளை நல்ல அழகான பிள்ளையாக இருந்தான். நல்ல அறிவுள்ளவனாகவும், துடிப்புள்ளவனாகவும்வளர்ந்தான். பார்ப்பதற்குச் சில நல்ல பிள்ளைகள் போல் வளர்ந்தாலும் பிற்காலத்தில் மிக சிறந்த கவிஞனாக விளங்கும் தன்மைகள் ஆரம்பத்தில் இல்லை என்றுதான் கூற வேண்டும். சண்டை போடுவதில் அதிக கவனம் செலுத்தி வந்தான் யாரிடமும் சண்டைக்குப் போகும் தன்மையும், முன் கோபம் கொண்டவனாகவும் விளங்கினான். அவனுடைய நண்பன் அவனுடன் படித்த ஒருவன் இளமை நினைவுகளைச் சொல்லும் போது, 'கீட்ஸ் மிகவும் சண்டை போடும் தன்மை உடையவனாக இருந்தாலும் எங்களுக்கு மிகவும் பிடித்தமான நண்பனாகப் பழகினான்' என்றான். பள்ளியில் பல விளையாட்டுகளில் முதல் பரிசு பெற்றுச் சிறந்து விளங்கினான். 14 வயது முதல் தான் தன்னுடைய படிப்பில் திடீரென்று மிகவும் கவனம்செலுத்தத் தொடங்கினான். கிரேக்க இதிகாசங்களின் மேல் கவனமும் ஆவலும் சென்றது. அந்த கிரேக்க நாட்டு இதிகாசங்களில் வரும்

கட்டுக்கதைகளைப் பற்றியும் அதில் வரும் வீரர்களைப் பற்றியும் மிக ஆவலுடன் படிக்கத் தொடங்கினான். ஆனால் கிரேக்க மொழியின் ஒரு சொல்லைக் கூடப் படிக்கத் தெரியாது. இருந்தாலும் பல ஆங்கில மொழி பெயர்ப்புநூல் களை வாங்கிக் கொண்டும் கடனாகப் பெற்றும் இரவெல்லாம் கண் விழித்துப் படிப்பான். படிப்பு முடிந்த பிறகு அறுவை வைத்திய மாணவனாகப் பயிற்சி பெற்று வந்தான். அப்போது பள்ளிப் பருவத்தின் ஆசிரியரான 'கௌடன் கிலர்க்' (Cowden clarke) என்பாரின் நெருங்கிய தொடர்பு கிடைத்தது. கீட்ஸ் அவர் இருக்கும் இடம் சென்று பல மணிநேரம் இலக்கிய விஷயங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருப்பான். இவர் கீட்ஸுக்கு பல புத்தகங்களைக் கொடுத்து கவிதைச் சுவையை உண்டாக்கினார். 'எக்சாமினர்' (The Examiner) என்ற வாரப் பத்திரிகையை இவர் மூலமாகத் தான் தொடர்ந்து படிக்க கீட்ஸ் ஆரம்பித்தான். அது சிறந்த அறிவைப் புகட்டும் ஏடாக விளங்கியது. அந்தக் காலத்தில் அது ஒரு பகுத்தறிவாளர் ஏடாக விளங்கியது. பல முக்கியமான இலக்கியக் கொள்கைகளை விளக்கும் தலையங்கம், கட்டுரை கவிதை போன்றவை அதில்வெளிவந்தன. புதுமை இலக்கியத்தின் கருத்துக்கள் 'கீட்ஸ்' நெஞ்சில் ஊற ஆரம்பித்தன. அதனை அறிந்த 'கிளர்க்' பல வழிகளில் மிகவும் துணையாக இருந்தார். 'எட்மண்ட் ஸ்பென்சரின் (Edmund Spenser's)சிறந்த புத்தகமான 'The Faerie Queene') 'ஃபேரிக்குயின்'யை கடனாகப் படிக்கக் கேட்டார். இதனைக் கேட்டதும் எல்லாருக்கும் வியப்பாக இருந்தாலும், ஆர்வத்தைக் கண்டு ஒன்றும் பேசவில்லை. ஆனால் இந்தப் புத்தகம்தான் கீட்சுக்கு மகிழ்ச்சி கொடுத்தது. 'கீட்ஸ்'சின் கவிதை ஆர்வத்தை அறிந்து கவிதை இலக்கணத்தை 'கிலர்க்' கற்றுக் கொடுத்து வந்தார். கவிதையில் அறிவும் ஆர்வமும் வளர வளரத் தானாகவே கவிதைகளை எழுதத் தொடங்கி விட்டார். தொடக்கத்தில் சிறு கவிதைகள் பல எழுதிருந்தாலும், முதல் முழுப்படைப்பாக 'ஸ்பென்சரைப்' பின்பற்றி, (Imitation of Spencer) என்ற நூலை 1813-ல் படைத்தார். மிகவும் ஆர்வத்துடன் அற்புதமாகப் படைக்கப்பட்ட தொடக்ககாலக் கவிதைகள் என்று அந் நூலைக் கூறலாம்.



கீட்ஸ்

'கிலர்க்' மூலமாக 'எக்சாமினர்' பத்திரிகையின் ஆசிரியர் 'அண்ட்'டின் (Leigh hunt) நட்புக் கிடைத்தது. அண்ட், விடுதலை இயக்கத்தின் தனித் தலைவராகவும், புதுமைக் கவிதை இயக்கத்தின் தூண்டுகோலாகவும், சிறந்த இலக்கியத் திறனாய்வாளராகவும், தானே ஓர் இளம் கவிஞராகவும்

விளங்கினார். அவரைக் கண்ட கீட்ஸ் மிகுந்த ஆர்வத்தையும் மகிழ்ச்சியையும் பெற்றார். அவர்கள் அடிக்கடி சந்தித்துப் பல இலக்கியச் செய்திகளைப் பேசி மகிழ்வார்கள். 'அண்ட்'க்குப் பல இலக்கியவட்ட அன்பர்கள் இருந்தார்கள். அவர்கள் எல்லாரும் இளம் கவிஞருக்கு நண்பர்களாக மாறினார்கள். கவிஞர்கள், எழுத்தாளர்கள், அரசியல் வாதிகள், ஓவியர்கள், வாசகர்கள் இவ்வாறு எத்தனையோ பேர்கள் புது நண்பர்களாகக் கிடைத்தார்கள். அவர்கள் பழக்கம் ஆர்வத்தை உண்டாக்கி மேலும் பல கவிதைகளை எழுதத் தூண்டியது.

அண்ட், தன்னுடைய பத்திரிக்கையில் 'சோனட்ஸ்' என்ற உயர் வகையான கவிதைகளை எழுதி வந்தார்: அவைகளைப் படித்த 'கீட்ஸ்' மகிழ்ந்து தானும் அவ்வாறே எழுதத்தொடங்கினார். அவ்வாறு எழுதிய கவிதைகளையும், முன்பு எழுதிய கவிதைகளையும் தொகுத்து 'கவிதைகள்' என்ற தலைப்பில் 'Poems' by John Keats (in March 1817) வெளியிட்டார். நிறையப்பேர் அதனை வாங்கவில்லை என்றுதான் கூற வேண்டும். விமர்சனமும் அதிகம் எழுதவில்லை. ஆனால் 'அண்ட்' தன்னுடைய பத்திரிகையில் மிக நீளமான நல்ல திறனாய்வொன்றை எழுதினார். ஆங்கில இலக்கியத்தின் மறுமலர்ச்சிக் கவிதைகள் என்று புகழ்ந்து பாராட்டினார். அவருடைய முதல் புத்தகம் பெரிதாக இல்லாவிட்டாலும் புதிய காலத்தின் பொற்கதிராகவும், கற்கனைக் கருவூலமாகவும் இயற்கையின் எழில் நிறைந்ததாகவும் விளங்கியது: இப்புத்தகத்தின் மூலமாகப் பல நண்பர்கள்கிடைத்தார்கள். அவர்கள் 'கீட்சி'ன் திறனைப் புகழ்ந்தும் போற்றியும் வந்தார்கள். அவர்கள் பழக்கத்தின் மூலமாக மிகவும் ஊக்கம் பெற்று, கிரேக்க இதிகாசங்களிலிருந்து ஒரு கதையை எடுத்து 'எண்டைய்மியன்' (Endymion) என்ற தலைப்பில் ஒரு நூலைப் படைத்தார். இது நூலாக வெளி வந்ததும் உண்மையில் சிலர் உளம் கனிந்து பாராட்டினார்கள். இதிகாச அறிஞர் (T.C. Peacock) 'பீக்காக்' இதனைப் பாராட்டியது மிகவும் சிறப்பான செய்தியாகும். மெல்ல மெல்ல இவர் புகழ் பரவத் தொடங்கியது என்று சொல்ல வேண்டும்.

சிறிது காலம் லண்டன் மா நகரைவிட்டு வெளியே சென்று பல கவிதைகள் எழுத வேண்டும் என்று எண்ணினார். ஆஃஸ் போர்டுக்குச் சென்று சிறிதுகாலம் தங்கினார். 'எண்டைய்மியனி'ன் அடுத்த புத்தகத்தின் கவிதைகளை எழுதினார். இப்போது 'கீட்சின்' கவிதைகள் மிகவும் முதிர்ந்த நிலையை அடைந்தன. தான் சொல்ல நினைத்ததை அழகாகவும் அற்புதமாகவும் கவிதைகளில் சொன்னார். இருந்தாலும் பொருமை பிடித்தவர்கள் இவர் கவிதைகளைப் போற்றவில்லை. கோபமாக விமர்சனம் எழுதிக்கொண்டிருந்தார்கள். இதனால் மனம் சற்றுவாடியது. இந்த நேரத்தில் தான் அவருடைய தம்பி 'தாம்' இறந்து விட்டார். 'ஜார்ஜ்' என்ற இளைய தம்பியும் அமெரிக்காவில் குடியேறி விட்டார். இதனால் 'கீட்ஸ்' தனிமையாக விடப்பட்டார்.

இந்தச் சமயத்தில் தான் ஒரு பெரிய அதிர்ச்சி உண்டாயிற்று. 'ஸ்காட்லேண்ட்'க்கு (Scotland) கால் நடையாகப் பயணம் செய்செய்தார். 'ஸ்காட்லேண்ட்' மிகுந்த இயற்கை எழில் நிறைந்த நாடு ஆகும். இளைஞர்கள் சிலர் கூடி இயற்கைக் காட்சிகளைக் கண்டு சுவைப்பதற்காகவே கால்

நடையாகப் போகும் பழக்கம் அந்தக் காலத்தில் உண்டு. அதன் பயனாக உடல் நோய் வாய்ப்பட்டார். மருத்துவர்கள் சிறிது காலம் ஓய்வு எடுக்குமாறு சொன்னார்கள். அதற்காகவே திருமதி'பிரொவன்'(Mrs Brawne) வீட்டில் குடி போனார். அங்கே அவருடைய வாழ்க்கையின் முக்கியமான நிகழ்ச்சி காத்துக் கொண்டிருந்தது. அந்த அம்மையாரின் அருமை மகள் 'ஃபெனி பிரொவன்' (Fanny Brawne) மூலமாக அது நிகழ்ந்தது. அதன் தன்மையையும், ஏற்றத்தையும், தாழ்வையும்தான் முதலில் பார்த்தோம். அழகாகவும், துடிப்பாகவும், கவர்ச்சியாகவும் இருந்த அந்தப் பெண்ணைக் காதலித்தார். மிகவும் ஆழமாகக் காதலித்தார். கீட்ஸின் உள்ளத்தில் அவள் இடம் பெற்றது போல அவள் உள்ளத்தில் கீட்ஸ் இடம் பெறவில்லை என்றுதான் கூற வேண்டும். கவிஞரின் பொருளாதார நிலையைக் கண்டும், இன்னும் சில காரணத்தாலும் கீட்ஸின் காதலை ஒதுக்கி விட்டாள் அவள். ஒதுக்கியதின் விளைவைத்தான் முதலில் விரிவாகப் பார்த்தோம்.

முதலில் தன்னைக் காதலிக்க வழி வகுத்து விட்டுப் பிறகு சொந்த விருப்பு வெறுப்புக்கு உள்ளாகி, அதற்கு அப்பால் வேறு ஒருவனுக்கு மனைவியாக வாழ்க்கைப்பட்டுவிட்ட அவளை எண்ணி கீட்சின் மனம் நொந்து போயிற்று. மேலும் உடல் மோசமாகப் போனதால் அவரை ரோமுக்குப் போகும்படி மருத்துவர்கள் சொன்னார்கள். 'சேவரன்' (Severn) என்ற இளம் ஓவியர் துணையுடன் ரோமுக்குச் சென்றார். அங்குச் சென்று தன் காதல் தன்மையை மற்ற பொருள்களின் மேல் ஏற்றிக் கவிதைகளாகப் பாடினார். மிகவும் உருக்கமான

**இலக்கியச் சிறப்பு**

**எந்த இலக்கியமானாலும் அதன் கருத்தை—அது தரும் பாடத்தைப் பேசுதலையை—நல்லறிவைப் பொறுத்துத் தான் அதன் சிறப்பு—அதனது தேவை அமையும்—அமைந்துவிட முடியும்!**

**—பேரறிஞர் அண்ணா**

---

உயர் ஓவியங்களாக இன்று இலக்கிய உலகில் உயிர்த் துடிப்பாய் அக் கவிதைகள் விளங்குகின்றன. ஒருகால் இவர் கவிதைகளைப் படித்தோ அல்லது பழக்கத்தினாலோ அந்தப்பெண் கீட்ஸ்க்கு சில கடிதங்கள் எழுதியதாகத் தெரிகிறது. அதாவது ரோமில் கவிஞர் இருக்கும்போது எழுதியிருக்க வேண்டும். அந்த உடைந்த உள்ளம் கொண்ட கவிஞன் என்ன நினைத்தானோ தெரியவில்லை. அவன் நெஞ்சு எப்படியெல்லாம் துடித்ததோ தெரியாது. உறங்காத இரவுகளும் ஊமைக் கண்ணீர் விட்ட பகல்களும் அவன் குருதியைச் சொட்டு சொட்டாகக் குடித்துக் கொண்டிருந்த நேரத்தில் எவ்வாறுது நடந்து கொண்டான் என்றால் - ஒரு ஆங்கில இலக்கிய வரலாற்று ஆசிரியர் கூறியதைக் கொண்டு முடிகிறேன். "கீட்ஸ் இறக்கும் போது *(23-2-1821)* அவன் அருகில் தன்னுடைய அருமைக் காதலி எழுதிய கடிதங்கள் உடைத்துக் கூடப் பார்க்காமல் அப்படியே கிடைந்தன. அவை அவனிடம் கிடைத்தது முதல் அவன் உயிர் அவனை விட்டுப் போகும் வரை வந்தது போலவே-உடைத்து பார்க்கப் படாமலே அவன் அருகில் கிடந்தன."

# காவலர் இல்லத்தில்

இது ஓர் உண்மை நிகழ்ச்சி. சில ஆண்டுகளுக்கு முன் செய்தி இதழ்களிலே வந்த ஒரு நிகழ்ச்சிக்குக் கவிதை வடிவங் கொடுத்திருக்கிறேன். ஊரும் பெயர்களுமே மாறியுள.

— ஆசிரியர் -

**காத்திருந்தாள் காத்திருந்தாள் சோலையிலே**

தென்றல் வரக்கண்டு தேன்கொண்ட பூவினங்கள்
நின்று தலையாட்டி நீண்டசுகம் கண்டிருக்கும்;

வண்டுவந்து கூடி மகரயாழ் மீட்டிநின்று
கொண்ட நலம்பாடிக் கொண்டிருக்கும்; பக்கத்து

நின்று வளர்ந்துகனி நீட்டும் மரங்களிலே
சென்றிருந்து பச்சைக் கிளிகள் பழம்பருப்புத்

தின்று பறந்திருக்கத் தேனை நல்லிசையை
வென்று குயில்பாடும் வேளையொரு சோலையிலே

அந்திப் பொழுதுமணி ஐந்துக்(கு) அமுதவல்லி
குந்தி யிருந்தாள், குறுகுறுக்கும் நெஞ்சுடனே!

நாடோறும் எப்படியோ நானும் பறந்துவந்தே
ஏடுகொண்டு மெல்லமெல்ல இங்குவரும் காதலரைத்

தேடிவழி பார்த்திருப்பேன்; செல்லத் துரையவரோ
ஓடிவரக் கண்டதில்லை; ஓர்நாளும் முந்திவரக்

கண்டதில்லை; நானேதான் காத்திருக்க நேர்ந்ததுவே
கண்டுவிட வேண்டுமவர் காதல்உளம் கொண்டவரா

என்பதனை என்றே எழுந்தங்கே நின்றசெடிப்
பின்போய் ஒளிந்திருந்தாள்; பெண்ணாள் அமுதவல்லி!

செங்கதிரோன் மாலைச் சிவப்பேறிக் கொண்டிருந்தான்
எங்கெங்கோ சென்ற பறவை யினமெல்லாம்

கூடிப் பறந்தனவாம்; கூடுகளைத் தேடினவாம்;
தேடிவந்தான் அவ்வேளை; தேன்மலரை யொத்தாளைக்

காணமல் காத்திருந்தான்; கண்ணிரண்டும் பூத்திருந்தான்!
வீணாக நெஞ்சுக்கு வேலை கொடுத்திருந்தான்!

பாணன் இசைபோற் பயிலும் மொழியுடையாள்
காணக் கிடைக்காத கல்வயிரப் புன்னகையாள்

தேடிவந்து காத்திருக்கும் சிற்பச் சிலையனையாள்
ஓடிவந்து காத்திருக்கும் உள்ளத் துயிரனையாள்

பூங்கொடிபோல் மேனிப் புதுமை யழகுடையாள்
தீங்கனிபோல் பேசித் தினமும் மயக்கிடுவாள்

ஆசைக் குரிய அமுதவல்லி என்னுளத்துப்
பூசைக் குரிய பொருளாவாள் என்றும்

நிலைத்த வடிவாகி நெஞ்சில் இருப்பாள்
மலைத்தேன் சுவையை வடிக்கும் இதழுடையாள்

கன்னக் கதுப்பிலே கைவைத்தால் நெய்மணக்கும்
மின்னும் விழிப்பார்வை மேலும் வெறிகூட்டும்

தோளைப் பிடித்துவிட்டால் காதல் துடிப்பேறும்
தாளை மலர்போலே தாங்கிப் பிடித்தாலும்

நெஞ்சு களிகூரும்; நித்தம் மடிக்கிடந்து
கொஞ்சும் கிளியெங்கே; கூடும் உயிரெங்கே

இன்றேன் வரவில்லை? என்ன நடந்ததுவோ
என்றேங்கி யேங்கி யிருந்தான் மணியன்!

**சந்தித்தார்; சிந்தை மறந்தார்**

பிணையதனைக் காணமல் பேதலிக்கும் மான்போல்
துணையைப் பிரிந்து துடிக்கும் புறப்போலே

காத்துக் கவன்றிருக்கும் கட்டழகன் பின்வந்து
பூத்த மலர்க்கண்ணைப் பொன்னின் தளிர்போன்ற

கைகளினல் மூடிக் களித்தாள் அமுதவல்லி.
ஐயையோ வென்றே அலறி விடுவித்துப்

பின்னல் திரும்பினன்; பேச்சுக்கு வேலையில்லை!
தன்னெஞ்சை யூடுருவித் தாம்செல்லும் அம்பிரண்டு

கண்டான்! அவளுந்தான் கண்டாள்! இணையிரண்டு
கண்களுமே ஒன்றுய்க் கலந்திருந்த காட்சியிலே

மண்ணுலக மில்லை; மலர்க்கொடிகள் தாமில்லை;
எண்ணக் கவலைகள் ஏதுமில்லை; சுற்றத்

தடையில்லை; பெற்றோர் தருங்கொடுமை இல்லை;
இடைவெளியைத் தாண்டி இணையும் விழிகளுடன்

ஒன்றுய்க் கலந்திருந்த உள்ளம் தவிர்த்தங்கே
நின்று நிலைத்ததொன்று நீள்புவியை வாழவைக்கும்

காதல் அதுவே! களிக்கும் நிலையதுவே!
மோதும் இரண்டுளங்கள் முட்டப் பிறக்குமொளி!

சேரும் இரண்டுளங்கள் சிந்துகின்ற முத்தமது!
கூடும் இரண்டுயிர்கள் கொட்டும் வயிரமது!

கட்டுண்ணும் ஈருயிர்கள் காணுகின்ற தேனமுதம்!
விட்டுப் பிரியாதார் மேவுகின்ற பேரின்பம்!

காதல் அதுவே! களிக்கும் நிலையதுவே!
மாதமுத வல்லி மணியன் இருவருமே

நின்றார் நெடுநேரம் வேறு நினைப்பின்றி
குன்றனைய தோளானைக் கோபித்துக் கேட்டுவிட

எண்ணி யிருந்ததெலாம் ஏந்திழையாள் தான்மறந்தாள்
கண்ணுக்குக் கண்ணான காதலனைக் கண்டுவிட்டால்

பேசிக் களிப்பதல்லால் ஏசிப் பிரிவதுண்டோ?
வாசிக்கும் புத்தகத்தை வாங்கி நெருப்பினிலே

போட்டுக் கொளுத்துவதோ? பூவெடுத்துக் கொண்டையிலே
சூட்டாமல் கல்லின்மேல் தூவிக் கெடுப்பதுவோ?

குந்திக் குரலெடுத்துக் கூட்டமுதப் பாட்டிசையைச்
சந்தப் படிபாடித் தண்டமிழின் இன்பத்தைக்

காணுமல் கத்திக் கசப்படையச் செய்வதுவோ?
ஆணழக னோடன்பால் ஆசைக் கதைபேசி

வாழ்வின்பம் காணுமல், வந்தவனைத் தான்சினந்து
பாழ்படுத்த லாமோ? பதைக்கப் புரிவதுவோ?

இவ்வாறு வேறுநினைப் பேதும் மறந்தவராய்க்
கவ்வும் இணைக்கண்ணில் காதல் ஒளிபெருக்கி

நின்றிருந்த போது நிலவும் அமைதியினைக்
கொன்றந்தச் சேயிழையாள் கூறத் தொடங்கினாள்.

**சிந்தித்தாள்; தெரிவித்தாள்**

அத்தான்! மணியத்தான்! அன்பான என்னத்தான்!
எத்தனைநாள் நாமும் இருந்திடுவோ மிவ்வாறே!

கூடிச் சிரித்திருப்போம், கொஞ்சும் இருட்டிவிட்டால்
வாடிப் பிரிந்திடுவோம், வாழ்க்கை தொடங்கவில்லை

எத்தனைநாள் அத்தான் இனிப்பொறுக்க மாட்டேன்நான்
சித்தந் துடித்தந்தச் சேயிழையாள் சொன்னதற்கே

அன்புடையாய் என்றன் அமுதவல்லிப் பெண்ணேநாம்
இன்பத் திருமணத்தை ஏற்றுக் குடித்தனத்தைச்

செய்யத் துடிக்கின்றாய் செந்தா மரைமுகத்தாய்
மெய்யாய் உரைக்கின்றேன், மேற்படிப்புத் தேர்வினிலே

வெற்றியுற்ற பின்னே விழைகின்றேன் இல்லறத்தைப்
பற்றுவிட்டேன் என்று பதைக்காதே! உன்னை

அடையத் துடித்தாலும் என்றன் அறிவால்
மடைப்பெருக்காம் அன்பை மறைத்துவைத்து வாழ்கின்றேன்!

கல்வி முடிந்தவுடன் கட்டழகி தோள்களிலே
நல்ல மலர்மாலை நாடும் மணமாலை



பேரட்டுக் களிப்படைவேன் பொன்னுன வாழ்க்கையிலே
கூட்டும் பொருளெல்லாம் கொண்டுவந்து சேர்த்திடுவேன்

கண்ணல்ல கட்டிக் கரும்பல்ல தண்டமிழின்
பண்ணல்ல முத்தம் பதித்துவிடு என்றுரைத்தான்.

**திரைப்படத்திற்கு அழைத்தாள் தேனனையாள்**

முத்தமிருக் கட்டும் முடிவும் இருக்கட்டும்
இத்தினத்தில் உள்ளத் தெழுந்த ஆசையினைக்

கூறுகின்றேன் அன்பரே கூறி விடுகின்றேன்
மீறிப் பதிலுரைக்க வேண்டாம்நான் வேண்டுகின்றேன்.

இன்று திரைப்படத்திற் கென்னை உடன்அழைத்துச்
சென்றுவர வேண்டும்; சிறியாள் விருப்பமிது !

நாட்டிலுள்ள பெண்களெல்லாம் நாயகரின் கைகோர்த்துக்
கூட்டுப் பறவைகள்போல் கூடித் திரைப்படங்கள்

கண்டுவரும் காட்சியினைக் கண்டேன் மனத்தினுள்ளே
கொண்டுவிட்ட ஆசையிது கூட்டிச்செல் வீரா

மறுக்காமல் சொல்வீர் மனவிருப்பம் தன்னை
நறுக்காமல் சொல்வீரே நல்ல முடிவுரைப்பீர்

என்றுருகிக் கேட்டாள் இளைஞன் மனங்கசிந்தான்
என்றாலும் சொல்லுகின்ருன் என்றன் அமுதவல்லிப்

பெண்ணே உனதருமைப் பெற்ருேருங் காணுமல்
எண்ணம் பதைத்திடுவார் எங்கெங்கும் தேடிடுவார்

கண்ணுக்குக் கண்ணுய் வளர்த்தவர்கள் பூத்திருக்கும்
வண்ண மலரை வடிவழகி யுன்னைத்தாம்

சற்றுப் பிரிந்தாலும் சஞ்சலமே கொண்டிடுவார்
சுற்றத்தார் பக்கத்தார் சூழ்ந்து பழித்திடுவார்

நெஞ்சு கலந்துவிட்டோம் நேரிழையே என்ருலும்
துஞ்சு மணமாலே சூடுவதன் முன்ஞலே

ஆசைகளைக் கொஞ்சம் அடக்கி யிருப்பாயே
மாசற்ருள் என்றபெயர் மாரு திருப்பாயே

என்று மணியன் இறைஞ்சினுன் அப்பெண்ணே
நின்ருள் விழியிரண்டும் நீர்சொரியத் தாமரைதான்

கூம்பிக் கருத்ததுபோல் கொள்ளை யழகுமுகம்
தேம்பி யழுது சிலசொல் லுரைக்கின்ருள்.

அத்தானே அத்தான்என் ஆசை யடக்குதற்கே
எத்தாலும் பேசி எனேத்தடுக்கக் கற்றீரே !

அன்பு மனமிருந்தால் ஆசை யடைந்தவனே
இன்பப் படுத்தாமல் எத்தனையோ காரணங்கள்

சொல்லித் தடுப்பதுண்டோ ? சூழ்ச்சியெலாம் நானறிந்தேன்
செல்லத் துரையேநீர் சென்றிடலாம் என்றுரைத்தாள் !

வெட்டும் விழியூறி வீழுங்கண் ணீருருவி
பட்டிதழின் கன்னத்தில் பாய்ந்துவரக் கண்டானே

காதல் துடிப்புணர்த்தும் கட்டழகி நெஞ்சிரண்டும்
மோதும் அலைபோலே முன்னேக்கிப் பின்வீழ்ந்தே

ஆடிக் கவலையுறும் அந்தநிலை கண்டானே
சூடி யிருந்த மலர்சிரிக்கத் தோகையவள்

வாடும் மலர்முகத்தைக் கண்டானே நெஞ்சத்தில்
ஓடிவரும் காதல் உணர்ச்சியினல் மாதவளைத்

தொட்டு முகந்திருப்பித் தோளில் அணைத்தபடி
கட்டழகே என்னன்பே கண்ணீர் நிறுத்திவிடு

பேசும் படங்காணப் பெண்ணேநீ இப்பொழுதே
வா, சிரிப்பாய் ! என்றுரைத்து வண்ண மலர்முகத்தின்

நீரைத் துடைத்துவிட்டான் ! நெஞ்சங் களித்தவளும்
தோளைப் பிடித்துத் தொடர்ந்து நடந்தாளே !

**படங்கண்டாள்; காதல் மடங்கொண்டாள்.**

புத்தம் புதுவயிரம் போல்மின்னும் புன்னகையின்
முத்துப்பல் காட்டி முழுதுஞ் சிரிக்காமல்

அண்ணல்கை கோர்த்தே அழகு மயில்போலே
பெண்மானேர் காளையுடன் பேசி நடப்பதுபோல்

சிங்கம் நடந்துவரச் சிற்றன்னம் தொடர்ந்துவரும்
இங்கிதம்போல் தானும் இணைந்து நடந்தாள் !

படத்தில் வருங்காதல் பார்க்கும் பொழுதில்
மடப்பெண் அவள்செய்த மட்டற்ற செய்கையெலாம்

ஈண்டுரைத்தால் காதல் இலக்கியத்திற் காகாதாம்,
தீண்டும் இரண்டுயிர்கள் தேர்ந்தநல் லின்பத்தைப்

பாரறியக் கூறுவது பச்சை மொழியாகும்
ஊரறியக் கூறல் உயர்ந்த செயலல்ல

சற்றுக் குறிப்பிட்டால் சார்ந்தபொருள் கற்பனையால்
பெற்றுக் களித்தல் பெரியோர் கடனாகும் !

பேசும் படமுடியப் பெண்ணமுத வல்லியுடன்
பேசி நடந்துவந்தான்; பீடு நடையுடையான்.

பாட்டுச் சிறப்பும் படத்தில் நடித்தபெண்கள்
கூட்டும் உணர்ச்சியையும் கோதை மதிப்பிட்டாள் !

சண்டையிட்ட நாயகனின் சாதுரியத் தைமெச்சிப்
பண்டைமன்னர் போல்நடித்த பாங்கும் அவள்புகழ்ந்தாள் !

நாயகியாய் வந்தாள் நடிப்பில் வெளிப்பட்ட
தூய்தான காதல் துடிப்பைப் புகழ்ந்துரைத்து

காதல் இலட்சியத்தைக் கைப்பிடித்து நாமிருவர்
வாழ்தல் விரைவினிலே வாராதோ என்றுரைப்பாள்.

கேட்டுவந்த கேள்விகளுக் கெல்லாம் இடமறிந்து
வாட்டம் அடையாமல் மாற்ற முரைத்துவந்தான்.

சாலை வழிநடந்து சஞ்சலந்தா னில்லாமல்
கோல நிலவொளியில் கூடியுரை யாடிவரும்

காதலரை ஐயுற்றுக் கண்வைத்துப் பின்தொடர்ந்த
சேதி யறிவானின் செய்கையினைத் தாமறியார்.

**காவலர் இல்லத்தில் காதலியின் தந்தை**

பொன்னை நிகர்த்தவளும் போர்ப்புலியை யொத்தவனும்
இன்னும் மணத்தால் இணையாத பேர்களென்று

தானுணர்ந்து காவல் தலைமையதி காரியிடம்
மீனின் விழியாளை மின்னற் கொடியாளைக்

காதல் மணியனுடன் காண நடத்திவந்தான்!
காதலியும் காதலனும் காவல் நிலையமுற்றார்!

மாலைப் பொழுதுமுதல் மங்கையினைக் காணமல்
வலை புரியாமல் வீற்றிருந்த பெற்றோரும்

காரிருளே சூழ்ந்துவரக் கண்டனரே யல்லாமல்
சேருமெழில் மாது திரும்பிவரக் காணவில்லை.

அன்னை மனங்கலங்கி; யாதும் புரியாமல்
என்னென்ன வோகேட்க ஏற்ற விடையின்றித்

தந்தை புறப்பட்டார்; தாம்கண்ட பேரையெல்லாம்
இந்த வழியில் எழிலான பெண்ணொருத்தி

செல்லக்கண் டீரோ! என் செல்வத்தைக் கண்டீரோ
சொல்லுமெனக் கேட்டுத் தொடர்ந்து வழிதேடிக்

காவல் நிலையத்தும் கால்வைத்து மேலேறித்
தாவி யதிகாரி தம்முன்னே போய்நின்றே

ஐயா பெரியவரே! அன்புடனே நான்பெற்ற
கொய்யாப் பழமனையாள் கொப்பு மலரனையாள்

பண்புடனே நான்வளர்த்த பச்சைக் கிளியனையாள்
கண்ணின் மறையாமல் காவலிட்டுக் காத்திருந்த

பூத்த மலர்ப்பாவை போனவள்தாள் மாலையிலே
காத்திருந்து காத்திருந்து கண்ணிரண்டும் பூத்தனவே!

தேடி யலைந்தென்றன் செருப்புகளும் தேய்ந்தனவே!
ஓடிவிடு வாளென் றுரைப்பதற்கோர் காரணமும்

இல்லைஅவள் விருப்பம் ஏதும் மறுத்ததில்லை.
நல்லொழுக்கம் அன்பு நடத்தையிலே கோணுமை

கொண்ட குலக்கொடியை கொத்தும் பருவத்தைக்
கண்ட பழக்குலையைக் காணவில்லை; யாரேனும்

மின்னும் விழியாளை வீதி வழிமறித்துச்
சென்றிருக்க லாமென்று சிந்தை கலங்குதையா !

வாழ்க்கை நடத்த வரும்பருவம் கண்டதுமே
தாழ்க்கா தொருவன்கைத் தாலிக்குப் பெண்ணிவளின்

சந்தனத்துச் செங்கழுத்தைத் தத்தமிட்டு வைத்திருந்தால்
இந்தத் துயரமில்லை; இப்பொழுதே எப்படியும்

தேடிப் பிடித்துவந்தால் செய்நன்றி நான்மறவேன்
கூடிக் களித்திருக்கக் கோதைக்கோர் நாயகனைப்

பார்த்து மணமுடித்துப் பாரம் ஒழித்திடுவேன்
வார்த்தைபல சொல்லி வளர்த்துவிட்டேன் மன்னிப்பீர்.

பேரும் மலையப்பன்; பெற்றெடுத்த தந்தையென்றன்
ஊரும் திருவரங்கம்; ஓடிநான் தேடுகின்ற

பெண்ணும் அமுதவல்லி ஐயா பெருமனது
பண்ணி யவளைப் பலவிடத்தும் தேடி

அழைத்துவர வேண்டுகின்றேன்; அன்பு மனைவி
பிழைத்திருக்க வேண்டுமெனில் பெண்திரும்ப வேண்டுமையா !

என்று பலப்பலவாய் ஏங்கி மலையப்பர்
கன்றிழந்த தாய்ப்பசுவாய்க் காவல் நிலையத்தில்

நின்று புலம்புகையில் நீர்விழியில் ஊற்றெடுக்க
ஒன்றும் புரியாமல் உட்கார்ந்து விட்டவரைக்

கண்டும் அதிகாரி கண்கலக்கம் கொள்ளாமல்
தொண்டு கருத்தாகித் துள்ளிச் சலாமிட்டு

நின்று பணிகேட்கும் நேர்மையுள்ள காவலரில்
நன்றொருவர் தம்மை வரவழைத்துக் காணுத

பெண்ணின் அடையாளம் பிழையாமல் கூறியவள்
வண்ண உடைக்குறிப்பும் வந்திருந்த தந்தையினைக்

**பருவமழைபோல் பாவை வந்தாள்**

கேட்டுக் கிளத்தியெங்கும் தேடிவரத் தாம்பணித்தார்.
வாட்டமுற்ற நெல்லுக்கு வாய்க்காலில் தண்ணீரைப்

பாய்ச்சும் வழியாயும் போதில் பருவமழை
வாய்ந்த நிலைபோல வந்தாள் அமுதவல்லி!

காதல் மணியனுந்தான் காதலியின் பின்வந்தான்
சேதி யறிவோனும் சேர்ந்தங் கதிகாரி

மூன்னே வணக்கம் மொழிந்துவிட்டுக் காதலரைத
தன்னே டழைத்துவந்த காரணத்தைச் சாற்றிநின்ருன்.

எண்ணுத போதில் எதிர்நிற்குந் தந்தையினைக்
கண்ணுலே கண்ட அமுதவல்லி மெய்மறந்தே

அப்பா!வென் ருேடி அவர்தோளிற் சாய்ந்தாளே!
எப்பாலுந் தேடி யெதிர்பார்க்கும் செல்வத்தைத்

தன்முன்னே கண்டெடுத்த தந்தையும்தான் இன்னமுதம்
அன்னவளைத் தாங்கி யகமகிழ்ச்சி கொண்டாரே!

என்ன வருமோ எதுவருமோ என்றேங்கி
நின்ற மணியனைத்தன் நேரில் அழைத்தந்த

காவல் அதிகாரி கண்ணில் சினம்காட்டி
யாவும் மனந்தெளியக் கேட்டறிந்தார்; அப்போதே

கொண்ட சினந்தாழ்ந்து கூடும் கருணையினுல்
செண்டுமணம் போலுறவு சேர்ந்தவிரு நெஞ்சுகளின்

அன்பின் திறமறிந்தார் ஆதரவு தான்காட்டி
இன்பம் வளர்த்துவிட எண்ணமிட்டார் அன்புளத்தால்.

**அதிகாரி சொன்ன அன்புவழி.**

தந்தை மலையப்பர் தம்மை யழைத்தருகே
சொந்தக் கருத்தொன்றைச் சொன்ஞர் அதிகாரி.

பெற்ற திருமகளின் பேரன்பைக் கொண்டவனுய்க்
கற்றவனுய் நல்ல கருத்துடைய பேர்வழியாய்ச்

சிந்தித்தே எந்தச் செயலும் புரிபவனுய்
சிந்தையிலே உம்பெண்ணைச் சேர்த்திருக்கும் காதலனுய்த்

தோன்றும் மணியன் துணையாஞல் உம்பெண்ணும்
ஆன்ற புலவர்களும் அன்புத் தமிழும்போல்

ஊன்றி மணவாழ்வில் ஒற்றுமையாய் வாழ்ந்திடுவார்.
மான்விழியார் அன்பு மனம்வைத்த காதலரைத்

தாம்பிரிய நேரிட்டால் தன்னந் தனியாகித்
தேம்பி யழுதுலகில் தேய்ந்தெலும்புக் கூடாகி

வாழ்வில் நடைபிணமாய் வாடித் திரிவதின்றி
மீளத் திருமணத்தால் மேன்மையுறக் கண்டதில்லை.

உள்ளம் பொருந்தி ஒருவனைத்தாம் கூடிவிட்டால்
வெள்ளம்போற் செல்வம்; விதவிதமாம் இன்பங்கள்

காட்டி யழைத்தாலும் கண்திருப்ப மாட்டார்கள்;
கூட்டுக் கிளிபோலக் கொண்டடைத்துத் தாலியினை

வேறெருவன் கட்டி, விரும்பிஎதிர் நின்றுலும்
மாறுபட்ட வாழ்வை மதித்துவிட மாட்டார்கள்.

கட்டாய மாய்த்தாலி கட்டு மணவாளனிடம்
பட்டாடை கட்டிப் பகட்டிச் சிரித்தாலும்

கற்பில் வழுவாத கன்னியருஞ் சிற்சிலரே
மற்றந்த வாழ்வும் மனமகிழ்ச்சி சேர்ப்பதில்லை.

காதல் உளத்துக் கணவனைத்தாம் கைப்பிடித்த
மாதர்க்குக் கற்பே மதிப்புடைய சொத்தாகும்

ஆதலினால் வாழ்வில் அவர்போல் களிப்பவர்கள்
மேதினியில் வேறில்லை; மேன்மை பிறிதில்லை.

உள்ளத்தில் பட்ட துரைத்தேன் பெரியவரே
தெள்ளத் தெளிந்தும் கருத்தைத் தெரிவித்தால்

காதலித்த நெஞ்சினரின் கண்ணில் மகிழ்ச்சியெனும்
சோதி பெருகிவரும் சுந்தரமாம் காட்சியினை

**எண்ணங்கள் ஒன்றின; இதயங்கள் வாழ்த்தின!**

இப்பொழுதே கண்டுவிட எண்ணுகிறேன் சொல்லுமென்றார்.
தப்பேது மில்லையே தங்கள் கருத்திலே

ஒப்புகின்றேன் ஒப்புகின்றேன் உண்மை நலஞ்சேர்க்கும்
இப்பொன் மொழிக்கோர் எதிர்ப்புண்டோ என்று

மலையப்பர் கூறி மனந்திறந்து விட்டார்;
தலைக்கொன்றாய் மாலை தருகவெனக் காவலர்க்கோர்

ஆணைபிறப் பித்தார் அதிகாரி மங்கை
நாணித் தலைகுனிய நம்பி மணியனவன்

வாழைமர மின்றி வளர்க்கும் நெருப்பின்றி
மேள முழக்கின்றி வேத மொழியின்றி

நெஞ்சில் நிறைந்திருக்கும் நீங்காத காதலொன்றே
எஞ்சி யிருக்க எழுந்தம் மலர்க்கொடிக்கே

பூமாலை சூட்டிநின்றான்; புன்முறுவல் காட்டிநின்றான்
தேன்மாலை யன்னோன் திருமார்பில் சூட்டிவிட்டுப்

பின்னும் தலைகுனிந்தாள் பெண்ணாள் அமுதவல்லி.
மின்னுமவள் கண்ணில் மிதந்துவரும் இன்பவொளி;

அன்பு மணியன் அரும்புமொரு புன்னகையால்
தன்பால் எழுந்த தனியின்பம் காட்டுனிலை;

கண்டு களித்திருந்தார் காவல் அதிகாரி.
வண்டு விழிமானும் வாடாத தாமரைச்செங்

கண்ணோனும் அன்னாரைக் கண்டு வணங்கிவரப்
பெண்ணோடும் மாப்பிள்ளை யோடும் மலையப்பர்

நன்றி யுரைத்து நடந்தார்; அதிகாரி
நின்றிருந்தார்; வாழ்த்துரைக்கும் நெஞ்சு!

# சிதம்பரம்

## மணிவாசகர் நூலகத்தின் சிறந்த வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| **கவி பாடலாம்** | | |
| | —கி. வா. ஜகந்நாதன் | 5 00 |
| **வீரர் உலகம்** | | |
| **இலக்கிய விளக்கம்** | | |
| | —டாக்டர் வ. சுப. மாணிக்கம் | 3 00 |
| **கம்பர்** | ,, | 4 00 |
| **நுண்கலைகள்** | | |
| | —மயிலை சீனிவேங்கடசாமி | 3 50 |
| **உலகப் பெருங் கவிஞர்கள்** | | |
| | — ப. கோதண்டராமன் | 4 50 |
| **இன்றைய சிந்தனைகள்** | | |
| | —டாக்டர் மு. ராசமாணிக்கம் | 7 50 |
| **உரையாசிரியர்கள்** | | |
| | — மு. வை. அரவிந்தன் | 15 00 |
| **இலக்கிய வரலாறு-5 தொகுதி** | | |
| | —மு. அருணாசலம் | 52 00 |
| **சங்க இலக்கியச் சொல்லடைவு-3 தொகுதி** | | 75 00 |

விரிவான விலைப்பட்டியலுக்கு:

# மணிவாசகர் நூலகம்

**12-B, மேற்கு சன்னதி**

**சிதம்பரம்.**



அச்சிடுபவர், வெளியிடுபவர், ஆசிரியர் : நாரா நாச்சியப்பன், நாவல் ஆர்ட் பிரிண்டர்ஸ், 202, ஜானி ஜான் கான் தெரு, சென்னை-14. — 600014 — தொலைபேசி எண் : 82731

Regd. No. M October. 1972


★ புத்தகங்கள்

★ பத்திரிகைகள்

★ மலர்கள்

மற்றும்

அச்சக வேலைகள்
அனைத்துக்கும்

# நாவல் ஆர்ட் பிரிண்டர்ஸ்

202, ஜானி ஜான்கான் தெரு,
சென்னை - 14.

Telephone : 82731 PIN Code No. 600014